590

சக்தி

மாத வெளியீடு

நார்வே

ஒஸ்லோ நகரில் ஒரு வீதி

சக்தி மலர் க.

லியோ டால்ஸ்டாய் எழுதிய

இனி நாம் செய்ய வேண்டுவது யாது?

(What then must we do?)

இப்புத்தகம் ருஷியப் பெரியார் லியோ டால்ஸ்டாயின் அனுபவக்களஞ்சியம். மக்கள் கவலையில்லாது வாழும் வகையை மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறார்.

காந்தியடிகள் தமது சுயசரிதத்தில் "டால்ஸ்டாயின் புத்தகங்களையும் கவனஞ் செலுத்திப் படிக்கத் தொடங்கினேன். 'சுவிசேஷங்களின் சாரம்' '**இனி நாம் செய்ய வேண்டுவது யாது?** முதலிய டால்ஸ்டாயின் புத்தகங்கள் என் மனதைப் பெரிதும் கவர்ந்தன," என்று எழுதி யிருக்கிறாரென்றால் இதன் பெருமை சொல்லாமலே தெரியும்.

இவ்வரிய நூலை ஸ்ரீ ரமண மகரிஷிகளின் பக்தரான ரா. விசுவநாதன் என்ற அறிஞர் அழகாக, எல்லாருக்கும் விளங்கும்படியாக, முதனூலே போல தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

விலை அணா 12. **தபாற் செலவு வேறு**

கிடைக்குமிடங்கள்:

அன்பு நிலயம்
ராமச்சந்திரபுரம், சிங்கப்பூர்,
அலோர் ஸ்டார், ஈப்போ.

சக்தி காரியாலயம்,
52, அரமனைக்காரத் தெரு,
சென்னை.

பொருளடக்கம்

குறத்தி சொன்ன குறி	சுவாமி சுத்தானந்த பாரதியார்	௧௪௫
இராமோபதேசம்	"திருஞானம்"	௧௪௬
விக்கிரம ஆண்டு	...	௧௪௭
கதரின் உதவியால் சுயராஜ்யம்	"காந்தியடிகள்"	௧௪௯
நமது நாடு	"முருகன்"	௧௫௦
பாரத சக்தி மஹாகாவியம்	சுவாமி சுத்தானந்த பாரதியார்	௧௫௫
வரகவி கோபாலகிருஷ்ண பாரதியார்	"ஞாயிறு"	௧௫௬
நாடோடி	ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸ், பி.ஏ.	௧௬௨
தீனபந்து ஆண்ட்ரூஸ்	"ரா. நா."	௧௬௭
கைலாச நிகண்டு சூளாமணி	இராவ்சாகிப் ஸ்ரீ எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.எ., பி.எல்.	௧௬௯
மஞ்சள்	...	௧௭௨
போர் நெருக்கடியைத் தீர்த்துவைக்க வழி	ஸ்ரீ எம். கே. அலெக்ஸாண்டர்	௧௭௫
பால்டிக் பிரதேசம்	ஸ்ரீ தோத்தாத்திரி ஐயங்கார், எம்.ஏ.	௧௭௬
காலத்தேர்	சுவாமி சுத்தானந்த பாரதியார்	௧௭௭
டென்மார்க்—நார்வே	ஸ்ரீ ஏ. கே. செட்டியார்	௧௮௫
பொருளின்றி இல்லறம் போலியுமா?	ஸ்ரீ கு. மதுரை முதலியார்	௧௮௮
திங்கள்	"தினகரன்"	௧௮௯
புதிய தமிழ் இலக்கணம்	...	௧௯௧

சந்தா விகிதம்

உள் நாடு

வருடச் சந்தா	....	ரூ. 3	8	0
6 மாதம்	....	„ 2	0	0
தனிப்பிரதி	....	„ 0	4	0

	பர்மா	மலேயா
வருடச் சந்தா	ரூ. 4 0 0	ரூ. 5 0 0
6 மாதம்	„ 2 4 0	„ 2 12 0
தனிப்பிரதி	„ 0 5 0	„ 0 6 0

மாதிரிப் பிரதி வேண்டுவோர் தபாற் செலவு சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

"சக்தி" மாத வெளியீடு

விளம்பர விகிதம்

அட்டை

2-வது பக்கம்	....	ரூ. 20
3 „	....	„ 20
4 „	....	„ 30

உட் பக்கங்கள்

1 பக்கம்	....	ரூ. 15
½ „	....	„ 7-8

மற்ற விளம்பர விவரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர், "சக்தி", 52, அரமனைக்காரத் தெரு, சென்னை.

ஸ்ரீ பழநி பஞ்சாமிர்தம்

தமிழர்கள் குலதெய்வமும் கலியுகப் பிரத்தியக்ஷ தெய்வமுமான ஸ்ரீ பழனி ஆண்டவர் அபிஷேக பஞ்சாமிர்த சந்தன விபூதி பிரசாதங்களடங்கிய செட் 1-க்கு ரூ. 3-8-0.

பக்தர்கள் நாமநக்ஷத்திரத்தால் விசேடமாக முறையே ஆண்டவர் பாதார விந்தத்தில் அர்ச்சனை ஆராதனை செய்து பிரசாதமனுப்ப ரூ. 1-0-0.

மாதக் கார்த்திகைதோறும் வருடக் கட்டளையாக அர்ச்சனை செய்து பிரசாதமனுப்ப ரூ. 7-0-0.

P. நடராஜ பண்டாரம்,

மலைக்கோவில்,

அயன் மிராஸ், பழனி. S. I.

ஸண்டே டைம்ஸ் பிராஸஸ் ஸ்டூடியோ

லைன் பிளாக்குகள்
ஆப்டோன் பிளாக்குகள்
நவீன முறைகளில்
செய்து தரப்படும்

வியாபாரிகளுக்கு சகாய
மாகவும் துரிதமாகவும்
சேவைகள் செய்யும்.

விவரங்களுக்கு :

மானேஜர், "**ஸண்டே டைம்ஸ்**", சென்னை.

போன் : 2678.

ஹிந்துஸ்தானில் — இன்ஷ்யூர் செய்யுங்கள் பிரதிநிதிகளா யிருங்கள்

இக்கம்பெனிக்குச் சமமான அனுபவம் வாய்ந்த
ஆபீஸுகளுக்குள் மிகப் பிரதானமான லைப் ஆபீஸ்

அபிவிருத்தியின் புள்ளி விவரங்கள்

புதிய வியாபாரம் (1938—39)	3	கோடி	14	லக்ஷத்திற்கு மேல்
அமுலில் இருக்கும் பாலிஸிகள்	16	,,	34	,,
ஆயுள் நிதி	2	,,	96	,,
மொத்த ஆஸ்தி	3	,,	36	,,

ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் இன்ஷூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

ஹெட் ஆபீஸ் :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
சுரேந்திரனாத் பானர்ஜி ரோட், கல்கத்தா.

மதராஸ் பிராஞ்சு :
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரண்மனைக்காரத் தெரு, மதராஸ்.

சக்தி

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

மலர் உ : இதழ் - ச
விக்கிரம - சித்திரை

குறத்தி சொன்ன குறி

தமிழ்த்தாய்

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

சங்கமிருந் துலகினிலே பொங்கிவந்த காலம்
சாய்ந்ததடீ என் அரசுந் தேய்ந்ததடீ வஞ்சி,
செங்குட்டுவன் நெடுஞ்செழியன் திருவளவன் முதலோர்,
சேனைகொண்டென் அரியணையை ஆண்மையுடன் காத்தார்.
இங்குவரும் அன்னியர்கள் என்னுயிரை மாய்த்தார்.
இன்னொருத்தி வந்துவிட்டாள் என்னசெய்கு வாளோ?
கொங்குமலர்க் கண்ணருவி கொட்டுகிறேன் காணாய்
குறியொன்று சொல்லடியோ காலக்குற வஞ்சி.

காலக்குறத்தி

நல்லகுறி சொல்லுகிறேன் கேளடியோ நங்காய்
நாடெல்லாம் உன்னருளைத் தேடிவரும் அம்மே,
சொல்லரசி, தொல்லரசி, தொழிலரசி யென்றே
துதித்துன்னை உலகமெல்லாம் மதிக்குமடீ தாயே!
எல்லையில்லா உன்கலைகள் எங்குமொளி பரப்பும்
எண்ணரிய கவிகளுன்னைப் பண்ணறியப் புகழ்வார்
இல்லையுனக் கொரு குறையும் வள்ளுவரை ஈன்றாய்!
என்வாய்ச்சொல் மகமாயி தன்வாய்ச்சொல் அம்மே!

காலையிலே கண்விழித்துங் கங்குலென்பார் உண்டோ?
கற்பகநன் னிழல்இருந்தும் கவலைகொள்வார் உண்டோ?
மூலையிலே ஒதுங்குவதேன் மும்மகுடச் செல்வீ!
முரசதிரத் தலைநிமிர்ந்துன் அரசுரிமை கொள்வாய்!
சோலையிலே குயிலிசைக்கத் தோகைமயில் ஆட
சொரியுதடீ தேனருவி அரியதமிழ் அம்மே!
வேலையிலே உன் கலங்கள் விரைந்திடநீ காண்பாய்
வியன்பெருகும் ஆங்கிலம்போற் செயம்பெறுவாய் அம்மே!

(முகப்புப் படம்)

அருட்சுடர்கள்

இராமோபதேசம்

(தீருஞானம்)

129. முள்ளில்லாத ரோஜா கிடையாது. கலப்பில்லாத நன்மை இந்த உலகில் இல்லை. முழு நலமாயிருப்பது பரம்பொருளொன்றேயாம்.

130. "தன்னுள் உள்ள இன்பத்தைக் காண்பது கடினம்; ஆனால் தன்னைத் தவிர வேறெங்கும் இன்பங் காண்பது முடியாத காரியம்" என்கிறார் ஷோபன்ஹார்.

131. பொன்னும் இரும்பும், பொன்னையும் இரும்பையும் வாங்கவே பயனாகும். இன்பம் இந்த ஜடப் பொருள்களைப் போன்றதன்று; அதை விலைக்கு வாங்கமுடியாது.

132. இந்த விஷயங்களிலேதான் இன்பமிருக்கிறதென்று நம்பிச் சென்றால் இன்பம் ஊர்க்காலி போலே விலகியோடும்.

133. ஒத்தவை கூடும்; கடவுளின்பத்தைப் பெறு; எல்லா வெற்றியின்பமும் தேடிவரும்.

134. இடைவிடாது தியாகம் செய்து வாழ்பவனே பாக்கியவான், சுகி.

135. ரோஜாத் தோட்டத்திலும், தேக்குத் தோப்பிலும் உயிர்க்கும் அருவான உயிரே ஆண் பெண் சமூகத்திலும் உயிர்ப்பதெனக் கண்டு, உலகை யெல்லாம் ஒரு விண் சோலையாகப் பாவிப்பவனே சுகி.

136. வீரியத்தையும், தேக சுகத்தையும் நரம்புக் குதிரைகள் வாழ்வுச் சுமையை எளிதாகத் தாங்க வேண்டுமானால், அகங்கார நினைப்பைத் தளர்த்திவிடு.

137. உனக்கு நீ உண்மையாயிரு; உலகில் மற்றெதையும் கருதாதே.

138. உள்ளே நோக்காமல், சுய நிர்ணயமில்லாமல், கேட்டதை யெல்லாம் நம்பி, நமது நினைப்பு பிறர் சொல்லைச் சார்ந்திருப்பதே உலகில் துக்கத்தின் முதன்மையான காரணமாகும்.

139. நண்பர் பகைவரிடமிருந்து வரும் கடுமையான கண்டனம், மனம் உனது கடவுளை நோக்கித் திரும்ப உன்னைத் தூண்டுவதாகும்.

140. மனிதா, சுவர்க்கம் உன்னுள் உள்ளது; இந்திரிய விஷயங்களில் இன்பந் தேடாதே; இன்பத்தை உன்னுள்ளே அடை!

141. விண்ணெல்லாம் உன்னுள்; எல்லா இன்ப மூலமும் உன்னுள் உள்ளது; இதுவே உண்மை; வேறிடத்தில் இன்பந் தேடுவது அறியாமை யாகும்.

142. மனிதன் தன் விதிக்குத் தானே தலைவன்.

143. உலகமெல்லாம் உனது சொந்தக் கற்பனை; அவ்வாறிருக்க உன்னையேன் கீழான துன்பப்பாபி என்றெண்ணுகிறாய்? அச்சமற்ற, சுதந்தர தெய்வ அவதாரம் என்றே உன்னை ஏன் நினைக்கக் கூடாது?

144. உனது சர்வாத்ம ஐக்யத்தினால் ஜயம் வரும் என்று இராமன் சொல்லுகிறான். உன்னிடமுள்ள நற்குணம், உனது தெய்வ சாயுஜ்யம்—இவற்றாலேயே வெற்றிவரும்; உறுதி.

145. எவனது ஆத்மப்பிரகாசம் தன்னைச் சுற்றியுள்ளவர் மேல் அழகுக்கதிர்களை வீசுகிறதோ, எவனிடமிருந்து தெய்வப்ரேமையே பிரகாசிக்கிறதோ அவனே சுதந்தர புருஷனாவான்.

146. ஆத்ம சுதந்தரனை உலகம் மரியாதை செய்து வணங்குகிறது. நான் சுதந்தரன்; நீயும் சுதந்தரன். இவ்வுண்மையை இன்றுலகம் போற்றினாலும் இல்லாவிட்டாலும் அது உண்மை; அதை எல்லாரும் ஒருநாள் அறிந்தே தீரவேண்டும்.

147. நீ உனக்கே பொறுப்பாளி; பிறருக்கல்லை; இதுவே அகமகிழ்விற்கும் அமைதிக்கும் இசைந்த புனித விதி; இதை மீறினால் நீ கொடிய குற்றவாளியாகிறாய்.

விக்கிரம ஆண்டு

விக்கிரம ஆண்டு வெற்றி முரசடித்து வருக! பிரமாதி ஆண்டு செய்த பிரமாதங்கள் புதிய ஆண்டையும் விடாதுபோலிருக்கின்றன. அவை மேற்கே உலகப்போரை எழுப்பிவிட்டன. செவ்வாய் பூமிக்கருகே வந்தது. குமுறிக்கொண்டிருந்த எரிமலை வெடித்துத் தீயுமிழ்கிறது. மண்வெறிபிடித்த இட்லர்கள் ஆகாசக்குண்டு போடுவதில் வியப்பில்லை. 'எல்லாரும் ஓர்குலம்' என்று பொதுவுடைமை பேசிய சோவியத் ரஷ்ஷியா நாசி இட்லருடன் கைகோத்துச் சிறுநாடுகளை அழிக்கப்புகுந்ததே கொடுமை; பொதுவுடைமைப்பூச்சு வெளிப்பட்டது. உலகைக் காப்பது லெனின் அன்று, ஸ்டாலின் அன்று, பணக்காரக் கொலைசெய்யும் இரத்தக் கொடியரசன்று; ஏழைகளைச் சித்திரவதை செய்யும் நாசிபாசித் தடியரசன்று. உலகில் ஒரு புதிய **அருளியக்கம்** தோன்ற வேண்டும். உலகம் அருளுடைமை யாகவேண்டும். மனிதனை மனிதன் நடமாடுங்கோயிலாக மதிக்கவேண்டும். அத்தகைய மனப்பான்மையும் இனப்பான்மையும் வந்தாலே உலகம் உய்யும் என்பது தெளிவானது. அத்தகைய அருளுடைமையைத் தரும் ஆற்றல் நமது தமிழுக்கும், தமிழன்னையின் தவத்திற்குமே உண்டென்பதை இந்த விக்கிரம வருஷத்தில் **சக்தி** விளக்குவாள்.

சீனத்தில் ஜப்பானியமறவர் செய்த கொடுமை கொடுமை, கொடுமை! ஜப்பான் மேனாட்டின் போலி. அருளுணர்ச்சியில்லாமல், சீவகாருண்யம் இல்லாமல் மேனாட்டு யந்திர நாகரிகத்தை மேற்கொள்வதன் பயனை அது விளக்கியது. சீனம் இன்று ஜப்பான் குண்டினால் அழியலாம். அங்கே ஜப்பானியர் ஏற்படுத்திய பொம்மையரசு சிலகாலம் பொம்மலாட்டம் ஆடலாம். ஆனால் 50 கோடி ஜனங்களைக் கொண்ட ஒரு பண்டை நாட்டை நீண்டகாலம் அடிமையாக வைத்திருக்கமுடியாது. ஜப்பான் தனது கருமபலனை ஒருநாள் அனுபவித்தே தீரும்.

இனி, நமது நாட்டைப் பார்ப்போம். உலக சமாதானத்தின் திறவுகோல் நமது அன்னை கையிலேதான் உள்ளது. ஆ! அந்தக் கைகள் கட்டுண்டிருக்கின்றன! கட்டை அவிழ்க்க ஒரு மஹான் முயல்கிறார். அவர் கையைத் தடுக்கச் சில கொடியர் புகுந்துள்ளனர். 'ஒற்றுமை ஒற்றுமை' என்று தாய் கதறுகிறாள். அன்னிய மோகமும் தன்னலப் பேயும் பிடித்த சிலர் நாம் ஒன்றுபடாதவாறு பிரிவினை செய்கின்றனர். அன்னியருக்கு அடிமையாயிருக்கும் இந்த நிலத்தில், இரண்டு கட்சிதான் இருக்கமுடியும். ஒன்று விடுதலைக்கட்சி, மற்றொன்று அடிமைக்கட்சி. காங்கிரஸ் ஒன்றே இப்போது நாட்டை விடுதலைக்கு நடத்தும் சக்திபெற்ற கட்சியாகும். அதற்குத் தலைமைவகிக்க மஹாத்மா முன்வந்ததே நல்லகாலம். காங்கிரஸிற்கு முட்டுக்கட்டை போடும் கட்சிகள் சில தோன்றியுள்ளன. ஒன்று மதாபிமானங்கொண்டு 'பிரி நாட்டை இரண்டாக' என்கிறது. மற்றொன்று 'இந்தியா இந்தியர்க்கே', 'என் சுயராஜ்யம் இந்து ராஜ்யமே' என்று முரசடிக்கிறது. இன்னொரு கட்சி சோவியத் ரஷ்ஷியாபோல் இரத்தக்கொடி உயர்த்த முயல்கிறது. மற்றொரு அவசரக்கட்சி இதம் பதம் பார்க்காமல் 'கிளம்பு சண்டைக்கு' என்கிறது. இவையெல்லாம் நீளப்பேசலாம்; அமைதியைக் கலக்கலாம்; பாமரஜனங்களைப் பேச்சால் மயக்கலாம்; சிறுசிறு கிளர்ச்சிகளை உண்டாக்கலாம். அச்சிலும் மேடையிலும் வீறுப்பு முழங்கலாம்; ஆனால் நமது நாட்டிற்கு உண்மையாகப் பணி செய்பவர் காந்தியடிகளே. அவர் கொண்ட கொள்கையே ஆயுதபலமில்லாத இந்த நாட்டிற்கும், உலகிற்குமே நலந்தருவதாகும். அதுவே நமது புண்ணிய நாட்டிற்கு இசைந்த இயக்கமாகும். பாரததேவியின் திருக்கரங்கள் எல்லாருக்கும் கருணையுடன் தனது செல்வத்தை அள்ளிக்கொடுக்கும். யாரையும் கொல்லாது, கொள்ளையடிக்காது. அவள் விடுதலையால் மிருகபலத்தினின்று உலகமே விடுதலைபெற வழியாகும். அன்பினாலும் தியாகத்தாலும் அஞ்சாத அமைதியாலுமே பாரததேவி விடுதலைபெற முயலுகிறாள். மஹாத்மா பாரதமாதாவின் இதயம். அவர் இயக்கமே பின்வரும் அருளியக்கத்திற்கு வழிதுலக்குகிறது. பிரமாதி ஆண்டு சத்தியாக்கிரகப்போருக்கு நாட்டைத் தயார் செய்தது. காங்கிரஸ் மந்திரிசபை பத்து மாகாணங்களை ஆண்ட சிறிது காலத்திற்குள் நமது நாட்டை அன்னியரைக்காட்டிலும் நாமே நன்றாக ஆளமுடியும் என்பது வெள்ளைக்காரருக்கும் விளங்கிவிட்டது. நமது மந்திரிகளை அதிலும் நமது தமிழர் திலகமான அரசியல்நிபுணரை வெள்ளைத் துரை

மாரே போற்றிப் புகழ்ந்தார்கள். இனி இந்தியர் இந்தியாவை ஆளத் திறமையற்றவர் என்று யாரும் சொல்லமுடியாது. பிரமாதி ஆண்டு இந்த உண்மையை விளக்கியது. பிறகு "சரிபோதும் பதவி; இதனால் கொண்ட காரியம் நிறைவேருது; வெளியேசென்று தீவிரமாகப்போர் புரியுங்கள்" என்று ஏவினள் தாய். கண்ணன்போலே மஹாத்மாவும் தூதுநடந்து நடந்து முடிவில் பாஞ்சஜன்யத்தைக் கையில் எடுத்தார்; போர்முழக்கினர்.

மேற்கே போர் மூண்டது. தரைவெடி, நீர்வெடி, ஆகாசவெடி, நீர்மூழ்கி, பயங்கரக்கப்பல்கள், டாங்குகள், காந்தக்கண்ணிகள் முதலிய கொடிய படைக்கலங்களுடன் யந்திரநாகரிகம் போர் போர் என்று பயங்கரமாக எழுந்தது. இட்லர் போர்க்காளியின் பூசாரியானர். முதலில் போலாந்தைப் பலியிட்டார். அதை இட்லரும் ஸ்டாலினும் பங்குபோட்டுக் கொண்டனர். பிறகு பின்லாந்திற்குப் பிடித்தது சனியன். அதுவும் துணிந்துபோராடியே ஸ்டாலின் குண்டிற்குப் பணிந்தது. பால்டிக் கடலில் சோவியத் ஆதிக்கம் பரவியுள்ளது. இங்கிலாந்து ஒப்பற்ற பயங்கரப் படைவலியுடன் விழித்திருக்கிறது. இட்லர் இப்புறமிருந்து ஆகாசக்கப்பலை ஒட்டி ஒட்டிப் பார்க்கிருர். பால்டிக்கிலிருந்து ரஷ்ஷியா என்ன செய்யுமோ விக்கிரம ஆண்டில் தெரியும். பிரெஞ்சுப்போர்முனையில் சண்டை தொடங்கியுள்ளது. மழினே அரண்போல பிரெஞ்சு ஆங்கிலப்படை பலமாக பிரான்ஸைக் காத்துவருகிறது. இச்சமயம் முஸ்ஸோலினி எந்தப்பக்கம் பாய்கிருரோ தெரியவில்லை. பால்கனிலும் அபாயம் சூழுறுகிறது. இங்கிலாந்தை ஆபத்துக்கள் சூழ்ந்து கொண்டிருக்கின்றன. அது இச்சமயம் இந்தியாவிற்குச் சுதந்தரமீந்து அதன் மனமார்ந்த ஆதரவைப் பெறுதல் நலமாகும்.

பாரததேசம் மஹாத்மாவின் தலைமையில் சத்தியாக்கிரகப் போர்செய்ய முனைந்திருக்கிறது. இப்போர் சுதந்தரக் கோயிலில் போய் முடியும் இறுதிப்போராகும். மேற்கே நடக்கும் மிருகபல அட்டூழியங்கள் தமது குற்றத்தை உணரவேண்டுமானல், உலக சமாதானம் நிலைபெறவேண்டுமானல், மஹாத்மாவின் சாத்விகப்போர், வெற்றி பெறவேண்டும்; பாரதமாதா பூரணசுதந்தரம் பெறவேண்டும்.

நமது நாட்டை, நமது பாரதத்தாயை இரண்டுகூறு செய்வதென்னும் கொடிய நினைப்பை ஜின்ன மனத்தைவிட்டு நீக்கவேண்டும். அப்படிச்செய்ய இந்துக்கள் பார்த்துக்கொண்டிருக்கமாட்டார்கள். அதிகாரவர்க்கத்திற்குஜின்னவின் போக்கு ஆனந்தமாயிருக்கிறது போலும். அதனலே தான் ஜெத்லாந்து பிரபு இந்து "முஸ்லிம் ஒற்றுமை யிருந்தாலொழிய இந்தியாவிற்கு எதும் செய்ய முடியாது" என்று கூறுகிருர். இது பாரத சமுதாயத்தின் கோரிக்கையைக் கேலி செய்வது போலிருக்கிறது. நமக்கு விடுதலை அளிப்பது இந்தப் பிரபுக்களல்லர். விடுதலை என்பது மனிதனுடன் பிறந்த இயற்கையுணர்ச்சி. பாரத சமுதாயம் விழித்துக்கொண்டது. இனி அநியாயங்களைப் பார்த்துக்கொண்டிராது. பாரத சக்திக்கனல் ஒவ்வொருவர் உள்ளத்திலும் பற்றிக்கொழுந்தேறுகிறது. பாரத தேசம் பாரத வீரரால், தன் முயற்சியால், விடுதலை அடையும் என்று பிரித்தாளும் பிரபுக்களுக்குச் சொல்லத் துணிகிருேம்.

நமது நாட்டில் இப்போது கிளர்ந்த மற்ருேர் இயக்கம் **இந்துமஹாசபை**. அதற்கு **வீர சவார்கார்** ஒரு புதிய வேகத்தைத் தந்திருக்கிருர். அவர் பேச்சில் குற்றம் இல்லை. அழுத்தம் திருத்தமாகச் சரியான ஆதாரங்களுடனே தான் பேசுகிருர். சவார்கார் உள்ளம் 1924-ம் ஆண்டிலேயே எமக்குத் தெரியும். சிவாஜி குரு கோவிந்தசிம்மன், பிரதாபசிம்மன் போன்ற வீர தீரரை மீண்டும் இந்து ஜாதியில் உண்டாக்க அவர் துடிதுடிக்கிருர். இந்து ஜாதி இன்று உடல்மெலிந்து எண்குறைந்து வந்தபேர் போனபேரெல்லாம் குதிரையேறும் நிலைமையில் இருக்கிறது....பரிதாபம். இந்துக்கள் சாதிமத வேறுபாடுகளால் பிரிந்திருக்கிருர்கள். ஆயிரக்கணக்கானபேர் தினம் மதம் மாறுகிருர்கள். இதைப் பற்றி சக்தியில் பலதடவை எழுதியுள்ளோம். அசட்டுத்தனமாக இனி நம்முள் அற்பவேறுபாடுகளைப் பெரிது பண்ணிச் சண்டைபோடாமல் இஸ்லாமியர் முழுதும் எப்படி ஒரே கூட்டமாக நிற்கிருர்களோ, ஒரு இஸ்லாமியனுக்குக் கேடு நேர்ந்தால் ஜாதி முழுதும் எப்படி உணர்ந்து எழுந்து எதிர்க்கிறதோ அதேபோல இந்துக்களும் தன்னுரிமையும் சுயமரியாதையும் கூட்டுணர்ச்சியும் கொண்டு எழுந்து நிற்கவேண்டும். சவார்கார் இதையே விரும்புகிருர். ஆனல் கால நிலையைக் கவனிக்காமல் அவர் மிகையாகப் பேசுகிருர். உதாரணமாக சாத்விக இயக்கத்தால் இப்போது நாடு ஒருவாறு முன்னேறியிருக்கிறது. காந்தியடிகளின் அஹிம்ஸையால் நாட்டைக் கோழையாக்கி மெலிவுறுத்திவிட்டதாக அவர் கருதுகிருர். மறுபடியும் ராணுவவேகம் நாட்டில் உண்டாக வேண்டுமென்கிருர். நியாயந்தான். நமது நாடு ஒரு நாள் **குண்டுக்குக்குண்டு** பதிற்

சொல்லும் ராணுவபலத்தைப் பெறவேண்டியதுதான். முதலில் கைக்கட்டவிழ்ந்தல்லவா துப்பாக்கி பிடிக்க வேண்டும். கட்டவிழு முன்பே 'எடு துப்பாக்கி' யென்றால் ஒரு பீரங்கி குண்டுதான் பதில் கிடைக்கும். சவார்கார் பேச்சு சிவாஜி காலத்தில் நடக்கலாம் அல்லது இன்னும் சில ஆண்டுகள் கழித்து நடக்கலாம். அப்போதும் இந்து முஸ்லிமைப் பிரித்துப்பேசும் பேச்சு நாட்டிற்கு அமைதியளிக்காது. இப்போதே இருவர் மனமும் கொதிப்பேறி யிருக்கிறது. என்ன நடக்குமோ.... ஈசனுக்கே வெளிச்சம். மற்றொரு புறம் போஸ் இதோ கிளம்பிவிட்டார்....நிதான புத்தியில்லாத படபடப்பின் பயனை அவசரவாதிகள் அடைந்து வருகிறார்கள்.

நமது நாட்டிற்கு அமைதியாக, நிலையாக நன்மை செய்வது மஹாத்மாவின் இயக்கமே.

தமிழகத்தில் தமிழுணர்ச்சி கொழுந்தேறுகிறது. மறுமலர்ச்சி நூல்கள் ஏராளமாக வந்து குவிகின்றன. வாலிபர்கள் புதிய உணர்ச்சியுடன் புதுத்துறைகளில் தமிழை வளர்த்து வருகிறார்கள். சங்கத் தமிழும் தழைத்தோங்குகிறது. தமிழ்ப் பத்திரிகைகள் அதிசயமான வெற்றி பெற்றுள்ளன. தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு வகையில் சிறந்து, சிறந்த தொண்டு செய்கிறது. நமது சக்தியும் தனக்கியன்ற தமிழ்ப்பணியையும் நாட்டூழியத்தையும் திருவருளுக்கே அர்ப்பணமாகச் செய்கிறது..

இறைவன் வெற்றி யருள்க!

ஓம் சுத்த சக்தி

கதரின் உதவியால் சுயராஜ்யம்

போராட்டத்துக்கான எல்லா ஏற்பாடுகளும் பூரணமாகச் செய்துவிட்டேன்; ஆனால் அவசரப்பட்டுப் போராட்டத்தை ஆரம்பிக்க நான் விரும்பவில்லை. இந்நாட்டுக்குக் கதர் மூலமே நான் சுதந்தரம் தேட விரும்புகிறேன். இந்தியர் எல்லோரும் கதர் அணிந்தால் போராட்டமின்றியே நான் சுயராஜ்யத்தைப் பெற்றுவிடுவேன். ஒவ்வொரு கிராமத்திலுள்ள குடிசையிலும் கதர் நுழைய வேண்டுமென்பது என் பிரார்த்தனை. அப்போதுதான் அந்நிய நாட்டு ஆடை இங்கிருந்து மறையும். கண்மூடித்தனமாக என்னைப் பின்பற்றுபவர்கள் எனக்கு வேண்டாம். கதரில் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்களே எனக்கு வேண்டும் கதரைப்பற்றி நினைக்க நினைக்க எனக்கு அதன் முக்கியம் அதிகமாகத் தெரிகிறது.

அகத்தியர் பேச்சு

நமது நாடு

(முருகன்)

என் அருமைக் குழந்தைகாள்,

அகஸ்டர், அகஸ்தியர் என்றறிந்ததும் முன்னர் வியந்தீர்கள்; பத்திரிகைகளில் வியப்புடன் எழுதினீர்கள். நான் ஏன் தொப்பி, கால் சராய் போட்டு உங்கள் முன் வந்தேன் தெரியுமா? கொஞ்சம் திறந்து பேசுகிறேன். தண்டு கமண்டலம், தாவடம், திருநீற்றுக்கோலம் பூண்டு "சாம்பசதாசிவ" என்று நான் சிவப்பழமாக வந்திருந்தால் "கட்டை மகேசுர பூசைக்குச் செல்லட்டும்" என்றனுப்புவீர்கள்; அல்லது "ஒரு பிடி அரிசி போட்டுத் தொலை" என்பீர்கள். காஷாயத்தைவிட பூட்ஸிற்கு நீங்கள் அதிக மதிப்பு வைத்திருந்தீர்கள்; காலம் அப்படித் தலைகீழாகத் திரும்பியது. நான் பல ஊர்களுக்குச் சென்று நமது நாட்டு நிலைமையைப் பார்த்தேன். எனது தொப்பிக்கு எங்கும் மரியாதை செலுத்தினர்; நம்மவருக்கு இன்னும் அன்னிய மோகம் போகவில்லை; நம்மிடமுள்ள அருட் செல்வம் புலனாகவில்லை.

தமிழ்—ஆரியம் இரண்டும் உலகின் அருளறிவுச் சுரங்கங்கள்; அவற்றிலுள்ள பொன்னையும் மணியையும் வெள்ளையர் அள்ளிச் செல்லுகிறார்கள்; நாம் ஆங்கில மொழிபெயர்ப்புகளைப் படித்துப் பெருமை பேசுகிறோம். நமது கலைச் சுரங்க வாசலிலேயே நாம் தூங்கி விழுந்து கொண்டிருக்கிறோம்; அங்கே காலத்திற்குதவாத குப்பைகளைக் குவித்து "இதுவே எங்கள் சாதி–சமயக் கொள்கை" என்று இறுமாக்கிறோம், சண்டை போடுகிறோம். இருப்பது 38 கோடி மக்கள். அவர்களுள் ஒருகோடி மக்களுக்குகூட "இது நமது நாடு; நாம் பிறநாடுகளைப் போலவே காலத்தை வென்று முன்னேற வேண்டும்" என்று தோன்றவில்லை. பெரும்பாலோர் வயிற்றிற்கே வாழுகின்றனர். ஒரு தொழிலிலேயே பலர் முட்டிக்கொண்டு மண்டை சிதறுகின்றனர். சீர்திருத்தக் கூச்சலெல்லாம் சமையற் பானையைச் சுற்றித்தான் கொதிக்கின்றன. பாமர மக்களுக்குக் கல்வி மணமில்லை; தமது ஊர் எல்லையைத் தாண்டி என்ன நடக்கிறதென்று தெரிவதில்லை. உழைப்பில்லை, பிழைப்பில்லை, உணவில்லை, சுகமில்லை. "இந்தியா, இந்தியான்னு ஒரு பட்டணமாம்; அதில் பெருவாரியான சனங்களாம்; அது ஏழு மலைக்கு வடக்கே யிருக்குதாம்; அதில் கும்பினிக்காரன் கொடி போட்டானும்; அதை இவுங்க பிடுங்கினுங்களாம். துரை கிட்ட இவுங்க பாச்சா பலிக்குமா? எல்லாரையும் செயிலே அடச்சுட்டானும். மூச்சு விட்டாச் சுட்டிடுவானும்" இந்த மாதிரி குக்கிராமங்களில் நமது மக்கள் பேசக்கேட்டேன். "நமது நாடு, நம்மவர்" என்ற உணர்ச்சி ஒவ்வொருவர் நெஞ்சிலும் பொங்க வேண்டும். அந்த உணர்ச்சித் தீ தருமாவேசங் கொண்டு காரிய சக்தியாக வீறோங்கிக் கல்வி, கலை, தொழில், வாணிபம், வீரம், நன்னெறி இவையனைத்தையும் வளர்க்க வேண்டும். ஆதலால், என்னருமைக் குழந்தைகாள் உங்களுக்கு முதலில் நமது நாட்டைப் பற்றிச் சொல்லுகிறேன்.

நாம் இந்தியர்; நமதுநாடு ஹிந்துஸ்தானம்; நமது நாட்டின் பொதுமொழி ஹிந்துஸ்தான். நாம் சிறப்பாகப் பேசுவது தமிழ்; நாம் பிழைக்கக் கற்பது ஆங்கிலம். முற்காலம் இந்நாடு முழுதும் திராவிடர் நிலமாயிருந்தது; அக்காலம் தமிழே நாட்டு மொழியாயிருந்தது. 5000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் உலகிற் சிறந்த நாகரிகராக விளங்கினர்; தமிழ் தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கியங்களுடன் செழித்தது. தமிழர் ஏன் எண் சிறுத்தனர்? தமிழ் ஏன் செல்வாக்கிழந்தது? இனித் தமிழும் தமிழரும் உலகில் முன்னேறும் வகையென்ன என்பதைப் பிறகு விரிவாகச் சொல்லுகிறேன்; அதற்கு முன்னுரையாகவே இதெல்லாம் சொல்லுகிறேன்.

ஹிந்துஸ்தானத்தை இரண்டு பிரிவாகக் காணலாம். விந்திய மலைக்கு வடக்கே யிருப்பது பெரும்பாலும் ஆரியர் வாழும் ஆரிய பூமியாகும்; அங்கும் திராவிடர் கலப்பு மிகுதி. உதாரணமாக வங்கர் திராவிட மங்கோலியக் கலப்பினர். விந்திய மலைக்குத் தெற்கே யிருப்பது **தக்கணம்** அல்லது **திராவிட**மாகும். ஆரிய பூமி அடிக்கடி புறப்பகைவர் படையெடுப்பினால் நிலைகுலைந்து பல சாதி கலந்து உருமாறி யுள்ளது. அங்கே ஆரியர், இஸ்லாமியர், சீக்கியர், ஜைனர், பௌத்தர், ஜரதுஷ்டிரர் முதலிய வகுப்பினர் வாழுகின்றனர். அவர்கள் வடமொழி கலந்த வங்கம், குஜராத்தி, மராதி, ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளைப் பேசுவர். தக்கணத்தில் பெரும்பகுதியினர் திராவிடரே. இவர்களில் இஸ்லாமியர், இருக்கின்ற

னர். கிறித்தவர் வடக்கிலும் தெற்கிலும் பரவியிருக்கின்றனர். இந்தியா என்றால் இத்தனை வகுப்பினர், இத்தனை மத்தினர் வாழும் ஒரு நாடாகும். இந்து சமுதாயம் என்றால் மேற்சொன்ன அனைவரையும் குறிக்கும். இந்தியாவின் பரப்பளவு சுமார் 48,05,000 சதுர மைல்களாகும்; ஜனத்தொகை சுமார் 38 கோடி; உலக ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கிற்குமேல். இந்தியா உலகன்னையின் இதயம்போல நடுநிலையில் அழகாயமைந்துள்ளது; அதன் கிழக்கில் வங்காளக்கடல், மேற்கில் அரபிக்கடல், தெற்கில் இந்துசமுத்திரம், வடக்கே இமயமலை—எல்லையாகச் சூழ்ந்துள்ளன. இமயமலை சுமார் 1,200 மைல் நீளமுள்ள பெரிய மலைத் தொடர்; அதில் சுமார் 20,000 அடி உயரமுள்ள 100 முடிகள் உள்ளன. கௌரிசங்கரம் (எவரெஸ்ட்) சுமார் 29,002 அடி உயரம்; அதுவே உலகிற் பெரிய மலைமுடி. கைலாச மலை 22,028 அடி உயரமிருக்கிறது. சிந்து, பிரமபுத்திரா, கங்கை ஆகிய மூன்று பெரிய நதிகள் இமயமலையில் உற்பத்தியாகின்றன. கங்கைச் சமவெளி மிகவும் வளம் பொருந்தியது. அது 1500 மைல் நீளமுள்ளது. வடமேற்கெல்லையில் கைபர்கணவாயும் அதற்குத் தெற்கே போலன் கணவாயும் உள்ளன. இவையே இந்தியாவிற்கு நுழைவுகள். இவற்றின் வழியே எத்தனையோ அன்னியர் நாட்டிற்குள் வந்தனர். இப்போது ஆங்கிலேயர் இக்கணவாய்களை வெகு கடுமையாகக் காவல் புரிந்து வருகிறனர். ஒரு காலத்தில் சிந்து கங்கைச் சமவெளி கடலாயிருந்தது. பூமி அதிர்ச்சியால் கடலிலிருந்து நிலப்பரப்பு வெளியானது; நதி வண்டல்கள் படிந்து படிந்து நிலம் உயர்ந்தது. சிந்து நங்க பருவதத்திலிருந்து வருகிறது. ஐந்து உபநதிகளுடன் அது பாஞ்சால நாட்டைச் செழிப்பாக்குகிறது. திபேத்தின் எல்லையிலுள்ள இமாலயப் பனியுருகி கங்கையாக ஓடிவருகிறது. ஹரித்வாரத்திலிருந்தே அது சமவெளிக்குப் பயனாகும்படி ஓடுகிறது. அல்லாஹபாத்தில் உபநதிகள் சேர்ந்து கங்கை ஆழ்ந்தகன்று ஓடுகிறது.

வட இந்தியாவை விடத் தென் இந்தியா மிகப் பழைய நிலம்; இமயத்தினும் விந்தியம் மிகப் பழைய மலை. தென்னிந்தியா முன்னே கடலுண்ட குமரி கண்டத்தின் மிச்சமாகும். இங்கே தான் உலகின் ஆதி மனிதர் இருந்தனர். வடக்கே விந்தியமலை, சாத்பூராமலை, கிழக்கே கிழக்குத் தொடர், மேற்கே மேற்குத் தொடர் சூழ்ந்த முக்கோண வடிவாயுள்ளது தக்கணம். மேற்கு—கிழக்குத் தொடர்கள் நீலகிரியிற் சேர்ந்து ஒரே தொடராகக் குமரி முனைக்குச் செல்லுகின்றன. அங்கிருந்து கடலுட் சென்று இலங்கை மலைகளாகத் தொடர்கின்றன. அரபிக் கடலில் விழும் நருமதை, தப்தி, வங்காளக்கடலில் விழும் மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவேரி, வைகை, தாமிரவருணி—இவை தக்கணத்தைச் செழிப்பாக்கும் நதிகளாம்.

இந்தியாவில் இரண்டு பிரிவுகள் உள்ளன; ஒன்று ஆங்கில இந்தியா; மற்றொன்று அவர்களுக்குக் கப்பங் கட்டி அடங்கி நடக்கும் சுதேசசமஸ்தானங்கள். சுமார் 700 சுதேச சமஸ்தானங்கள் உள்ளன. அவற்றுள் முதன்மையானவை:— ஹைதராபாது, பரோடா, குவாலியர், மைசூர் திருவாங்கூர் முதலியன. சென்னை, பம்பாய், வங்காளம், பாஞ்சாலம், கோசலம், பீகார், அஸ்ஸாம் முதலிய மாகாணங்கள் பிரிட்டிஷ் அதிகாரத்திலிருப்பவையாம். நேபாளம், பூதான் இரண்டும் சுதந்தர சமஸ்தானங்கள் கங்கை சமவெளி, பாஞ்சாலம், மழை செழித்த கொங்கணம், புனல் செழித்த கர்னாடகம்—இவற்றில் ஜன நெருக்கம் அதிகம்—ஒரு சதுர மைலுக்குச் சுமார் 450 பேர் வசிக்கின்றனர். பஞ்சாப் சீக்கியர், நேபாள கூர்க்கர், ராஜபுத்திரர், தமிழ் மறவர்—இவர்கள் நாட்டிற் சிறந்த போர் வீரராவர். குஜராத்தி சேட்டுகளும், தமிழ் நாட்டுச் செட்டிகளும், கோமுட்டிகளும், மரைக்காயர்களும் வாணிபத்திற் சிறந்து விளங்குகின்றனர். வங்காளிகள் கலை நுட்பத்திலும் கவிதையிலும் உயர்ந்தவர்கள்; தமிழர் அருட்கலை தேர்ந்தவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், ஆரியம், வங்காளம், குஜராத்தி, ஹிந்துஸ்தானி, மராத்தி, சிந்தி, புஷ்டு ஆகிய 12 பாஷைகள் இந்தியாவில் பேசப்படுகின்றன. இராமேசுவரம், மதுரை, திருச்சி, தஞ்சாவூர், புதுச்சேரி, சென்னை, நீலகிரி, மைசூர் பங்களூர், திருவாங்கூர், கொச்சி, உடுப்பி ஹைதராபாது, இராஜமகேந்திரபுரம், மசூலிபட்டணம், விசாகபட்டணம், விஜயநகரம், காகினாடா பம்பாய், சூரத், பூனா, ஆமதாபாது, நாகபுரி, கல்கத்தா, சந்திரநாகூர், டேக்கா, டார்ஜீலிங், பாட்னா, காசி, கயா, அல்லாஹபாது, கான்பூர், லக்னோ, ஜான்ஸி, ஆக்ரா, தில்லி, ஆஜ்மீர், ஜயபூர், லாகூர், பெஷாவர், ஸ்ரீநகர், கராச்சி முதலியன இந்தியாவிலுள்ள முக்கிய பட்டணங்களாம். இவை கலை, தொழில், வாணிபம், செல்வம் அனைத்திலும் செழித்தோங்குகின்றன. சென்னை, பம்பாய், ஐக்கியமாகாணம், மத்தியமாகாணம், தில்லி, அஸ்ஸாம், பீஹார் முதலிய மண்டலங்களில் இந்து தருமத்தை அனுசரிக்கும் சைவரும் வைணவரும் அதிகமாயிருக்கிறார்கள். பலுசிஸ்

தானம் வடமேற்கு எல்லைப் பிரதேசம், பாஞ்சாலம், வங்காளம்—இந்நான்கிலும் இஸ்லாமியர் தொகை அதிகம்.

இந்தியா நீர்நில வளங்களிற் செழித்த நாடு. பருவக்காற்றுகள் இந்தியாவிற்கு மழை வளம் தருகின்றன. ஜனவரி முதல் ஜூன் வரையில் வடகிழக்குப் பருவக்காற்றும், ஜூன் முதல் டிசம்பர் வரையில் தென்மேற்குப் பருவக்காற்றும் வீசி மழை மேகங்களைத் தூண்டுகின்றன. இலங்கை,. மலையாளம், வங்காளம், அஸ்ஸாம் இவற்றில் கனத்த மழை பெய்கிறது; சென்னை மாகாணத்தில் ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் போதிய மழை பெய்கிறது. இராஜபுதனம் வனந்தரம்; மத்திய பீடபூமியில் மழை கொஞ்சம். நதிவளம், மழை வளம் குறைந்த இடங்களில் நடைகிணறுகள் வெட்டி ஏற்ற மிறைத்துப் பயிர் செய்கின்றனர். இமாலயம், அஸ்ஸாம், மேற்குத் தொடர்ச்சிமலை முதலியவை காடடர்ந்தவை. இங்கே நீண்டுயர்ந்த தேக்கு, வேங்கை, தேவதாரு முதலிய மரங்களும் புலி, யானை, மாடு, மான் முதலிய விலங்குகளும் உள்ளன.

ஆற்றுப்பாங்கான இடங்களில் நெல், கரும்பு, வாழை, சணல் முதலிய பயிர்கள் செழிக்கின்றன. நெய்தல் நிலங்களில் தென்னை ஏராளம். புஞ்சை நிலங்களில் கேப்பை, சோளம், பயறு முதலியவை விளையும்; பஞ்சாப் போன்ற பனி மண்டலங்களில் கோதுமை விளைகிறது. இந்தியாவில் ஆடு மாடுகள் ஏராளமாயுள்ளன. இந்தியா பசுவளஞ் செழித்திருப்பதுடன் தற்கால யந்திர—வாணிபத் தொழிலுக்கேற்ற கனிப்பொருள்களிலுஞ் சிறந்து விளங்குகிறது. வங்காளம், பீஹார், ஒரிஸா, அஸ்ஸாம், பஞ்சாப், கோதாவரி முதலிய இடங்களில் போதிய நிலக்கரி உண்டாகிறது. சேலம், சென்னை, ஒரிஸா, தக்கணத்திலுள்ள மலைப்பிரதேசங்கள் இவற்றில் போதிய இரும்பு கிடைக்கிறது. சென்னை, மைசூர், மத்தியமாகாணங்களில் மங்கினீஸ் விளைகிறது. கோலாரில் தங்கச் சுரங்கம் உள்ளது. இமயமலைப் பாங்கரில் செம்புகிடைக்கிறது; பீஹார்—ஒரிஸாவில் ஏராளமான மைகா கிடைக்கிறது. பஞ்சாப் ராவல்பிண்டி, பர்மா முதலிய இடங்களில் மண்ணெண்ணெய் விளைகிறது. இந்தியர் பெரும்பாலும் பயிர்த் தொழிலாற் பிழைக்கின்றனர். பொதுவாக வேண்டிய கைத்தொழில்களெல்லாம் இங்கே, எளிய முறையில் நடக்கின்றன—நூற்றல், நெசவு, பானை செய்தல், மரத்தொழில் இரும்புத் தொழில் முதலியன. இப்போது பெரிய நகரங்களில் இயந்திரத் தொழில்கள் பெருகிவருகின்றன. இப்போது இந்தியாவில் 8,831, தொழிற்சாலைகள் உள்ளன. சென்னையில் 1,553, பம்பாயில் 1,678, வங்காளத்தில் 1,535 தொழிற்சாலைகள் உள்ளன. இவை பெரும்பாலும் பிறநாட்டு யந்திரங்களைக் கொண்டு நாட்டின் அதிகத் தேவைக்குரிய பொருள்களைச் செய்கின்றன—நூல், துணி, காகிதம், தீக்குச்சி, கண்ணாடி, இரும்புச்சாமான்கள், மின்சாரம் முதலிய தொழில்கள். இந்தியாவிலிருந்து ஆண்டுதோறும் சுமார் 38½ கோடி ரூபாய் பெறும் தங்கமும், 7 கோடி ரூபாயுள்ள வெள்ளியும் கப்பலேறுகின்றன. இன்னும் பலவகைகளில் 400 கோடி ரூபாய் வெளியேறுகிறது. இங்கே விளையும் மூலப்பொருள்களெல்லாம் கப்பலேறிப் பலவிதமான செய்பொருளாக இங்கே திரும்பி வருகின்றன. இந்தியவளத்தால் வெண்ணுலகம் செழிக்கிறது. இந்தியா யந்திரச்சாமான்களுக்குச் சந்தையாயிருக்கிறது. பொன்னும் பசுமையும் குலுங்கும் இந்தப் புண்ணிய பூமி வறுமையால் வருந்துகிறது; இந்த ஞானபூமி கல்வி பரவாமல் இருள் மூண்டிருக்கிறது; அடிமைச் சிறையில் அடைபட்டு உயிர் துடிக்கிறது.

அறிவும், வளமும் செறிந்த இந்நாடு இந்நிலைக்கு வருவானேன்? அடுத்த தடவை இந்நாட்டு வரலாற்றைச் சொல்லுகிறேன். நீங்களும் புத்தகசாலைகளில் உள்ள சரித்திர நூல்களைப் பாருங்கள்.

பாரத சக்தி மஹாகாவியம்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

ரு. சித்திநகரப் படலம்

ஊர்ச்சிறப்பு

அத்தகை நாட்டுடை அரசன், அன்பர்கோன்,
சத்தியன் விளங்கிய தரும பீடமாம்,
சித்திமா நகரணிச் சிறப்பைப் பாடிட
முத்தமிழ் வாணியை முன்னு வாமரோ !

சென்ற படலத்தில் புண்ணிய பூமியின் பெருமையை அறிந்தோம். அத்தகைய நாட்டை ஆண்ட அரசன் அன்பிற் சிறந்தவன், அன்பர் தலைவன், சத்தியன். அவன் விளங்கிய தலைநகரம் சித்திமாநகரம். அது தரும தேவதையின் இருப்பிடம் போன்றது. அந்நகரத்தின் சிறப்பை வர்ணிக்க முத்தமிழ்க் கலைவாணியைத் தியானிப்பாம். கசு

மண்டல மடந்தையின் மதிமு கங்கொலோ ?
விண்டலத் தேவர்கள் விளங்கும் வீடிதோ ?
பண்டொடு புதுமையும் பயிலும் தாயகம்
தெண்திரை முரசதிர் சித்தி மாநகர் !

தென்கடலான இந்து சமுத்திரம் முரசொலித்து இந்தச் சித்திமாநகரின் புகழை உலகிற்குச் சொல்லுகிறது. இந்த நகரம் புவிமகளின் எழில்பெற்ற மதிமுகமோ? சுவர்க்க தேவதைகள் வசிக்கும் வானகமோ? பண்டைக்கால அத்யாத்ம ஞானமும், புதிதாக அறிஞர் ஆராய்ந்த இயற்கலை யறிவும் இந்த நகரத்தையே தாயகமாகக்கொண்டு வளர்கின்றன. கஎ

பூமகள் வாசமோ ? புகழின் வாகையோ ?
நாமகள் வீணையோ ? நாட்டின் உள்ளமோ ?
பாமணம், பூமணம் பருகுந் தென்றலில்
ஓமொளிக் கொடிவளர்ந் தோங்கு மாநகர்.

இந்த நகரெங்கும் பாட்டு முழங்குகிறது. பூஞ்சோலைகள் பொலிகின்றன. பாமணத்தையும் பூமணத்தையும் தென்றல் அள்ளி வீசுகிறது. அந்தத் தென்றலில் நகரின் கொடி ஓங்கி வளர்ந்து விளையாடுகிறது. இக் கொடியில் சூரியனும் அதன் நடுவே ஓம் என்னும் பிரணவமும் எழுதப்பெற்று விளங்கும். இதுவே ஓம்+ஒளிக்கொடி. இத்தகைய நகரம் தனது செல்வச் செழிப்பால் இலக்குமி வாசம்போலும், வீரத்தால் புகழன்னைக்கே வெற்றிமாலைபோலும், கல்வி கலைகளால் நாமகளுக்கே மங்கல வீணைபோலும், நாட்டுவாழ்விற்கே உள்ளம்போலும் விளங்குகின்றது. இதைக் கண்டவர் இவ்வாறே வியப்பர். கஅ

வளமை

கவினெலாந் திரண்டிதன் காட்சி யானதோ ?
தவமெலாந் திரண்டிதன் தரும மானதோ ?
சிவமெலாந் திரண்டிதன் செல்வ மானதோ ?
புவியெலாந் திரண்டிதன் புகழைப் போற்றுமால் !

அழகெல்லாம் சேர்ந்த்த இந்த நகரத்தின் காட்சி களாக அமைந்ததோ? இதுகாறும் மஹான்கள் செய்த தவப்பயன்களெல்லாம் சேர்ந்தே இந்த நகர வாழ் விற்கு ஆதாரமாகத் தருமம் ஆனதோ? அறிவு, கலை, தொழில், நீதி இவற்றின் நன்மை (சிவம்) எல்லாம் கூடியே இதன் செல்வச் செழிப்பாக விளங்குகின்றனவோ? எங்கும் அழகும், தவவொளியும் அதிற்பூத்த இல்லறம் துறவறம் ஆகிய தருமமும், சிவமும், நலமும், திருவும், செல்வமும் விளங்கும் இந்த நகரத்தின் புகழை உலகமெல்லாம் கூடிப்போற்றும். கக

புனல்வளம், பயிர்வளம், பொங்கு பூவளம்,
இனமணித் திரள்வளம், இலகு பொன்வளம்,
மனைவளம், மாசறு மைந்த ரின்வளம்,
வினைவளங் கலைவளம் விளங்கு மாநகர்.

இப்பெரிய நகரில் நீர்வளம், பலவகைப் பயிர்வளம், பொங்கிச் செழிக்கும் நிலவளம், பலவகையான மணித் திரள்களின் பெருக்கம், நகை நாணயங்களாக விளங் கும் பொன்வளம், அன்பும் அறமும், சேர்ந்த இல்லற வளமை, அதில் மாசற்ற மக்கட் செழிப்பு, அவர்கள் செய்யும் பயனுள்ள தொழிற் செழிப்பு, அத்தொழில் களுக்குத் துணையான கலைச் செழிப்பு—இவையெல்லாம் பெருகி யோங்கும். க௦௦

சுந்தர மலர்வளஞ் சொரியுந் தேன்மழை,
சிந்துரக் கனிவளஞ் செழிக்கப் பாயுமால்
அந்தரம் வியப்பவோர் அமுதப் பச்சைவான்
பந்தலிட் டிந்நகர் பரவு மாங்கொலோ?

இந்த நகரில் அழகான மலர்வனங்கள் உள்ளன. அவற்றில் தேன்மாரி பெய்து வழிந்தோடிக் கனிமரங் களிற் பாயும். அம்மரங்களில் செந்நிறக்கனிகள் இரத் தினம்போலத் தோன்றும். இவ்வாறு பூஞ்செடிகளும் கனிமரங்களும் அடர்ந்தோங்கும் காட்சி இந்த நகரத் திற்குமேல் ஒரு பச்சைவானம் பந்தலிட்டுக்கொண் டிருப்பது போலக்காணும். அதைக்கண்ட நீலவானம் "நமக்குக் கீழே அமுதக்கனி நிறைந்த ஒரு பசு வானம்" இருக்கிறதே என வியக்குமாம். க௦க

அம்புவி தனைவளர் அன்னை போலவே
பம்புநல் அருவிகள் பயிர் வளர்த்திடும்
நம்புமெய் யடியவர் நாளும் ஓங்கவே
சம்புவின் அருளெனத் தழைக்கும் வான்மழை!

ஒலித்தெழுந்து பாயும் அருவிகள் உலகை வளர்க் கும் அன்னையைப்போற் பயிர்களை வளர்க்கும். தன்னை நம்பி அன்பு செய்யும் அடியார் எந்நாளும் சீர்பெற் றோங்கவே பொழியும் சிவனருள்மாதிரி வான்மழை வற்றாது வழங்கும். க௦உ

நதியொலி, புள்ளொலி, கல்வி நல்கொலி,
துதியொலி, தொண்டொலி, தொழில்க ளின்னொலி
விதியையும் வென்றிடும் வீரர் 'பாயொலி'
மதிஞரின் சொல்லொலி மல்கு மெங்குமே.

இந்நகர் எங்கும் ஆற்றொலி, வாய்க்கால் ஒலி, சோலைப்புள்ளொலி, கலாசாலைகளில் மாணவர் கல்வி கற்கும் ஓசை, அடியார்கள் கடவுளைத் துதிக்கும் இசை யொலி, ஏற்றவர் ஈந்தவரைப் போற்றும் வாழ்த் தொலி, பொதுநலத்தொண்டர் ஊருக்கு நல்ல பணி களைச் செய்யும் ஓசை, பலதொழில்கள் வளரும் பய னுள்ள ஓசை, விதியைக்கூட வெல்லும் வீறுபடைத்த வீரர் போர்ப்பயிற்சி செய்து பாயும் ஓசை, அறிவாளிகள் நல்ல பொருளைப்பற்றிச் சொற்பொழியும் ஓசை—இவை நிறைந்திருக்கும். க௦௩

தீரர் சிறப்பு

ஐந்திணை ஆளுவர் அந்தண் வீரர்கள்
ஐந்திணை யாளுவர் ஆண்மை வீரர்கள்
ஐந்தறங் காப்பரில் லறத்தின் வீரர்கள்
ஐந்தொழி லாளியின் அன்பு வீரரே !

ஞானமும் தவமும் வளர்க்கும் ஆன்ம வீரரான அந்தண் முனிவர் ஐம்புலன்களை அடக்கி யாளுவர். ஆண்மைமிக்க போர்வீரர் மருதம், குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல் ஆகிய ஐந்து நிலங்களையும் தமது தோள்வலியால் வென்று செங்கோலாட்சி செய்து மன்னுயிரைக் காப்பார். இல்லறத்தை மேற்கொண்ட வீரக்காதலர் சுத்தான்ம சாதனம், அறிவு வளர்ச்சி, ஆருயிர்ப்பணி, மனைவிமக்களைப் பெற்றுப் போற்றி வளர்த்தல், அதற்கேற்ற பயனுள்ள தொழிலைச் செய்தல் ஆகிய ஐந்து கடமைகளையும் தமது அறமாகச் செய்வர். இவர் எல்லாருமே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அளித்தல் என்னும் ஐந்தொழில்களையும் செய்யும் இறைவனுக்கே ஆளான அன்புவீரராவர் ; பக்திவைராக்கியம் கொண்டவராவர். ௧௦௪

அறமெனும் பூமியில் அன்பை நாட்டுவார்
உரமெனப் பொருளின்பம் ஊற்றிப் போற்றுவார் ;
குறைவறும் அருண்மலர் குலுங்க முத்திசேர்
நிறைகனி யுண்டவர் நீடு வாழ்வரே !

இந்நகர நல்லோர்வாழ்க்கைச் சோலை இவ்வாறு தழைக்கும் : அதன் நிலம் அறம் ; அதில் இறைவனிடம் வைத்த உள்ளன்பையே விதையாக நாட்டுவார். கல்வி செல்வம் கலையாகிய பொருளையே உரமாக இடுவார். அப்பொருளை நுகரும் காதலின்பத்தையே, இல்லற வாழ்வையே, நன்னீராக வார்த்து, வாழ்வுப்பயிரைக் காப்பார். அப்பயிர் வளர்ந்து நாளடைவில் திருவருள் ஆகிய மலர் குலுங்கும். அந்த அருள்மலர்கள் நாளடைவில் நிறைவான முத்திக்கனியாகப் பழுக்கும். அக்கனியை இவர் உண்டு ஜீவன் முத்தராக நீடூழி வாழ்வர். ௧௦௫

உணவிலே தூயவர், ஊன்,கொலை,மது
கனவிலுங் கருதிலர், கல்வி கேள்வியர்,
நினைவிலே தூயவர், நின்று மெய்ந்நெறி
தனையறிந் துலகெலாந் தம்முட் காண்பரே !

இந்நாட்டார் சன்மார்க்க ஒழுக்கங்களில் தூயவர் ; பரிசுத்தமான சைவ உணவையே பசியறிந்து கொள்பவர் ; கனவிலும் புலால் உண்ண நினையார் ; உயிர்க்கொலைசெய்யார் ; கள்ளுண்ணார் ; கல்விகேள்விகளில் சிறந்தவர் ; கற்றவழி நின்று தூயநினைப்பைக் கொண்டவர் ; யாருக்கும் தீமை நினையார் ; மெய்வழியான சுத்தசன்மார்க்கத்தில் கருத்தூன்றி நிற்பர். அதனால் பதியன்பும் ஞானமும் ஓங்கித் தன்னறிவு (ஆத்மஞானம்) மலரும். பிறகு உலகெல்லாம் உயிர்க்குலமெல்லாம் தம் உள்ளே, தாமே எனக்காண்பார்; சுத்தான்மதரிசனத்தால் சர்வாத்மதரிசனம் பெறுவார். ௧௦௬

பிறர்நலந் தமதெனப் பெரிதும் போற்றுவார் ;
பிறர்துயர் தமதெனப் பெரிதும் ஆற்றுவார்.
அறந்தனைப் பேணுவர் ஆவி தன்னினும் ;
திறம்பல பெருகுவர் தெய்வ சக்தியால்.

பிறர் நலத்தைத் தமது நன்மைபோலப் போற்றும் பரோபகாரிகள். மற்றவர் துன்பம் தமது துன்பம் போல் நினைத்துத் தீர்க்கும் கருணைமிக்கவர். உயிரைவிட மனிததருமத்தை மேலாக மதித்துக் கடைப்பிடிப்பவர். தெய்வசக்தியை உபாசித்து அதன் அருளால் பல அரிய வல்லமைகளைப் பெற்று நலம் புரிவார் இந்நகரமாந்தர். ௧௦௭

வரகவி கோபாலகிருஷ்ண பாரதியார்

(ஞாயிறு)

சுப்பண்ணா நந்தனார் கதை கேட்டு அகாலத்தில் வீட்டிற்கு வருவார். ரேழியில் ஸ்ரீமதி படுத்துறங்குவாள். "சற்றே விலகியிரும் பிள்ளாய்..." என்று குரலெழுப்பார். பதிலிராது. "வழி மறைத்திருக்கு... தே...மலைபோலொரு......மாடு......படுத்திருக்குதே" என்று கொஞ்சம் ஷட்ஜமத்திலே பிடிப்பார். ஆள் உறங்கினாலும் ரோஷம் உறங்காதல்லவா? ஸ்ரீமதி திணுணென்றெழுவாள்; "இதோ பாருங்கள் அடாது செய்தால் படாதுபடுவீர்; விடாது பாவம்..." என்று பஞ்சமத்தில் ஆரம்பிப்பாள். "இம்மட்டும் போதுமையே, தயவிருந்தாலது போதுமையே" என்பார் சுப்பண்ணா. "அதற்கில்லேங்காணும், "மதம்பிடித்ததுபோலாச்சு இந்த மண்டலப்பறையருக்கேச்சு" என்றிருக்கிறது என் பிழைப்பு; சொல்லமாட்டீர்களா!" என்று கொஞ்சம் பிணங்கி உள்ளே செல்வாள் ஸ்ரீமதி. "வருகலாமோ...நான் வருகலாமோ" என்று கெஞ்சுவார் சுப்பண்ணா. "கள்ளக்கும்பிடுதன்னைப் போடாதே; உன் கபடமெல்லாமிங்கே காட்டாதே" என்று பதில் வரும். "சரி, உன்னோடென்ன பேச்சு; திருச்சிற்றம்பல மென்றால் தேகம்களிக்கும்" என்பார் அவர். "பொரிச்சகுழம்புண்டால் தேகம் பெருக்கும்" என்று பதில் கிடைக்கும். இருவரும் பக்கென்று சிரித்துச் சமாதானமாவார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னே கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திர கீர்த்தனைகள் இந்த மாதிரிக் குடும்ப வாழ்வில் கலந்து மாந்தர் மனத்தில் ஊறிப் போயிருந்தன. அப்போது கோபாலகிருஷ்ண பாரதியாரைப் பார்த்து, அவர் கதைபண்ணிக் கேட்ட பெரியார் சிலர் இருந்தனர். நந்தன் சரித்திரம் கேட்ட போதெல்லாம் அவர்கள் பாரதியாரைப்பற்றி வர்ணிக்கத் தவறமாட்டார்கள்.

—"ஆள் கறுவல், நெட்டை, சாதாரணப் பருமன்; மண்டை யாழ்ப்பாணத் தேங்காய் மாதிரி பெருத்திருக்கும், தலை மொட்டை, கழுத்திலே ருத்ராக்ஷம், முழங்காலுக்குமேலே துண்டு கட்டியிருப்பார்; இடது தோளில் அங்கவஸ்திரம் தொங்கும்; கால் வளைந்து நடப்பார். அழகில்லை; ஆள் சுத்தமாயிருப்பார். குரல் நம்பிபோலிருக்கும்; பேச்சு இனிமையாயிருக்கும். பக்தி ரசம் அதிகம்..." என்றெல்லாம் அவரைப்பற்றிப் பெரியவர்கள் சொல்லுவார்கள். அக்காலம் அவரைக் கேலி செய்வோரும் உண்டு:—

"நந்தன் சரித்திரத்தைக் கேளாதே—நாளும்
வந்த தரித்ரங்கள் மீளாதே
தந்தனமாய்க் கொள்வான் தடிபிரமசாரி
தையலர்மேல் பெரும் காமவிகாரி"

என்னும் பாட்டு அக்காலம் வழங்கியது. பாரதியார் மேல் வைதிகரும், செந்தமிழ்ப்புலவர் சிலரும் கடுஞ்சினங்கொண்டனர். பெரிய புராணக்கதையை அவர் திரித்துக் கூறியதாகச் சிலர் சினந்தனர்.

"பெரிய புராணத்திலே இருப்பதை விட்டுப்
பேய்த்தனமாய் இவன் சொன்னதைத் தொட்டு
அரிய புலவர்க்கு வந்ததே ஒரு சொட்டு!
ஐயையோ அத்தனையும்கதைக் கட்டு"

என்று அவர்கள் பாரதியாரை எள்ளியிகழ்வர். பாரதியார் எளியர் நண்பர்; திருக்குல நேசர்; தீண்டாமையின் விரோதி; சுதந்தரபக்தர்—இத்தன்மைகளை அக்கால வைதிகப்பிடிவாதம் எப்படிப் பொறுக்கும்? உலகில் வறுமையாலும், இடர்களாலும் வருந்திய புலவருள் பாரதியார் ஒருவர்.

உ

பாரதியார், 1811-ம் ஆண்டு, திருவாரூருக்கருகேயுள்ள நரிமணக்கிராமத்தில் பிறந்தார். அவர் தகப்பனார் இராமசாமி பாரதியார் வீணை வாசிப்பவர்; பரம ஏழை. தாயார் விஷயம் தெரியவில்லை. பாரதியார் வறுமையில் பிறந்து வறுமையில் வாடினார். அவரது சிறுவயதிலேயே பெற்றோர் சிவபதமடைந்தனர். குழந்தை அனாதையானான். மாமா அனந்தராமையர் சகுனி மாமாதான்; மருமானைக் கண்டாலே அவருக்குப் பிடிப்பதில்லை. அவர், பையனுக்கிருந்த சொற்பபிதிரார்ஜிதத்தையும் வஞ்சமாகக் கைப்பற்றி, "எங்கேயாவது போய்த்தொலை!" என்று குழந்தையை விரட்டியடித்தார். 'கடவுளே துணை' என்று பையன் ஏகாங்கியாகப் புறப்பட்டு ஊர் ஊராகத் திரிந்தான். சோறு கிடைத்த இடம் சுவர்க்கலோக மென்றிருந்தான். கண் சுழற்றிய இடம் படுத்தான். உலகோர் வஞ்சநடைகளை நேரே கண்டறிந்தான். சிதம்பர தரிசனம் அவன் வாழ்வை மாற்றியது. "பிறவி துன்பம்; நடராஜர் திருவடிப்பற்றே இன்பம்; பக்தி செய்துகொண்டிருந்தால் முக்தி பெறலாமே" என்று ஆடியபாதத்தைப் பாட அவனுள்ளம் துடித்தது. சதா பஞ்சாக்ஷரியை ஜபித்துக்கொண்டும், நடராஜக் கோலத்தை மனத்தில் நினைத்துக்கொண்டும் பாரதியார், அவன் விட்ட

வழியே சென்ருர். தாம் சென்ற இடங்களில் விளங்கும் பெரியாரை வணக்கமாகக் கண்டு, அவர் உபதேசங்களை மனத்துட்கொண்டார். பாரதியார் முறையாகப் படிக்கவில்லை. 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்றபடி அங்குமிங்கும் நேர்ந்த பெரியாரிடம் கேள்வி ஞானம் பெற்ருர். அவர் பிறவிக் கவி; அவர் கவிதை சிவபக்திக் கனலில் உதித்தது. வீணையில் வல்ல தந்தையே பையனுக்குச் சங்கீதம் பயிற்றியதாகச் சிலர் சொல்லுவர். பாரதியாருக்கு இயற்கையிலேயே இசைப்புலமை வாய்ந்திருந்தது. சங்கீதம் சாஹித்யம் இரண்டும் அவரிடம் விளங்கின. வறுமையின் கொடுமையால் இரண்டும் உள்ளடங்கியிருந்தன. அவர் கனம் கிருஷ்ணய்யர், பாபநாச முதலியார் இருவரிடமும் சிறிது காலம் நாதவித்தை பயின்ருர். இராமதாஸ் என்னும் புலவரிடம் ஹிந்துஸ்தானி சங்கீதம் பயின்ருர். மாயவரம் கோவிந்தையரிடம் ஆரியமும் வேதாந்தமும் பயின்ருர். சித்தாந்த நூல்களைக் கேட்டார். பெரிய புராணங் கேட்டுருகினர். சிதம்பரத்தில் பாரதியார் அருட்சோதி இராமலிங்க சுவாமிகளைத் தரிசித்து அவர் அருள்வாக்கையும் கேட்டார். ஞானநூல்களைக் கேட்டதுடன் அவர் அனுட்டித்தார். நித்தியமான இறைவனையே நினைத்தார்.

அவர் பிறப்பைக்கூடச் சிலர் சந்தேகித்துக் கேலி செய்தனர். உலகின் இடர்களும் கேலிகளும் அவர் வைராக்கியத்திற்குச் சாணை பிடித்தன. மனத்தில் உதிக்கும் பாடல்களைப் பாடுவது, பசித்தால் பிச்சையெடுத்துண்பது, பிச்சை கிடைக்காவிட்டால் சிவநாமத்தையே உண்டுறங்குவது, ஊர் ஊராகத் திரிவது— இவையே அவர் தொழில். இருபத்து நான்கு வயது மட்டும் அவர் இவ்வாறு அனுதையாக, அன்னவிசாரமே விசாரமாக ஊருக்கு ஊர் திரிந்தார்.

௩

அக்காலம் ஆனைதாண்டவபுரம் என்னும் கிராமத்தில் ஒரு பெரிய மிராசுதார் இருந்தார். அவர் பெயர் **அண்ணுவையர்**. 'அண்ணுவையர்' என்ருல் "தர்மாத்மா, அன்னதாதா, அவர் நீடூழி வாழ்க!" என்பர் ஊரார். அவரே ஊருக்குத் தலைவர். அவருக்கு ஏராளமான நிலங்களும், வட்டிக்கடையும் உண்டு. நிலங்களைத் திருக்குலத்தார் பண்படுத்தி விளைவேற்றுவர்; காரியஸ்தர்கள் மேற்பார்த்துக் கண்டிப்பாக வேலை வாங்குவார்கள். பாங்குக் காரியமும் காரியஸ்தர் மூலம் கவனமாக நடந்தது. அண்ணுவையர் இடையிடையே சென்று கணக்குகளைத் தணிக்கை செய்வார். குடியானவரிடையே கலகங்களைத் தீர்ப்பார்; மற்றைப்போதெல்லாம் பொதுநலப் பணிகளிலேயே ஈடுபட்டிருப்பார். அவர் எல்லாரிடமும் அன்பாகப் பேசுவார். தம்மைச் சேர்ந்த ஆட்களுக்குக் குறைவில்லாமல் மனமறிந்துதவுவார். அவருக்குச் சங்கீதத்திலும், வேதாந்தத்திலும் பிரியம் அதிகம். அவருக்கு ஊளி பிடிக்கத்தெரியும். குழல், தம்பூரா முதலிய இசைக் கருவிகளை அவர் செய்வார்; விதவித வாணங்களும் மத்தாப்புகளும் செய்வார்; வாசனைச் சமான்களும் ஊதுவத்தியும் செய்வார். அவர் அடிக்கடி சிதம்பரம், வைத்தீசுவரன் கோயில், திருவாரூர் முதலிய தலங்களைத் தரிசிப்பார். அவருடன் எப்போதும் ஓர் அன்பர் கூட்டம் செல்லும். செல்லும் வழியில் தாம் செய்த வாணங்களை விடுவார். தாம் செய்த வாசனைச் சாமான்களைத் தேங்காய் பழத்துடன் கடவுளுக்கு நிவேதிப்பார்.

அண்ணுவையர் காலை நேரத்தில் புராணங்களையும், வேதாந்த உபதேசங்களையும் கேட்பார். தக்க புலவரையும், ஞானிகளையும் அவர் வணக்கமுடன் ஆதரிப்பார். மாலை நேரமெல்லாம், இரவு 9 மணி வரையிலும் அவர் சங்கீதத்தில் லயித்திருப்பார். நாள் தவருமல் அவர் வீட்டில் கச்சேரி நடக்கும். ஏராளமான ஜனங்கள் வந்து அதைக் கேட்பர். திருவாதிரை, கிருஷ்ணஜயந்தி ஸ்ரீராமநவமி முதலிய புண்ணிய தினங்களில் நாள்முழுதும் பக்திரசப் பாடல்களே அவர் வீட்டில் முழங்கும். அவர் மாளிகை ஆரதோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். வாசலில் பெரிய அலங்காரக் கொட்டகை போட்டிருக்கும். கொடிகள் பறக்கும். நடராஜர், கண்ணன், பட்டாபிராமன் ஆகிய மூன்று மூர்த்திகளுக்கும் சிறப்பான வழிபாடுகள் நடக்கும். வித்வான்கள் இன்னிசைக் கருவிகளுடன் பாடுவர். பாகவதர்கள் சத்காலக்ஷேபம் செய்வர். ஜயதேவரின் அஷ்டபதி முழங்கும். இரவில் பஜனை கோஷ்டியுடன் தீபப்பிரதக்ஷிணம் அமோகமாக நடக்கும். அன்னதானத்திற்கு அளவில்லை. தாராளமாக வாசனைச் சந்தனம் தயாரித்து அண்ணுவையர், பக்தகோடிகளுக்கு உடல்குளிரப் பூசுவார்.

௪

1835-ம் ஆண்டு; அண்ணுவையர் வீட்டில் வெகு விமரிசையாக ஸ்ரீ ராம ஜயந்தி உற்சவம் நடந்தது. பாட்டுக்கச்சேரிகள் ஜமாய்க்கின்றன. அன்று அருணுசலகவிராயர் சிஷ்யர் இராமாயண கீர்த்தனங்கள் பாடினர். சுந்தரகாண்டம். ஹனுமார் வாலில் அரக்கர் வைத்த தீ இலங்கையை எரிக்கிறது. அத்தீயால் அனுமாருக்கு யாதும் தீங்குவரக் கூடாதென்று சீதாபிராட்டி தனது சத்தியாக்கிரகத்திலிருந்து அக்கினி பகவானை வேண்டுகிருள்.

" அக்கினி பகவானே - வருத்தாதே - அனுமானை [நீதானே
திக்குவேறில்லையே - திக்குப்புடவை சோர்ந்தால்
கைக்குண்டோ உபசாரம் காக்க உமதுபாரம் "

என்ற ஆனந்த பைரவி கீர்த்தனம் ஆகிதாளத்துடன் கூடி முழங்குகிறது.

அச்சமயம் காலைக்கடன்களை முடித்துக் கட்டுக்கட்டாய் விபூதியணிந்து அடியாரொருவர் அங்கே தோன்றினர். "உண்மை, அக்கினிபகவான் என்னை வருத்துகிருர்—ஜாடராக்கினி பகவான். சோற்றுக் கவலையே என்விதியானது; சோற்றுக்குப் பிறகே

பாட்டு. அக்கினி பகவானே...வருத்தாதே என்னை" என்று அவர் முணுமுணுத்தார். பசியினால் இரங்கியிருந்த ஆளைப் பார்த்தார் அண்ணுவையர்.

—நீர் யார்?
—பசிக்கிறது; பாடுகிறேன்; அன்னம் கிடைக்குமா?
—ஆஹா, வாருங்கள் உள்ளே!

ரு

பசி தீர்ந்தது; அண்ணுவையர் பாரதியாரைச் சபைக்கு அழைத்துவந்தார். அப்போது பஜனை முடியப்போகிற சமயம். "தாங்கள் ஒரு கீர்த்தனம் பாடலாமே" என்றார் அண்ணுவையர். தாம் அப்போது கவனம் செய்த ஒரு கீர்த்தனத்தை மதுர கம்பீரத்வனியில் பரவசம் மிகப் பாடினர் பாரதியார்.

"கண்ணாலே கண்டேன் வேறொன்றையும்
எண்ணாமலே...நின்றேன்..."

சபைமுழுதும் சித்திரப்பாவையானது. மத்தியானச் சாப்பாட்டைக்கூட மறந்து எல்லாரும் இப்புதிய இசையமுதை அருந்தினர்.

"தாங்கள் இங்கே எத்தனை நாள் வாசம்?" என்று கேட்டார் ஐயர். "சாப்பாடு கிடைக்குமட்டும்" என்றார் கவி.

'அதற்குக் குறைவில்லை தாங்கள் தாராளமாக என்னுடன் இருங்கள். இனி எக்கவலையும் வேண்டாம்" என்றுபசரித்தார் தர்மாத்மா அண்ணுவையர்.

இதுகாறும் தன்னை அனாதையாக்கிச் சோற்றுக்குத் திண்டாடவிட்ட மனித சமுதாயத்தை வெறுத்து வந்த பாரதியார் இங்கேதான் "அன்பு" என்பதைக் கண்டார். முகமறிந்து உபசரித்து ஓர் அருட்கவியை ஆதரித்த தர்மாத்மா அண்ணுவையர் வாழ்க!

சு

பாரதியாரின் ஞானமும் கலையும் செழித்தோங்கத் தக்க இடம் கிடைத்தது. வித்வான்களின் பாடல்களும், பஜனைகளும் அவரது புலமை விளங்க வாய்ப்பீந்தன. அவ்வப்போது கவனம் செய்ததைப் பாரதியார் பரவசமாகப் பாடி வந்தார். அத்துடன் விருஷபத்வஜதீக்ஷிதர், சிவசாமி ஐயர் ஆகிய தத்துவப் பெரியார் அண்ணுவையருடன் செய்யும் வேதாந்த சித்தாந்த விசாரணைகளை ஆர்வமுடன் கேட்பார்; தாமும் அதிற் கலந்து கொள்வார். கேட்டதைத் தனியே அமர்ந்து சிந்திப்பார்; சிவனை வந்திப்பார்; மனங்குவிந்து தியானிப்பார்; சிவநாமம் ஜபிப்பார். அத்துடன் சுற்றிலும் மாந்தர் வாழ்வைப் பார்ப்பார். அண்ணுவையருடன் நிலம் மேற்பார்க்கப் போவார். உழவரெல்லாரும் திருக்குலத்தார்கள். அவர் வாழ்வைப் பாரதியார் கவனிப்பார். அவர்களிடையே திருட்டு, கலகம் நேர்ந்தால் அண்ணுவையரே விசாரிப்பார். அதைப் பாரதியார் பார்த்துக்கொண்டிருப்பார். மிராசுதார்கள் ஏழைத்தொழிலாளிகளை நடத்தும் கொடுமையைக் கண்டிப்பார்; ஏழைத் திருக்குலத்தார் படும் இடர்களையும் இன்னல்களையும், வறுமைத்துயரையும் கண்டு இரங்குவார்.

திருக்குலத்தினர் கூரை வீடுகளில் சுரை படர்ந்திருக்கும். கொல்லைகளில் எலும்பு குவிந்திருக்கும்; நரம்புகள் குவிந்துகிடக்கும்; மீன் உலரும்; குட்டைகளில் மட்டி மிதக்கும். அங்கு நண்டும் நத்தையும் அதிகம். கேணிகளில் தோலூறும், நிணநாற்றம் வீசும். மாமிசத்திற்காகப் பருந்துகள் வட்டமிடும்; நாய்கள் குலைக்கும். பரம்படித்த வயற்பக்கங்களில் எலும்புத்தண்டுகள் குவிந்திருக்கும். மக்கள் தந்தனப் பாட்டுப் பாடித் தெருவில் விளையாடுவர். பெண்கள் சங்கு, தோடு, காதணி, தாவடம், மணி—இவைதரித்து வாசற்புறம் நின்று ஒருவரையொருவர் ஏசிக்கொண்டு, கைகொட்டிக் கொண்டாட்டமா யிருப்பார். சிலர் மதுவுண்டு கெக்கலிப்பார். பறைகொட்டிப் பாடுவர், கூத்தாடுவர். வீரன் இருளன் காட்டேறி முதலிய தேவதைகளை வணங்குவர். முறியெழுதிக் கொடுத்து இத்திருக்குலத்தார் பரம்பரையாக மிராசுதாரருக்கு அடிமையா யிருந்தனர். வயல் உழுதல் நடுதல், உரம்வைத்தல், காவல் காத்தல், களைபறித்தல், அறுவடை செய்து நெல்அளத்தல், பறையடித்தல், எளியதொண்டு செய்தல்—இவையே திருக்குலத்தார் கடமை. இவற்றை யெல்லாம் பறையர் வாயிலாகவும் வேதியர் வாயிலாகவும் பாரதியார் கண்ணுக்கு மெய்யாகக் காட்டியிருக்கிறார்.

எ

அண்ணுவையரைப் போலவே சிவசாமி ஐயரும் மிராசுதார், பக்தர், சங்கீதப்பிரியர்; முதன்மையாக வேதாந்தி. ஆனால் இருவரும் திருக்குலத்தாரைக் கடுமையாக, அடிமையாக நடத்திச் சக்கைவேலை வாங்கினர். திருக்குலத்தார் நிலையைக் கண்டு பாரதியார் இரங்குவார். அறமும், அன்பும், ஆதரவும் காட்டிய வகையிலேயே அண்ணுவையரையும், வேதாந்தி சிவசாமி ஐயரையும் வணக்கமாக நேசிப்பார். ஒருநாள், இருவரும் வேதாந்த விசாரம் செய்து கொண்டிருக்கும்போது தில்லை பெரிய குருக்கள் விருஷபத்வஜ தீக்ஷிதர் வந்தார்; அவர் இருமொழிப் புலவர்; வேதாகம நிபுணர்; சொல்வன்மை மிக்கவர்; அன்புமயமானவர்; ஏழைகளுக்கு இரங்கும் இளகிய மனங்கொண்டவர். அவரை எல்லாரும் வணக்கமுடன் நன்கு மதித்தனர். தீக்ஷிதர் இவ்வாறு வியப்புடன் பேசினர்:—

நேற்று அற்புதமான காலக்ஷேபம் நடந்தது. நமது தஞ்சாவூர்த் துறவியொருவர் வடக்கே இமயமலை வரையில் யாத்திரை சென்று வந்தார். நேற்றுச் சிதம்பரத்தில் அவர் அரிய பக்திப் பிரசங்கம் செய்தார். சிதம்பர மான்மியத்தையும் நந்தன் பெருமையையும் அழகாகப் பேசினர். அவர் நந்தனை ஆனந்தன் என்றார். அவர் சொன்ன நந்தன் சரித்திரம் ஆனந்தமாயிருந்தது" என்றார். பாரதியார் வெகு ஆவலாக அதைப்பற்றி வினவினர். தீக்ஷிதர் தாம் கேட்டபடியே நந்தனர் சரித்திரத்தை உருக்கமாகச் சொன்

னார். பாரதியார் ஆவேசங்கொண்டார். அவர் முன்பே இராமலிங்க சுவாமிகளிடம் நந்தன் வரலாற்றைக் கேட்டிருந்தார்; நந்தனிடம் பேரன்பு கொண்டிருந்தார். அவன் வரலாற்றைப் "பழன மருங்கணையும்" என்ற நொண்டிச்சிந்தாகப் பாடி அனைவரையும் மகிழ்வித்தார். இப்போது நந்தன் சரித்திரத்தை அரியதோர் இசைநூலாகப் பாடிவைக்க வேண்டுமென்று உறுதிபூண்டார். "பாரதி! நான் எத்தனையோ ஏடுகளைப் படித்தேன். என்ன பயன்? படிப்பில்லாத நந்தன் பெற்ற ஆனந்தம் எனக்கு வரவில்லை. எவ்வளவு கற்றும் கேட்டும் நான் ஒருவரி சுயமாக எழுத முடிவதில்லை. நீ புத்தகங்களைப் படிக்காமல் நினைத்ததும் கவி பாடுகிறாய். படிப்பிலில்லை; பக்தி பரவசத்திலேதான் இன்பமிருக்கிறது. பாரதி, நீ நந்தன் சரித்திரத்தை முற்றிலும் பாடு!" என்று தூண்டினார் அண்ணாவையர். தீக்ஷிதரும், சிவசாமி ஐயரும் அவ்வாறே வேண்டித் தூண்டினர். "வருங்காலத்தில் உன்னை எல்லோரும் புகழ்ந்து போற்றுவர்" என்று சிவசாமி ஐயர் பாரதியை வாழ்த்தினார். பாரதியார் உள்ளத்தில் பக்தி பரவசம் பொங்கியது. அன்று முதல் அவர் தனிமையை நாடினார். சில நாட்களுக்குப் பிறகு அவர் எங்கோ ஓடிமறைந்தார்.

௮

மணியிழந்த நாகம்போலே அண்ணாவையர் பாரதியைக் காணாமல் வருந்தினார். ஒரு வாரம் தேடினார். நந்தனார் திருப்புன்கூர் சிவலோகநாதரையே உபாசித்தார். அக்கோயிலையே வெளியேயிருந்து தரிசித்தார். ஒருநாள் அக்கோயிலுக்கு அண்ணாவையர் தரிசனம் செய்ய வந்தார். சிவலோகநாதர் சந்நிதியிலே ஆனந்தக் கண்ணீர் விடுத்து, பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து தியானித்துக் கொண்டிருந்தார் பாரதியார். அவர் முன்னே காகிதமும் எழுதுகோலும் இருந்தன. அண்ணாவையர் இழந்த செல்வம் எதிர்ந்ததுபோல மகிழ்ந்தார். பாரதியார் எழுதிவந்த நந்தன் சரித்திரத்தைக் கண்டு மகிழ்ந்தார். "இப்படிச் சொல்லிக் கொள்ளாமல் வரலாமா; நான் ஏதாவது குற்றம் செய்தேனா? வாரும்; வண்டி தயார்; ஆனைதாண்டவபுரத்தில் வந்து எழுதும்!" என்றழைத்தார் அண்ணாவையர்.

"தாங்கள் என்னைச் சொந்தப் பிள்ளைபோல நடத்தினீர்கள்; அனாதையாகத் திரிந்தேன்; புகல் கொடுத்தீர்கள்; உங்களை ஒருநாளும் மறவேன். எனினும் தீக்ஷிதர் சொல்லைக் கேட்டது முதல் என் மனம் நந்தனிடமும் அவனுக் கருள்புரிந்த நடராஜப்பெருமானிடமும் லயித்துப்போயிற்று. சௌக்கியமாகச் சாப்பிட்டுக்கொண்டிருப்பதே என் வேலையல்ல. இனி நான் இறைவனுக்கே ஆள்; அவனடிப்பற்றே பற்று; மற்றைப் பற்றெல்லாம் துறந்தேன். அவனையும் அவன் மெய்யடியாரையும் பாடுவதே என் இன்பம். அதுவே என் வாழ்வின் கடமை. அதை உணர்ந்ததும் எனக்குப் பிறர் மனையில் இருக்க முடியவில்லை. தந்தையிடம் மகன் ஓடிவருவது போலச் சிவபெருமானைக் காண ஓடிவந்தேன். இன்றுமுதல் நான் திருவருளுக்கே ஆளானேன்" என்றார்.

௯

எனினும் அண்ணாவையர் பாரதியாரைத் தம்முடன் அழைத்து வந்தார். ஆனால் பாரதியார் தனியாக ஓர் அறையில் ஜபதபம் செய்வதும், கவியாலை புனைவதுமாயிருந்தார். உஞ்சவிருத்தியெடுத்தே உண்டார். அண்ணாவையர் பாரதியாருக்குக் குறிப்பறிந்து வேண்டிய உதவி வலுவில் புரிந்தார். பாரதியார் ஆறுமாதத்தில் நந்தன் சரித்திரத்தை முடித்தார். அதன் பாடல்கள் சுற்றுப்புறத்தில் விரைவில் பரவின. பாரதியாருக்கு இப்போது சுமார் முப்பது வயதிருக்கும். இக்காலம் அவர் ஆனைதாண்டவபுரத்திலும் சுற்றிலுமுள்ள கிராமங்களிலும் தம் பாடல்களைக் கொண்டு நந்தன், காரைக்காலம்மை, இயற்பகை நாயனார் முதலிய அடியார் சரித்திரங்களைச் செய்யத் தொடங்கினார். கதைக்குப் பத்துப் பதினைந்து ரூபாய்தான் கிடைக்கும்; அதை அவர் அப்படியே அண்ணாவையரிடமே வட்டிக்குப் போட்டுவைப்பார். பாரதியார் நந்தன் சரித்திரப் பாடல்களைக் கேட்கப் பெருந்திரளாக ஜனங்கள் கூடுவர். அவர் புகழ் எங்கும் பரவியது. அதன்பிறகு பாரதியார் பல ஊர்களுக்குச் சென்று நந்தன் சரித்திரம் செய்தார். சிதம்பரம், மாயவரம், நாகபட்டினம், முடிகொண்டான், நாகூர், காரைக்கால் முதலிய பல இடங்களில் காலக்ஷேபம் பண்ணிப் புகழ்பெற்றார். அவர் பாடல்கள் தமிழ் நாடெங்கும் பரவின. காரைக்காலில் இருந்த சீசைய்யா என்னும் ஒரு பிரெஞ்சு உத்தியோகஸ்தர் நந்தன் சரித்திரங் கேட்டு மகிழ்ந்து அதை முதன்முதல் அச்சிட்டார். மாயூரம் கவிவாணர் வேதநாயகம் பிள்ளை பாரதியாரைப் பெரிதும் ஆதரித்தார். அவர் கீர்த்தனங்களுக்கு இராக தாளங்கள் அமைத்து இனிமையாகப் பாடினார் பாரதியார். நந்தன் சரித்திரத்தை அவர் பலருக்குப் பாடம் பண்ணிவைத்தார். அவர்களில் ஒருவர் தஞ்சாவூர் கிருஷ்ணபாகவதர். சிதம்பரத்தில் விருஷபத்வஜ தீக்ஷிதர் பாரதியாரை உபசரித்துப் போற்றினார். ஆறுமுக நாவலர் நந்தன் சரித்திரத்தைக் கேட்டுப் பூரித்தார்; ரூ. 15 சன்மானமும் கொடுத்தார். வித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அப்பாடல்களை எங்கும் பரப்பமுயன்றார். இக்காலம் தியாகராஜ கீர்த்தனங்கள் புகழுறப் பரவின. பாரதியார் பாடல்களைத் தியாகராஜர் கேட்டு மகிழ்ந்தார். "வருகலாயோ" என்ற பாட்டு அவரைப் பரவசப்படுத்தியது. இருவரும் ஒருநாள் சந்தித்து அளவளாவியதாகச் சொல்லுகிறார்கள். சிலர் இருவரும் நேரே சந்திக்கவில்லை என்பர். தமிழ் நாட்டில் திக்விஜயம் செய்து 1847-ம் ஆண்டு பாரதியார் ஆனைதாண்டவபுரத்திற்கு வந்தார். அங்கே இயற்பகை நாயனார் சரித்திரம், திருநீலகண்ட நாயனார் சரித்திரம், காரைக்கால் அம்மையார் சரித்திரம், ஞானச்சிந்து, ஞானக்கும்மி, தனிக்கீர்த்தனங்கள் முதலிய பல அரிய இசை நூல்களை எழுதினார். ஆனால் அவை நந்தன் சரித்திரம் போலப் பிரபலமாகவில்லை.

க௦

இப்போது பாரதியாருக்கு வயது நாற்பத்தெட்டு. இச்சமயம் பாரதியாரைக் கண்போல் காத்த **அண்ணுவையர்** சிவனடி சேர்ந்தார். தமது காலக்ஷேபப் பணத்தை யெல்லாம் அவர் அண்ணுவையரிடமே கொடுத்திருந்தார். அவர் மகன் வெங்குவையருடன் நீண்டநாள் வாதாடிப் பணத்தைப் பெற்றார் பாரதியார். இச்சம்பவங்கள் அவர் மனத்தை முற்றிலும் மாற்றின. மேலும் இச்சமயம் **தியாகராஜ கீர்த்தனங்கள்** மற்றப் பாடல்களை வென்றோங்கின. அவற்றின் பெருமையைப் பாரதியாரே ஒப்பினார். “தாம் வந்த காரியமும் முடிந்தது. மனிதன் பாடவே பிறந்தவனல்லன். பக்தி செய்ய வேண்டும்: அடியாருடன் கூடவேண்டும்” என்று தீர்மானித்தார் பாரதியார். தமது பணத்தை மாயூரம் பாங்கியில் போட்டார். பதினாறாண்டுகள் எங்கெங்கோ சுற்றினார். இக்காலம் **அருட்சோதி வள்ளலார்** சத்திய ஞானசபை எழுப்பிச் சமரஸ முழக்கம் செய்தார். அவருடனே பாரதியாரும் கொஞ்சகாலம் தங்கியிருந்தார். 1876-ல் அருட்சோதி வள்ளலார் திருவுரு மறைந்தது. அதன் பிறகு பாரதியார் மாயூரம் வந்தார். அப்போது அவருக்கு 65 வயதிருக்கும். மாயூரம் இராமசாமி சிவன், மஹா வைத்தியநாத ஐயர், வீணை வைத்தியநாத ஐயர் முதலிய பேரிசைப்புலவர் பாரதியார் பாடல்களைப் பாடினர். எனினும், தியாகராஜ கீர்த்தனை வெள்ளத்தின்முன் நந்தன் சரித்திரப்பாடல்கள் நிலை நிற்கவில்லை என்று பாரதியார் நம்பினார். “நாளை வேதநாயகம் பிள்ளை வீட்டிற்கு வாருங்கள், கிருஷ்ணபாகவதர் கதை; தங்கள் நந்தன் சரித்திரம் பெற்ற நித்தியப்புகழை அங்கே அறிவீர்” என்றார் இராமசாமி சிவன்.

வேதநாயகம் பிள்ளை பாரதியாரைக் குதூகலமாக வரவேற்றார். **கிருஷ்ணபாகவதர்** சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து பாரதியார் ஆசியைப்பெற்று ‘இன்றே சுதினம்’ எனப்பொங்கி மகிழ்ந்து நந்தன் சரித்திரத்தை உருக்கமாகச் செய்தார். ஆயிரக்கணக்கான பேர் கதைகேட்டு மகிழ்ந்தனர். முடிவில் “நந்தன் சரித்திரங்கூட மறைந்துபோனது என்றிருந்தேன்; கிருஷ்ணா என் புகழைக் காத்தாய்; நீ இப்படியே சத்காலக்ஷேமம் செய்து க்ஷேமமாயிரு” என்று பாரதியார் பாகவதரை வாழ்த்தினார். நந்தன் சரித்திரத்தை, பாரதியாருக்குப் பிறகு கிருஷ்ணபாகவதர் நாடெங்கும் பிரபலமாக்கினார்.

கக

இறுதி நாட்களில் பாரதியார் **மாயூரம் மயூரஸ்வாமி கோயிலுக்கருகி**லுள்ள ஒரு வீட்டில் இருந்தார். இப்போது அவர் கதை செய்து சேர்த்த பொருள் நிரம்பஇருந்தது. அதைக்கொண்டு தான தர்மங்களைச் செய்வதும், சிவனுக்குப் பூமாலை சூட்டுவதும், தியான ஜபங்கள் செய்வதுமாகக் காலங்கழித்தார் பாரதியார். அவர் மாயூரம் கோயிலிலும் சிதம்பரம் கோயிலிலும் தேசாந்திரிக் கட்டளை ஏற்படுத்தினார். அது இன்றும் நடைபெற்று வருகிறது. ஏழைகளுக்கு அன்னவஸ்திரம் அளித்தார்; ஏழை பிரமசாரிகளுக்கு விவாகம் செய்து கொள்ளப்பொருளீந்தார்; இளம் புலவர்களை ஆதரித்துப் பிரபலப்படுத்தினார். வித்வான்கள் அவரைத் தரிசித்து நல்ல கீர்த்தனங்கள் வாங்கிச் செல்வர். கிருஷ்ண பாகவதர் சிலகாலம் உடன் இருந்து பாரதியார் பாடல்களைப் பயின்றார். 1881-ம் ஆண்டு மஹாசிவன்ராத்திரி இரவு மயூரநாதனைத் தரிசித்துவந்து சிவசிந்தனையுடன் படுத்தார் பாரதியார்; அனாயாசமாக அவர் ஆவி சிவனடி சேர்ந்தது. பூதவுடல் பூதங்களைச் சேர்ந்தது. நாதவுடலாகிய நந்தனார் சரித்திர கீர்த்தனையுருவில் **வரகவி கோபாலகிருஷ்ண பாரதியார்** என்றும் வாழ்கிறார்.

கஉ

கோபாலகிருஷ்ண பாரதியார் உபதேசங்கள்

1. அம்பலவாணரே அடைக்கலம் என்று நம்பி வந்தேன்; தாயும் தந்தையும் நீ; உன்னைத் தவிர வேறொருவரும் இல்லை.

2. பார்ப்பார் பறையரென்று பாராது, பரிதிபோல் காப்பாற்றும் அல்லவோ கண்ணுதலே.

3. பறையனாய்ப் பிறந்தாலும் பரகதி தேடலாம்; உறுதி மாத்திரம் வேண்டும்.

4. நித்தம் ஒருதரம் நினைவுடனே சிவன் சத்தமிருந்தால் என்றும் தாழ்வில்லை.

5. பக்தி செய்குவீரே நடேசனைப் பக்தி செய்குவீரே; நமக்கினியும் பயமேது நடராஜன் இருக்கும்போது?

6. சங்கரனைத் துதித்தாடு; இனிச் சனனமில்லை என்று பாடு.

7. மனிதச் சென்மத்தில் (சிவனைத்) தேடு; நல்ல மாதவத்தோர்களைக் கூடு.

8. பத்தி வலை வீசிப் பார்த்திடும் வேளையில், தத்திக் குதித்திடுந் தாண்டவன்.

9. தில்லை வெளியிலே கலந்து கொண்டால் அவர் திரும்பியும் வருவாரோ? பெண்டு பிள்ளைகள் வெறுங் கூட்டம்; அது பேய்ச்சுரைக்காய்த் தோட்டம்.

10. சிவசிந்தனை செய்து கொண்டிருந்தால் எந்த விதமும் கரையேறலாம்.

11. ‘எத்திசையும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய் நிறைந்திருக்கும், வஸ்து’ வென்று, அம்பலவன் மலரடியே தினந்தோறும் பக்தி செய்து கொண்டிருந்தால் முத்தி பெறலாமே.

12. பித்தந் தெளிய மருந்தொன் றிருக்குது — பேரின்ப மன்றுக்குள்ளே.

13. யாருக்குப் பொன்னம்பலவன் கிருபையிருக்குதோ, அவனே பெரியவனாம். பாருக்குள் வீடுகள், மாடுகள், ஆடுகள் பணமிருந்தால் அவன் பெரியவன் ஆவனோ? வேத புராணங்கள் ஓதித்தான் என்ன? வேலைசூழ் பணைமாதரால் என்ன காரியம்? சாதனையாக வாராதொரு நாளும். மண்ணாசை, பெண்ணாசை பொன்னாசை பொல்லாது.

14. மானாபிமானம் விட்டுத் தானாகி நின்றவர்க்குச் சேனாதிபதி போலே ஞானாதிபதியுண்டு.

15. கற்றோரும் கற்றோரும் களங்கமறிந்திடப் பெற்றோரும் பெற்றோரும் பேசாப் பெருமையில் உற்றோரும் உற்றோரும் பொன்னம்பலர் தன்னில்.

16. ஞானசபை போற்றி, நமச்சிவாயவென்று, சொல்லாதவன் கல்வி கல்லாதவன்.

17. சொல்லும் பொருளிறந்த துரியவடிவமாகி, அல்லும் பகலுமற்ற ஆனந்தப் பேரொளியைக் காணாத கண்ணென்ன கண்ணோ?

18. கர்ப்பவாச துக்கம் ஆனாலும் கேடு; கௌரி மனோகரனைத் தினம் நாடு.

19. நானன்றி நீயேது? நீயன்றி நானேது? நானாயுரைத்ததேது?

20. சித்தம் சிதம்பரம் ஆச்சுதடி-முன்னே செய்த வினையெல்லாம் போச்சுதடி. சுத்தப்ராம்ம மய மாச்சுதடி - அதைச் சொல்லத் தெரியுமோ பாருங்கடி..

ஓம்சிவம்

தமிழுக்கு இந்நாட்டில் முதன்மைபெற உரிமையுண்டு. அதுதான் முன்மொழி, தொன்மொழி. இதை யாரும் மறுக்கமுடியாது. நாடெல்லாம் பரவியிருந்து, இன்று ஒரு சிறு எல்லையில் துடித்துக்கொண்டிருக்கும் நம் நாட்டு முன்மொழியான தமிழ் மொழி வளர்ச்சியும், அரசியல் இயக்கத்தில் ஆதரவுபெற வேண்டும். வடமொழிக்கும், ஹிந்திக்கும் எவ்வளவு பொதுவுரிமை யுண்டோ அதைவிட நூறு பங்கு தமிழுக்கு உண்டென்போம். இன்று தமிழ் பேசுவோர் . தொகை குறைந்ததினால், தமிழின் பெருமை குறைந்ததாகுமா? வேதம் படிப்போர் மிகச் சிறு தொகையினர் எனில், வேதத்தின் பெருமை குறைந்துபோமா? ஒவ்வொரு தேசாபிமானியும் நமது நாட்டின் பழந் தாய்மொழியான தமிழைக் கற்றுப் பேசிப் பரப்பக் கடமைப்பட்டிருக்கிறான். உபநிடதங்களையும் கீதையையும் பேச்சு வழக்கில்லாத ஆரியங்கற்றுப் படிப்பதுபோலவே, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள், திருவாய்மொழி, பட்டினத்தார், தாயுமானார், அருட்பா போன்ற ஒப்பற்ற அற்புத நூல்களை நமது நாட்டினர், பாரத சமுதாயத்திற்கே உரிய அருட் செல்வமாகக் கருத வேண்டும்; பயில வேண்டும். உலக வொற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் உரிய எல்லையற்ற அறிவுத்திரள் தமிழிற் குவிந்து கிடக்கிறது. ஆறு மாதத்தில் எழுதப் படிக்கத் தமிழைக் கற்கும் ஒரு புதிய கல்வி முறை உள்ளது. அதன்படி வட நாட்டார், மேற்கு நாட்டார் எல்லோரும் தமிழைக் கற்கலாம். முத்துக் கோத்தாற்போல முப்பது தனித்தனி எழுத்துக்கள்! இரண்டு நாட்களில் தமிழ் ஒலி வடிவைக் கற்றுக்கொள்ளலாம். கூட்டெழுத்தின் தொல்லையில்லை. அஃறிணைப் பொருட்களெல்லாம் 'ஆணா பெண்ணா' என்று கண்டுபிடித்துக் கொண்டிருக்கும் தொல்லையில்லை. இந்தப் பால் விதிகளால், ஆரியம், ஹிந்தி, பிரெஞ்சு, லத்தீன் முதலிய மொழிகள் கடினமாயிருக்கின்றன. தமிழ்ச் சொற்கள், "ஹ, ஹூ, ஹப்" என்று மூச்சைப் பிடுங்கா; அமைதியாகக் குறைந்த மூச்சில் நிறைந்த எண்ணங்களை வெளியிடத் தக்கனவா யிருக்கின்றன. இன்னும் பிறமொழிகளுக்கில்லாத எத்தனையோ நலங்கள் தமிழுக்குள்ளன. தமிழ் வளர்ச்சியை நாட்டுக்கே பொதுவான ஓர் இயக்கமாக்குவது நாட்டன்பர் கடமை. "இதேதடா பைத்தியம்! ஆங்கிலமும், ஹிந்தியும் வந்து முற்றுகை போட்டுக் கோட்டையைப் பிடிக்கின்றன! இப்போது தமிழைப் பொதுமொழி யாக்குவதாம்! முப்பதாம் பசலி ஆளா யிருக்கிறீரே; போங்காணும், தமிழ்ப் பித்தம் பிடித்தலைகிறீர்" என்று சிலர் சொல்லுவர். அதையும் வாழ்த்தாகக் கொள்வோம். தமிழரசியின் கொடியைக் கடைசி இரத்தத்துளியிருக்குமட்டும் பற்றி உரிமைப்போர் புரிவோம். நமக்கு இது ஒரு பெரிய சோதனைக் காலம். உலக பலம் பெற்ற ஆங்கிலமும், தேச பலம் பெற்ற ஹிந்துஸ்தானியும் தமிழை வளைத்துக் கொண்டிருக்கின்றன. தமிழ் வீரர் என்ன செய்யப்போகின்றனர்? இன்னும் மட்குட விளக்குப் போலிருப்பார்களா? அல்லது பிற மொழிகளை உரப்போட்டுத் தாயின் சோலையை வளர்ப்பார்களா? இனியும் உறங்கினால், கால வெள்ளம் நம்மை அடித்துச் சென்று ஊழிக் கடலில் தள்ளும். இன்னும் உறங்கினால், தமிழ், பிற மொழிகளுக்குப் பலியாகும்.

—தமிழுணர்ச்சி.

*நாடோடி

(ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸ், பி. ஏ.)

[மதராஸ் கடற்கரையில் அலைகள் உறுமுகின்றன. நிலவு தோன்றும் நேரம். தனிமையான இடத்தில் ஒரு கனவான் வீற்றிருக்கிறார். வறுமையால் பீடிக்கப்பட்ட ஒரு நாடோடி அவரை அணுகுகிறான்.]

கனவான் பாட்டு

"வெண்ணிலாவே"

தன்னையறிந் தின்ப முற வெண்ணிலாவே—ஒரு
தந்திரம்நீ சொல்ல வேண்டும், வெண்ணிலாவே!
நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே—
அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே.

நாடோடி: என்ன கொடிய உலகம்! நான் இரண்டு நாளாகப் பசியால் வாடித் திரிவது! அதோ அவன் கொழுக்கத் தின்றுவிட்டு ஒய்யாரமாக அலைகளின் கீதத்தில் ஈடுபட்டு உட்கார்ந்து கொண்டிருக்கிறான். போதாததற்குப் பாட்டுப் பாடுகிறான். தெய்வமே! அவன் எவ்விதம் என்னைவிட உயர்ந்தவன்? அவனுக்கென்று நீ தனி உலகம் சிருஷ்டிக்க வில்லையே? எவ்விதத்தில் நான் அவனுக்குக் குறைந்தவன்? புத்தியிலோ? இல்லை. அவன் மாதிரி எனக்கும் ஒரு பணக்காரத் தகப்பனிருந்தால் நானும் அவனுக்கு மேல் படித்திருப்பேன். தோற்றத்திலா? வயிற்றுச் சோற்றுக்கும் உடுக்க உடைக்கும் கெதியில்லாத இந்த ஆண்டிக்கு அழகு எவ்விதமேற்படும்? குணத்திலா? பணம் குணத்தை மூடுகிறது! ஏ தெய்வமே! என்னால் பசி பொறுக்க முடியவில்லை. எப்படியாவது அவனிடம் இன்று பணம் பறித்தே தீருவேன்.

[தனியே பாடிக்கொண்டிருக்கும் கனவானை நாடோடி நெருங்குகிறான்]

நாடோடி: [பரிகாசமாக] ஸார், என்ன உல்லாசமாகப் பாடிக்கொண்டிருக்கேள்?

கனவான்: யாரப்பா நீ? முன்பின் தெரியாத மனிதர்களிடம் ரொம்ப சரசங் கொண்டாடுகிறாய்.

நாடோடி: ஏன்! உனக்கிருக்கும் அந்தஸ்து எனக்கிருந்தால், ஒரு ஆசாமியையும், நான் கிட்டே அணுகவிடமாட்டேன்.

கனவான்: உன்னை யார் என்று எனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. உன் பெயரென்ன?

நாடோடி: வேலன். விறகு வெட்டியின் மகன்! நீ யார் என்றும் எனக்குத் தெரியாது.

கனவான்: விறகு வெட்டியின் மகன்! ஆஹா! என்ன உன்னதமான தொழில்! மரத்தினடியிலிருந்து வேலை. சூரியனின் பொன்னிற கிரணங்கள் மரத்தினிலைகளில் நர்த்தனம் புரிந்து கொண்டிருக்கையில்....

நாடோடி வேலன்: என்னமோ கவிபோல பேச ஆரம்பிச்சுட்டே. நிறுத்துங்காணும்! உன் அப்பன் பெயர்?

கனவான்: என் தகப்பனாரா? அவர் ஒரு பெரிய வக்கீல். உன் தகப்பன் மாதிரி அவரும் மிகவும் நல்லவர்தான்.

வேலன்: ஓகோ! ஆசாமி பலே ஆள்தான்!

கனவான்: உனக்கு இப்போ என்ன வேண்டும்?

வேலன்: சாப்பாடு.

கனவான்: ரொம்ப பசிக்கிறதோ? (ஜோபியிலிருந்து சாக்லெட் எடுத்து) இந்தா சாக்லெட்டைத் தின்னு!

வேலன்: [அதை வாங்கிச் சாப்பிட்டு விட்டு] நீ எப்பொழுதாவது வேலை செய்வதுண்டா?

கனவான்: ஒருவிதத்தில்....

வேலன்: கவலையில்லாதே திரிகிறது. அது தானேங்காணும்?

கனவான்: இதுதான் உன் நன்றியா? நான் உனக்குக் கொடுக்க முடியாதென்று சொல்லியிருந்தால் நீ என்ன செய்திருப்பாய்?

வேலன்: என்னவா? ஒரே குத்தா குத்தியிருப்பேன்.

---

* அகில இந்திய ரேடியோ திருச்சி நிலயத்தில் 17-2-40-ல் நடித்த நாடகம்.

கனவான்: சே, என்ன அவ்வளவு கொடூர பசியா உனக்கு?

வேலன்: பல வருடங்களாகப் பசி என்னை வாட்டி வருகிறது. நானே, என்போல ஆயிரக் கணக்கானவர்களோ பட்டினி கிடந்து செத்தால் உனக்கென்ன கவலை? •

கனவான்: எனக்கும் பசி உண்டு. ஆனல் அதற்கு நான் அடிமையாகவில்லை. அப்பனே, உனக்குக் கலியாணம் ஆய்விட்டதா?

வேலன்: ஆள்பாடே திண்டாட்டமாயிருக்கு. கல்யாணம்....வேறயா? பேஷ்!

கனவான்: அதிலென்ன தப்பு?

வேலன்: உனக்குப் புத்தியிருந்து பேசுகிருயா? என் வயிற்றுச் சோற்றுக்கே நான் தாளம் போடுகிறேன். ஒருத்தியைக் கட்டிக் கொண்டு அதோடேயும் மாரடிக்கணுமா? போன ஐரோப்பிய யுத்தம் நடந்தது முதல்.... அதாவது 20 வருஷங்களாக....என் ஜென்மம் நாய்க்கும் கீழாக இருக்கிறது.

கனவான்: என்ன! மகா யுத்தத்தில் நீ என்ன செய்தாய்? உன் வயதென்ன?

வேலன்: நாற்பது.

கனவான்: எனக்கு வயது நாற்பத்தைந்து. நான் பல நாடோடிகளைக் கண்டு கேட்டிருக்கிறேன். அவர்கள்....

வேலன்: நிறுத்து உன் பேச்சை....இப்படி என்னுடன் பேசிக்கொண்டே போனல் யாராவது நமக்குத் துணைக்கு வந்துவிடுவார்களென்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிருயோ? ஆனல் உனக்கு நான் தீங்கு செய்வது இஷ்டமா?

கனவான்: முடிந்தால் செய்! அது கிடக்கட்டும். நீ சண்டைக்கு போனேனென்றுயே? அதன்பின் உன்னல் ஒரு உத்தியோகமும் சம்பாதித்துக் கொள்ள முடியவில்லையா? சண்டைக்குப்போய் வந்தவர்களெல்லாம் நல்ல சம்பளம் பெற்று வருகிறுர்களே, உனக்குமட்டிலும் கிடைக்காதது ஏன்?

வேலன்: எனக்கும் ஆசைதான்? யார் கையில் வைத்துக்கொண்டு கொடுக்கக் காத்துக் கொண்டிருக்கிறுர்கள்? நிமிர்ந்து நின்று பேசினல், கல்தா கொடுத்து விடுகிறுர்கள். ஆனல் உன்னைப் போன்று உள்ளவர்கள், நாங்கள் எக்கேடு கெட்டாலென்ன என்று இருக்கிறுர்கள். எனக்கு வேலை கிடைக்காமலில்லை. இங்கே ஒரு மாதம்! அங்கே இரண்டு மாதம்! பட்டினி மூன்று மாதம்! காலசக்கரம்....என்ன? ஏன் உற்றுப் பார்க்கிருய்? உன் டிரைவரை இங்கு அழைக்கிருயா?

கனவான்: நண்பா! அந்த முட்டாள் இங்குத் தவறி வந்து நம் பேச்சைக்கெடுக்காமலிருக்க வேண்டுமென்பதுதான். நீ எந்தப் புட்டாளத்தி லிருந்தாய்?

வேலன்: அதைப் பற்றி உனக்கென்ன?

கனவான்: நிஜமாக, ஒன்றுமேயில்லை. எப்பொழுது சண்டைக்குச் சேர்ந்தாய்?

வேலன்: சரி, சரி, என்ன தப்பித்துக் கொள்ள பார்க்கறே?

கனவான். வேலா! ஏன் எழுந்திருக்கிருய்? அவசர காரியம் ஒன்றுமில்லையே? அடே! இதென்ன விபரீதம்! கையில் ஏன் கத்தியை எடுக்கிருய்?

வேலன்: போதும் உன் சாகசமெல்லாம்! இப்படியே வம்படிச்சிண்டிருந்தால் யாராவது உதவிக்கு வரமாட்டார்களா என்பதுதானே உன் மனக்கோட்டை. இதோ, அதைப் பெயர்த்தெறிகிறேன்!

கனவான்: சீ, பைத்தியமே உட்கார். பூச்சாண்டி காட்டாதே! நீ வருவதற்குமுன் எனக்கு ரொம்ப கஷ்டமாயிருந்தது. பேசுவதற்கு ஆளே இல்லாமல் தவித்தேன். கடவுள் தான் உன்னை என்னிடம் கொண்டு வந்தார்.... சரி. உன் தகப்பன் விறகு வெட்டி. நீ....

வேலன்: போதும். உன் எக்களிப்பு! செத்துப்போனவரை—ஏன் சந்திக்கிழுக்கிருய்?

கனவான்: விளையாட்டா? சே கொஞ்சமேனுமில்லை. நீ எந்தெந்தத் தேசங்களெல்லாம் போய் வந்திருக்கிருய்? சொல்லப்பா!

வேலன்: தேசமா? ஆயிரக்கணக்கான மைல்கள் நடந்திருக்கிறேன். என் காலடி படாத மண்ணும் இந்த லோகத்தில் உண்டா?

கனவான்: சபாஷ்! நடந்து, நடந்து, நடந்து....

வேலன்: ஆம்.

கசூசு

கனவான் : ஒவ்வொரு தேசத்தின் ஹிருதயத்திலும் பாய்ந்து, பாய்ந்து....ஊடுருவிப் பாய்ந்து....சபாஷ்!

வேலன் : மலைச் சாரல்களில் மாலை வேளைகளில் சந்தோஷமாகத் திரிவதும், சந்திரன் ஆகாசத்தில் மலர்ந்திருக்க, மரத்தினடியில் உறங்குவதுந்தான் என் ஜீவிய சரித்திரம்.

கனவான் : பறவைகள் கிளைகள் நோவுறாமல் தம் பஞ்சனைய கால்களால் அழுத்தி, இனிய கீதத்தை இயற்கைத் தேவியின் திவ்ய தூயிலில் கலக்கும்படி வாரி, வாரி இறைக்குமல்லவா?

வேலன் : கீதமா? சே! பறவைகளை நான் கொன்றதுதானுண்டு.

கனவான் : நக்ஷத்திரப் போர்வை போற்றிய வானத்தின் கீழ்ப் பனிநீர் உறங்கும் புல்மீது சயனம்! பணத்திற்கும் கிடைக்காத சுகம்!

வேலன் : புல் தரையில் நான் புரண்டு கொண்டிருக்கையில் உன் போன்ற முதலாளிகள் ஆனந்தமாக, விதவிதமானபானங்களைக் குடித்துக் கவலையற்று மெத்தையில் உருளுவது!

கனவான் : அடிவானத்தினின்றும் எழும் குளிர்ந்த தென்றலைப் பருகுவதைக் காட்டிலும், நான் குடிக்கும் பானங்கள் ருசி என்பதா உன் கட்சி? இரவில் குயிலினங்கள் கானத்தில் மதி மயங்கி உறங்குவதைக் காட்டிலும் கிராமபோன், சினிமா சங்கீதம் ஒருபடி மேலென்று நீ கருதுகிறாய்?

வேலன் : ஓய்! தந்திரமாய்ப் பேசி என்னை ஏமாற்றிவிடலாம்னு? அது பலிக்காது அப்பேன்!

கனவான் : உன்னை நான் அறிவாளி என்றல்லவோ எண்ணினேன்.

வேலன் : பணத்துக்கும் அறிவுக்கும் என்ன சம்பந்தம்? என்போன்ற கதியற்றவர்கள் உழைத்து லாபஞ் சேர்த்துக் கொடுத்தால், உல்லாசமாகப் பேசுவாய். இன்னமும் பேசுவாய். வயிற்றுச் சோற்றுக்கு உழைக்கவேண்டுமென்ற எண்ணம் உன் குறுகிய புத்தியில் உதித்தாலல்லவா உனக்கு ஈவு இரக்கம் என்போன்றவர்கள் மீது தோன்றும்!

கனவான் : நீ எண்ணுவது முற்றும் தவறு. என் தகப்பனார் ரொம்ப பணக்காரரென்பது உண்மை. ஆனால் அவர் உழைக்கவில்லையென்று நினைக்கிறாய்?

வேலன் : பணத்தின் குழந்தை நீ!

கனவான் : ஆம். ஒரு செல்வந்தரின் செல்வப் புதல்வன்! பணக்காரர்கள்மீது உனக்கு ஏனிந்தக் கோபம்? முதலாளிகளில்லையேல் தொழிலாளி ஏது? தொழிலாளிக்கு உழைக்கும் பொறுப்பு ஒன்றுதான். முதலாளிக்கோவெனில் பல பொறுப்புகள். அதுவுமன்றிச் சரீரத்தாலும் மூளையின் வன்மையாலும் உழைக்க வேண்டும்.

வேலன் : உன் கட்சி என்ன? பணக்கார முதலாளிகள் தாராள சிந்தையுடையவர்களென்று சொல்ல வருகிறாயா?

கனவான் : உன் அபிப்பிராயங்களிருக்கட்டும்! ....நீ மகாயுத்தத்தில் 'பிரான்ஸில்' சண்டை போட்டாயா?

வேலன் : பலமாக.

கனவான் : மனப்பூர்வமாகச் சண்டை போட்டாயா?

வேலன் : இல்லாமல்?....

கனவான் : யாரங்கே? டிரைவர்!

டிரைவர் : எஜமான்.

கனவான் : இங்கு ஏன் வந்தே?

டிரைவர் : இந்த ஆசாமியைக் கண்டு வந்தேன்.

கனவான் : அதெல்லாம் ஒன்றும் பயமில்லை. நாங்களிருவரும் ஆத்ம நண்பர்களாய்ப் போய் விட்டோம். இங்கே வா! கிளப்புக்குப் போய் இவனுக்கு அரை ரூபாய்க்குப் பலகாரம் வாங்கிண்டு வா!

டிரைவர் : உத்தரவு எஜமான். (போகிறான்).

கனவான் : நண்பனே! அதோ விருட்சங்களைப்பார்! என்ன அழகு? அவைகளைப்பற்றிப் பேசுவோம். அவைகளினடியில் உறங்கி யிருக்கிறாயா?

வேலன் : நேற்றிரவுகூட அங்கேதான் உறங்கினது.

கனவான் : என்ன ரமணீயம்! இயற்கைத் தேவியின் துயில் பஞ்சவர்ணக்கிளியின் அழகைவிட எத்தனை ஆயிரம் மடங்கு ஜோதியாக விருக்கிறது?

—→

வேலன் : உன் போன்ற சீமான்கள் மோட்டார்காரில் உருண்டுகொண்டே போனால் நாட்டுப்புறத்தின் இயற்கை அழகை எவ்வாறு உணர முடியும் ?

கனவான் : வாஸ்தவம்தான். பணம் மிகுதி பெற்றிருந்தும், அதன் உபயோகத்தை நன்றாக அனுபவிக்கும் பாக்கியம் பணக்காரர்களுக்குக் கிட்டுவதில்லை. அழகை அவர்கள் அசட்டை செய்கிறார்கள்....நீ சந்திரிகையில் வனசஞ்சாரம் செய்திருக்கிறாயா ?

வேலன் : பல முறைகள்.

கனவான் : வானத்தில் நக்ஷத்திரப் பூக்கள் கொத்துக்கொத்தாய்ப் பூத்துத் தொங்க, அவைகளைக் கண்டு மனம் பூரித்தல் !—உன் கண்முன் ஆனந்தக் காட்சிகளின் ஸ்வர்க்க போகத்தை....

வேலன் : போதும். உன் எண்ணம் என்ன என்பதை அறிவேன். எனக்குப் பலகாரம் வாங்கிண்டு வா என்று சொல்லும் தோரணையில் ஒரு போலீஸ்காரனையும் அழைத்துவா என்று கண்ஜாடை செய்திருக்கிறாயா ? சொல் ! உண்மையைச் சொல் !....இல்லையேல் என் கத்தியின் பசிக்கு இரையாவாய்.

கனவான் : ஏனப்பா பதறுகிறாய் !

வேலன் : பதறுகிறேன் ! வெறி பிடித்த வம்பனே ! வை கீழே பணப்பையை !

கனவான் : பணமா ! என் கையில் ஒரு தம்படிகூட இல்லை. எல்லாம் அப்பா கிட்டத்தான்.

வேலன் : எத்தனை வைத்திருக்கிறார் ?

கனவான் : சுமார் 10 லக்ஷ மிருக்கும் என்று நினைக்கிறேன்.

வேலன் : அவ்வளவும் உன்னுடையது தானே ? தெய்வமே ! எனக்கு வேண்டியது இரண்டணு ! ஒரு நாள் ஒரு பொழுது உணவு.

கனவான் : வேலா ! நீ இந்த வனங்களில் சஞ்சரிக்கையில்....

வேலன் : நிறுத்து !....எதற்கு என்னை இங்கு நீ காக்க வைக்கிறாய் ?

கனவான் : நானா காக்கவைக்கிறேன் ? என்னைப் பிடிக்காவிட்டால் உன்னை யார் கையைப் பிடித்துக்கொண்டு போக வேண்டாம் என்று கெஞ்சுகிறார்கள் ?

வேலன் : சரி, யார் வந்தாலும் வரட்டும். ஒரு கை பார்க்கிறேன்.

கனவான் : நீ பட்டாளத்தில் சேர்ந்திருந்தேன் என்றாயே ? நல்ல உணவு உண்டா ?

வேலன் : பிரம்மானந்தமாக.

கனவான் : உடுக்க உடை !

வேலன் : இந்தக் கந்தலைப் பார்த்தாயா ?

கனவான் : என்ன ஆனந்தமாயிருக்கிறது ! அவைகள் பூமியின் வாசனையை வீசுகின்றனவே !

வேலன் : உனக்கென்ன உண்ண உணவும்....

கனவான் : ஆம்....

வேலன் : உடுக்க உடையும்....

கனவான் : ஆம் ! பேஷாக....

வேலன் : குடிக்க பானமும்....

கனவான் : நான் கேட்கவேண்டியதுதான்....

வேலன் : வேலை செய்து பிழைக்கவேண்டுமென்ற கவலையில்லை....

கனவான் : எனக்கும் சேர்த்து என் தகப்பனார் உழைத்துவிட்டார். நாங்களிருவரும் இணைபிரியா நண்பர்கள்.

வேலன் : வயிறு காய, மைல் மைலாக வேலைக்கு அலையவேண்டியதில்லை.

கனவான் : அந்த ஸ்திதியை நான் அடைந்தால், மிக்க பாக்கியம் பெற்றதாகக் கருதுவேன்.

வேலன் : வீண்பொழுது போக்க எனக்கு அவகாசமில்லை. உன் போன்றவர்கள் மோட்டார்கார்களில் விருடன் செல்ல, நான் என் நாடோடியாகத் தேச சஞ்சாரம் செய்யவேண்டும் ?

கனவான் : எல்லாம் ஈஸ்வரியின் லீலை ! விதியின் பயன் !

வேலன் : என் காலைப் பார் !

கனவான் : ஆம் வெந்து போய்விட்டது. என் கையில் பணமில்லை. இருந்தால் கட்டாயம் உனக்குக் கொடுத்திருப்பேன்.

வேலன் : போதும் ! உன் பாழடைந்த பேச்சு. காலிலிருந்து ரத்தம் ஆறாகப் பெருக நான் அலைய வேண்டியிருக்கிறது.

கனவான் : ஒரு நாள் உனக்கு அதிர்ஷ்டம் வந்தாலும் வரலாம். நடக்கப் போவதை யார் கண்டார்கள் ?

வேலன் : நீ ஜம்மென்று பாலிஷ் தேயாத பூட்ஸை மாட்டிக்கொண்டு உலாத்துவது.... எடு உன் பூட்ஸை !

கனவான் : என்ன திடீரென்று முரடனாய் விட்டாயே ?

வேலன் : எடுக்கிறாயா இல்லையா ? இதோ பார் கத்தி !

கனவான் : நிஜமாகவா ? நீ விளையாடுகிறாய் என்று நினைத்தேன்.

வேலன் : கட்டாயம் வேண்டும்.

கனவான் : பூட்ஸில்லையென்றா வருந்துகிறாய்? இதோ என் கால்களில் உள்ளதைக் கழற்றி எடுத்துக்கொள்....மெதுவாக....

வேலன் : கழற்றக்கூட சோம்பலா ? நின்றே வளர்ந்த செல்வக் குமரன்; உடம்பு குனியலாமா !.... சரி கழற்றுகிறேன்.... ஆ ஹா ! என்ன ? நான் கனா காண்கிறேனா ? இது உண்மையா ? உன் முழங்கால் உன் உடலினின்றும் பிய்த்துக்கொண்டு வந்து விட்டதே ! தெய்வமே ! காலில்லையே ! இது மரக் காலல்லவோ !

கனவான் : நண்பா, பதறாதே ! அந்தக் காலின் பூட்ஸையும் கழற்றிப் பார்.

வேலன் : ஐயோ. இதுவும் மரக்காலாகவிருக்கிறதே ! என்ன, இதென்ன விந்தை ! தோழரே, என் தவறை மன்னியும், மன்னியும் ! என் மூர்க்கத்தனத்தை மன்னித்தேன் என்று கூறும். இல்லையேல் என் மார்பு இரண்டாகத் துண்டிக்கப்படுவது திண்ணம். ஆம் ! சத்தியமாக !

கனவான் : வேலா. எழுந்திரு. ஏன் மனச்சஞ்சலமடைகிறாய் ? அவரவர்கள் பூர்வ கர்ம வினையை அனுபவிப்பதே இந்த வாழ்க்கையின் நாடகம். தொன்று தொட்டு யுகாந்தரமாக நடைபெற்று வருகிறது. கடவுள் தன்மை பெற்றவர்களும் தப்பினார்களில்லை. எனக்குப் பணக்குறைவில்லை. நினைத்ததெல்லாம் நிறைவேற்ற பகவான் எனக்குப் போதுமான சௌகரியம் கொடுத்திருக்கிறார். ஆனால், உன்னைவிட நான் சுகமாக வாழ்வதாகவா எண்ணிக்கொண்டிருக்கிறாய் ? இல்லை. இல்லை. ஆண்டவனின் லீலை அனந்தம்.

வேலன் : ஆம்....ஆம்....உண்மை....உண்மை !

கனவான் : நீ நாடோடியாக வாழ்க்கையைக் கழிப்பதற்கு மனங் கலங்குகிறாய். அதன் இன்பம் நீ உணரமாட்டாய். காலிழந்த என் மனத் துடிப்பை நீ எவ்வாறு உணரமுடியும் ? ஆனால் ஒன்று ! இப்பொழுது யுத்தம் திரும்ப ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. நீ இதில் சேரலாம் தற்செயலாக; மறுமுறை பிரான்ஸிற்குச் சென்று யுத்தம் புரிய நேரிட்டால், என் நிமித்தம் சற்று முனைந்து பூமியைத் தேடிப்பார்ப்பாயானால், நான் இழந்துபோன இரண்டு கால்களும், புதைந்து மண்ணோடு மண்ணாகிக் கிடப்பதைப் பார்க்கச் சந்தர்ப்பம் உனக்கு நேரிடலாம்.

வேலன் : தெய்வமே. நானென்று நினைக்க நீ........

(காற்றில் மிதந்துவரும் பாட்டு ஒன்று கேட்கிறது)

விதிவசமே—எல்லாம்—விதிவசமே (உலகில்)
மதிமிகு மறையோரும்—மாபெரு முனிவோரும்
கதியுற்ற கண்யரும்—கதியற்றயாவரும் (விதிவசமே)
சக்தியின் கூத்தன்றி—சக்தி வேறான்றுன
பக்தியின் மார்க்கமாய்—முக்தி தேடு மனமே.

தீனபந்து ஆண்ட்ரூஸ்

(ரா. நா.)

படித்துப் பட்டம் பெறலாம்; சில நாடுகளில் சிலருக்கு சர்க்கார் தயவினால் பட்டங்கள் கிடைப்பதுண்டு. ஆனால் காந்திஜீக்கு "மகாத்மா" என்னும் பட்டம் எப்படிக் கிடைத்தது? திலகருக்கு "லோகமான்யர்" என்னும் பட்டத்தை யார் அளித்தனர்? ஆண்ட்ரூஸ் பாதிரியாருக்கு "தீனபந்து" என்னும் திருநாமத்தை யார் வழங்கினர்? மக்கள் உள்ளங்களிலே தோன்றிய இப்பட்டங்கள் தங்களுக்குரிய தகைமையாளர்களைத் தாங்களாகவே நாடிக் கொண்டனவோ? இவ்வுலகில் ஒரு மகாத்மா தான் இருக்கமுடியும், ஒரு லோகமான்யர் தான் தோன்றமுடியும், ஒரு தீனபந்துதான் நடமாடமுடியும்.



இந்தியர் என்றவுடன் வெளிநாடுகளில் இருபெரியார்களைப் பற்றித் தான் பிறதேசமக்கள் நினைக்கின்றனர்: மகாத்மா காந்தி, கவியரசர் தாகூர். இவ்விருவர்களுடைய உற்ற தோழர் தீனபந்து ஆண்ட்ரூஸ். தாகூருக்கும் ஆண்ட்ரூஸுக்கும் குரு சிஷ்ய உறவு. தாகூர் இலக்கியங்களை ஆண்ட்ரூஸ் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அவைகளில் காணும் பொக்கிஷங்களை உலகுக்களிப்பார். கவியரசரின் விசுவ பாரதியில் அமர்ந்து கல்விப்பணியாற்றினார்; கலைவளர்ச்சிக்குப் பாடுபட்டார்; கவியின் களிப் பெருக்கில் மூழ்கி, நீராடிப் பேரானந்தம் பெற்றார்.

ஆனால் மகாத்மாவுக்கும் தீனபந்துவுக்கும் உள்ள உறவின் தன்மை வேறு. அடிகள் தரித்திர நாராயணனுக் குழைப்பவர், ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பவர், அடிமைத் தளைகள் உடைப்பவர். இந்தப் பணியில் தீனபந்து மனம் உவந்து ஈடுபட்டு இந்தியர்கள்வாழ்வில் ஆனந்தம் நிலைக்க அரும்பாடுபட்டார். மகாத்மாவிடம் பெற்ற ஆதர்சம்தான் ஆண்ட்ரூஸைத் தென் ஆபிரிக்காவுக்கு இழுத்தது, பிஜிக்கு விரட்டியது, ஒரிஸாவுக்கு ஓட்டியது. தென் ஆபிரிகாவுக்குச் செல்லுகையில் தம்மிடமுள்ள சொத்துக்கள் யாவையும் துறந்து பணியாற்றும் ஆர்வத்தையே தனமாகக் கொண்டு தவம் புரிந்தார். இந்தியர் சார்பாகப் போராடி, ஜெனரல் ஸ்மட்ஸுடன் வாதாடி ஆபிரிக்க இந்தியர்களை நிமிர்ந்து நடக்க வெற்றிகரமாகப் பாடுபட்டதில் பெரும் பங்கு தீனபந்து ஆண்ட்ரூஸுக்கு உண்டு.

ஒருமுறை யல்ல, பன்முறை பிஜிக்குச் சென்று அங்கு இந்தியத் தொழிலாளர்கள் படும் துன்பங்களை யறிந்து, அநீதிகளை அகிலமெலாம் அறியும்படி செய்து கடைசியில் ஒப்பந்தக் கூலி முறையை இந்திய சர்க்கார் அடியோடு ஒழிக்கும்படி செய்தார்.

பஞ்சத்திற்கெனவே தோன்றிட்ட ஒரிஸாவில் வறுமையை நீக்க ஆண்ட்ரூஸ் எத்தனை முறை யாசகம் செய்து பணம் சேகரித்துப் பஞ்சத்தைஓட்டினார் என்று கூறமுடியாது. பஞ்சாப் படுகொலைக்குப் பிறகு அங்கு நடந்த அநீதிகளை அறிய ஆண்ட்ருஸ் பாஞ்சாலத்திற்குப் பதறிஓடினார். சர்க்கார் அவர் வருகையைத் தடை செய்தனர். தடையை மீறித் தண்டனை பெற்றார். ஆனால் பாஞ்சாலக் கொடுமையை மூடிவைக்க முடியவில்லை. அதற்குக் காரணம் ஆண்ட்ருஸ்செய்த பிரசாரம்.

ஆங்கில நாட்டில் பிறந்தவர்தான் ஆண்ட்ரூஸ். கிறிஸ்தவ மதத்தில் உதித்தவர்தான் அவர். ஆனால் இந்தியாவில் இந்தியர்போல் வாழ்ந்தார். கிறிஸ்தவ மதப் பிரசாரம் செய்யும் பாதிரியாராகத்தான் வாழ்க்கை தொடங்கினார். ஆனால் அவர் ஏசுநாதரின் வாழ்க்கையைப் பின்பற்றியே வாழ்ந்தார். அவர் வாழ்க்கையே போதனையாகத் திகழ்ந்தது. மதம் மாற்றுவதுதான் கிறிஸ்தவ மதப் பிரசாரம் என்று அவர் நம்பவில்லை.

அதனால்தான் கபீர், குருநானக், ராம கிருஷ்ணர், எல்லா முனிசிரேஷ்டர்களையும் அவர் புகழ்ந்தார்; சிரத்தானந்தர் போன்ற வீர ஆரிய சமாஜியின் துணைவராயிருந்தார்.

அவருடைய மதம் சகலரும் ஒப்புக்கொள்ளக்கூடியது. இந்திய குலாசாரத்தில் அவருக்கு அழியாத ஆசையிருந்தது என்பதற்கு குஜராத் வித்ய பீடத்தில் அவர் பேசிய பொன்மொழிகளை இங்கே குறிப்பிடுவோம்:

"தோன்றாத் துணையான பரம்பொருளை நாம் பல்வேறு நாமங்களால் அழைக்கின்றோம். ஆனால் அவர் என்றும் சாந்தம், சிவம், அத்வைதமாகவே இருக்கின்றார். பரம்பொருளைக் காணும் திருப்பணியில் அனாதிகாலம் தொட்டு இந்தியா பிரயாணம் செய்துகொண்டிருக்கிறது. இந்தத் தேடும் திருப்பணியில் அது உலகத்துணிகளையெல்லாம் துறந்து சன்னியாச உடையில் சென்று கொண்டிருக்கிறது. உலக சுகங்களில் திருப்தியடைபவர்கள் அவனை அலட்சியம் செய்யலாம். ஸத்தியம் தவிர வேறு எதைக் கொண்டும் திருப்தியடையாத நாம் இன்று நம் கல்வி நிலயங்கள் இடிந்த கட்டிடங்களில் இருந்தாலும் அவ்வகைளைப் போற்றுவோம். அவைகளின் எளிமையே நமக்குப் பெருமையளிக்கும்; ஆனந்தத்தை உண்டாக்கும். ஏனெனில், பரம்பொருளின் காதல் கீத சபையின் ஹிருதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறது."

இப்பேர்ப்பட்ட ஆண்ட்ரூஸ் இறந்தார் என்றால் அது உண்மையல்ல. அவர் உடல் அழிந்தது. ஆனால் அவர் ஆன்மா அமரத்துவம் பெற்று அவர் அன்புக்குப் பாத்திரமான இந்தியாவை நல்வாழ்வுக்கு இட்டுச்செல்லும் இன்பப் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

தமிழன் தமிழனுடன் தமிழிற் பேசுக.

தமிழனுக்குத் தமிழன் தமிழில் கடிதம் எழுதுக.

பிறமொழியாளருடன் பேசும்போது தமிழின் பெருமையைச் சொல்லுக.

கொச்சைத் தமிழ் ஒழிக; ஆங்கிலேயன் ஆங்கிலம் பேசுவதுபோல, பிரெஞ்சுக்காரன் பிரெஞ்சு பேசுவதுபோல, இந்திவாலா இந்துஸ்தானி பேசுவதுபோலத் தமிழன் தமிழைப் பிழையில்லாமற் பேசிப் பயில்க. பேச்சு நடையும் எழுத்து நடையும் ஒன்றாக வேண்டும்.

ஆங்கிலம், இந்துஸ்தானி முதலிய பிற மொழிகளிற் பேசும்போதும் எழுதும்போதும் மேற்கோள்கள் வேண்டுமிடத்தில், தமிழ்ப் பெரியார் திரு மொழிகளை யுரைத்து விளக்குக.

தெளிந்த நடையும், இனிய சொல்லும், ஆழ்ந்த கருத்துங் கொண்ட சொற்றொடர்களைப் பேசுக; எழுதுக.

ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய நிறைவான வளர்ச்சி பெற்ற மொழிகளில் சிறுவருக்கும் விளங்கும்படியான இலக்கணங்கள் உள்ளன. இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம் அனைத்தையும் இணைத்துக் கதைகளுடனும் படப்பொலிவுடனும் அம்மொழியார் இலக்கணங்கள் செய்திருக்கின்றனர். அவற்றைப் போலத் தமிழிலும் எளிய நடையில், பயனுள்ள பாடங்களை யிணைத்துப் படப்பொலிவுடன் புதிய தமிழ் இலக்கணம் வெளிவர வேண்டும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி அனைத்திலும், கால முன்னேற்றத்தாலும், பல மொழிகளின் கலப்பாலும் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. காலத்திற்கேற்ற விதிகளையும் கூட்டித் தமிழிலக்கணம் எளிய நடையில் எழுதப் பெறவேண்டும்.

செய்யுளிலக்கணத்தை ஐரோப்பியச் செய்யுளிலக்கணம் (Prosody) மாதிரியே தெளிவாக எழுதவேண்டும். அதில் இசைக்கலை விளக்கமும் சேரவேண்டும். தமிழுக்குரிய இசை யிலக்கணத்துடன், ஆரியம், ஹிந்துஸ்தானி, ஆங்கிலம், இத்தாலி முதலிய மொழிகளில் உள்ள இசை நுணுக்கங்களையும் சேர்த்துப் புதிய தமிழிசையிலக்கணம் இயம்ப வேண்டும். ஐரோப்பிய சங்கீதத்தில் வழங்குவதுபோல இசைக் குறிகள் (Scales and Notes) தமிழில் உண்டாக்க வேண்டும்.

—தமிழுணர்ச்சி.

மாசி இதழ்த் தொடர்ச்சி

கைலாச நிகண்டு சூளாமணி

(இராவ்சாகிப் ஸ்ரீ. S. வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.)

இடப்பெயர்த் தொகுதி

321. மருங்கு சிறையுளி மாடு ஞாங்கர்
பால்அயல் பக்கம் பாங்க ரென்னக்
கோலிய வெல்லாங் கூறிற் பக்கம்.
322. மாவுந் திணையும் பூவும் வேலியும்
நிலமென வுரிய நிலையுங் காலே.
323. பாடஞ் சிரேணி வாடை வேணி
சேரி யென்னுந் தெளிபொரு ளாமே.
324. வற்கணம் வேடர் வாடை யாமே.
325. ஆபிரம் பல்லி யவையிடைச் சேரி.
326. இஞ்சி புரிசை யெயில்வரைப் புவளகம்
அரணங் கோட்டை ஆரை காப்பு
வேணகை கடகம் வேலி யம்பரம்
சாலம் பகாதிடம் சிறைய கப்பா
கடிமதில் நொச்சி காவ லாரல்
ஓதை பிராகார மொருபொரு ளென்ப.
327. வன்சிறை யாகில் வருஞ்சொ லுவளகம்.
328. அகப்பாவும் பரிகமு மம்மதி லுள்ளோர்
உயர்த்த நிலமென் றுரைக்கற் பாற்றே.
329. நாஞ்சில் மந்திரம் நாயில் கோசம்
அகப்பாத் தோணி விதப்பமதி லுறுப்பே.
330. தொடையுந் தகைப்புஞ் சுற்று வாரியும்
ப்ாடல் வல்லோர் பகுத்தன ரதற்கே.
331. தோட்டி துவாரங் கோபுரம் வாரி
கடை புழை புதவு கடைத்தலை தூம்பு
வாயிற் பெயரென வகுத்தனர் புலவர்.
332. கோபுரம் பெருவாயிற் குறித்த பொருளே
333 புதவு வாயிற் புகுகுறும் பூழை
துவாரந் தோட்டி தூம்புகடை அருநெறி
வாயில் தனக்கு வரும் பெயராகும்.
334 காப்பு வாரி கவாடம் ஆரி.
335. பித்திகை யுயர்நிலம் பீடிகை சுவர்த்தலம்.
336. கேணி யோடை கிடங்கு பரிகம்
உடுஅகப் பாவென வுரைபெறும் அகழே.
337. மானமுஞ் சமித்தமு மண்டபமும் வேரமும்
ஆன வென்பதும் அப்பெயர் தனக்கே.
338. நீர்தகை கதவுக்கு நிலையில் ஒவெனல்.
339. குட்டியம் படுத்த தரை கூறுங் காலே.
340. தோட்டம் படப்பை துடவை ஆராமம்
கடமுமா மெனக் கட்டுரைத் தனரே.
341. கடவை மடவை கவரிறுக்கை தடவை.
342. பறந்தலை செம்புலம் படுகளங் களரி [ளம்
செங்களம் வளாகம் செருக்களம் அமர்க்க
போர்க்களம் வெஞ்சமம் பொருகளம் அடு
உயுத்த களமென வுரைத்திசி னோரே.[களம்
343. சுடுகாடு புறங்காடு ஈமம் பிணக்காடு
படுகாடு காள மென்னப் பகர்வர்.
344. சுண்ணமும் பூதியுந் துகளும் வெண்பலியும்
அடலையுஞ் சாம்பலும் அவைவெண் ணீறே.
345. இப்ப ரிவணே ஆம்பர் அவணே [புலவர்.
ஆண்டவ் விடமீண் டிவ்விட மென்மனர்
346. காத மென்பது காவத மாகும் [யும்
கூக்குரல் கேட்பிடங் குரோசமு மெல்லை.
347. ஆட விடமும் வட்டா டிடமும்
நாடில் அரங்கமென நவில்வர் புலவர்.
348. போரி னிடமும் புகல்வ ரதுவே.
349. செய்யும் பாத்தியுஞ் செறுவுந் தடியும்
வரவையுங் கழனியு மாவும் விளையுளும் [லும்
பண்ணையுங் கைதையுங் பானலுங் குன்றி
புலமு மால வாலமும் நிலமும்

*　　*　　*

350. குண்டிலும் பாத்தியுங் கூறிற் சிறுசெய்.
351. துடவை யுழவு தொய்யிலு மப்பெயர்.
352. கங்கென் கிளவி கருதில் வரம்பருகு.
353. பரம்பென் கிளவி வரம்பா கு[ம்]மே.
354. பயம்பு முவளகமும் படுகருங் கிழக்கும்
பாடுந் தாழ்வும் பள்ளமு மிழிவும்
வயலும் அவலும் மடுவும் ஞெள்ளலும்
குழிவுங் கீழுங் கூறிய இப்பெயர்
முழுதுந் தாழ்வென மொழிந் திசி னோரே.
355. புற்று வன்மீகமெனச் சொற்றனர் புலவர்.
356. திடர்குவால் குப்பை திட்டை பதுக்கை
மீட்டுச் சுவலிவை மேட்டு நிலப்பெயர்.
357. அரிதஞ் சாட்டுவல மாகும் பசுந்தரை.

மண்ணின் வகை முற்றும்.

மலைவகை

358. அடுக்கல் சயிலம் அசலம் வெற்பு
விலங்கல் நகங்கல் விண்டு பருப்பதம்
சிலம்பு நாகஞ் சிகரி குறும்பொறை

ஓதி வேதண்டம் ஓங்கல் வீரம்
தரணி பூதரஞ் சாரலங் கேளிதம்
குவடு பிறங்கல் குன்றரி கிகிரி
பரம்பு சிலைவரை பதலை பொருப்பு
கோத்திரம் பறவை கோத்திரி யிறும்பு
மாதிர மிரவி தராதரம் பொற்றை
பாதவம் பொங்கர் சிமையந் தாணு
நவிரஞ் சானுமா னகற்புள் சையம்
சிமில மலைகிரி சிலோச்சய முபலம்
கல்லகம் பொருப்பகங் கனதர மந்தரம்
பரிமஞ் சிகரம் கடகம் பொகுட்டு
தடம் பொதி பீலி சுரும்பின் பால.
359. குவடு பொச்சை குறும்பொறை யிறும்பு
பதலை யென்று பகர்வர் சிறுமலை.
360. கோடு நகாந்தம் குவடுமுடி சிமையம்
நீடு சிகரம் நெடுங்கிரி யுச்சி.
361. சானுக் கடகஞ் சாரல் வாரம்
நிதம்பந் தடமிவை நெடுமலைப் பக்கம்.
362. அரிதரம் புவிநடு அமர ராலையம்
திரிபுர மடுசிலை தென்பொற் பொருப்பு.
விரிச்சடை யோன்வில் மீன லாஞ்சனம்
அரிசுழல் சயிலம் அரவ பந்தனம்
சாப லாஞ்சனம் சாத்தூல லாஞ்சனம்
கங்கைசூழ் வெற்புக் கடவுட் பூதரம்
இங்கிவை வடமேரு வென்றுரைத் தனரே.
363. மலையம் பொதியில் மலையப் பொருப்பு
தென்றற் சயிலம் தென்றிசைப் பூதரம்
அகத்தியர் தாபர மானதவ் வரையே.
364. வல்லியம் பொருப்பே கொல்லி யாகும்.
365. தவள பூதரஞ் சங்க ராசனம்
இரசதா சயில மென்பது கயிலை.
366. துறுக லென்பது பொறையெனப் புகல்வர்.
367. அறையென் கிளவி யகன்பாறை யாகும்.
368. கற்பா றிப்பெயர் காண்டை யென்ப.
369. பிலமென் கிளவி பேசிற் கீழறை.
370. கந்தர மடுக்க லளை[யே]விட ரென
வந்தன நான்கும் மலை முழைஞ் சாகும்.
371. விடரே மலையின் விடவு மாகும்.
372. சிலையுபலங் கற்றிரள் [சிரா] வணம்
[நான்கும்
புலமலி கல்லின் பொதுப் பெயராகும்.
373. கேளித மென்பது கிளக்கிற் பெருங்கல்.
374. ஏம கூடம் இமையங் கயிலை
நிடதம் விந்தம் நீலகிரி மந்தரம்
புடவியி லேழ்பெரும் பொருப்பி னாமம்.
375. அருவி மலையில் வருபுன லாகும்.
376. ஏனல் வார லென்றிவை யிரண்டும்
சாரற் றினைப்புனந் தானகு[ம்]மே.
377. இதைப்புன மென்பது புதுக்கொல்லை
[யாகும்.
378. முதைபழங் கொல்லையென வோதினர் புல
[வர்.
379. பரலடுத் துயர்நிலம் பகரில் முரம்பே.
380. உபல மெனப்படுவ துரைக்கிற் றிரள்கல்.
381. பொற்றை பீகைப் புனம் புதுக்கொல்லை.

மண்ணின் வகையில் மலைவகை முற்றும்.

மண்ணிற் கடல்வகை

382. ஆர்கலி பௌவம் அளக்கர் அத்தி
ஆழி பெருநீர் அம்பர முந்நீர்
வீரை சகரம் வேலை வெள்ளம்
சலதி யுப்புச் சமுத்திரம் நேமி
வாரி நரலை மகராலையம் உவரி
பாரா வாரம் பரவை கார்கோள்
வாருணஞ் சிந்து வாரம் அம்புராசி
சானவி புணரி சலநெதி ஓதம்
நெய்தல் தரங்கி நீர் தொன்னீர் அரி
மாநீர் குரவை மகோததி பயோததி
உததி காராழி யுந்தி நதிபதி
அலையிரத்தி நாகரம் அவனி யாடை
வேலா வலயம் மேகபோசன மெனக்
கோவிய வெல்லாங் குரைகடற் பெயரே.
383. புணரியு மோதமும் பொங்கு கல்லோலமும்
அலையுந் தரங்கமும் ஆழிவெண் டிரையே.
384. அறலுந் தரங்கமும் அலையுங் கல்லோ லமும்
விசிகாமும் புனலின் விரிதிரைப் பெயரே.
385. வரையணை கூலம் வாரம் பாரம்
தீரம் கோடுதிரைக் கடற் குரைத்தனரே.
386. குரம்புஞ் சேதுவும் குலையும் அணையும்
வரம்புஞ்செய் கரையென வகுத்தன
[ருளரே.
387. உறை யென் றுரைப்பது உவர் நீராகும்.
388. காய லென்பது கழிப்பெய ராமே.
389. கான லுங் கழியுங் கருதில் உப்பளம்.
390. புளின மென்பது புறமணற் குன்றே.
391. அகர முப்பள மாகு மென்ப.
392. இருணம் உவர்த்தரை யென்மனார் புலவர்.
393. அதோமுகம் புகாரோ டாறுக் கழிமுகம்.
394 பழனமுந் தோடும் பணையும் மருதத்தின்
....
395 பொன்னி காவிரி பொருனை தண் பொருந்தம்.
396. ஏடெ தி ருந்தி யியலடு வையை.
397. ஒலியல் குடிஞை யுந்தி யோணம்
ஆபகை தீர்த்திகை யாறு வருபுனல்
சிந்து துனிதடினி தீபவதி நுரைப்பதி
என்றவை யெல்லா மியம்பி லாறே.
398. இலங்கை துருத்தி யாற்றிடைக் குறை
அரங்க மென்பது மாகுமாங் கதற்கே.

399. வாலுக மென்பது [வெண்] மணலாகும்.
400. அயிரென் கிளவி யாகு நுண்மணல்.
401. அற லென்பதுவே யலை நுணங்கு கரு
[மணல்.
402. இலஞ்சி கேணி யேரி கோட்டகம்
வசங்க லோடை வாவி மடுக்கயம்
சலந்தரம் பட்டம் தடாகம் நளினி
குட்டம் பொய்கை குளமடுக் கிடங்கு
பண்ணை குண்டகம் பயம்பு படுகர்
அவல்சுனை யுவளகம் ஆவி பனித்தடம்
வயமங் கயஞ்சூழி வனதரம் புட்கரம்
இயலிவ் வகையனைத் தும் மெறிபுனல்
403. கூலமுந் தீரமுங் கோடும் பாரமும் [நிலையே.
வார்புனற் றிரைக்கும் வரம்புக்கும்
[பொதுப்பெயர்.
404. அளக்கரும் பங்கமும் அசறு மள்ளலும்
குழையுங் கீர்த்தியுங் குழம்புஞ் சேதகமும்
தொய்யலுஞ் செறுவு மெனச் சொன்னவை
[யெல்லாம்
சேற்றின் கிளவி யெனத் தெளிந்துரைத் த
[னரே
இரும்பூதி யெனவு மியம்பு மாங்கதற்கே.
405. நொதியென் கிளவி நுவலுங் காலை
அதிக வருவருப் பள்ள லென்ப.
406. பூழியும் பூதியும் பொடியென லாமே.
407. உவகை யருவி யூற்றே யூறல்.
408. கூவமும் உறவியுங் குறித்த கிணறே.
409. ஊருணி யூரவ ருண்ணீ ராமே. [புனலே.
கலுழியு முலவையுங் கான் யாற்றுப்
மண்ணிற் கடல் வகை முற்றும்.

மண்ணவர் வகையில் மாதவர்வகை

410. கும்பசன் முன்னவன் குறியோன் மாத
[வன்
மலையப் பொருப்பன் வண்டமிழ்த் தலைவன்
உருத்திர சமனன் உததி நுகர்ந்தோன்
பொருநைத் தலைவன் பூசுரன் பொய்யா
அருவிப் பொருப்பில் அகத்தியன் பெயரே.
411. அறவோர் முனிவர் அறிஞர் நீத்தோர்
துறவோர் மாதவர் சுரிசடை முடியோர்
தாபதர் மெய்யர் தவத்தோர் ஐயர்
படிவர் தபோதனர் பண்ணவ ரிலிங்கிகள்
யோகிகள் கடிந்தோ ருறவோர் பெரி
யோர்
அந்தண ரிவையே அருந்தவர் பெயரே.
412. பாசு பதருங் காளா முகருங்
மாயா வாதியரும் வகுத்தன ரதற்கே.
413. அரி சமயத்தி லவர் பாகவதரே.
414. அருகர் சாவகர் அமண ராகும்
மருவுமா சீவகரு மத்திறத் தோரே.
415. சாக்கியர் புத்தர் தயங்கு தேரரென்
றுக்கிய பேரு மாங்கவர்க் காகும்.
416. சாரண ரென்பவர் சமண முனிவர்.
தாபத ரென்பவர் சடைமுடி யோரே.

மண்ணவர் வகையில் மாதவர்வகை முற்றும்.

மண்ணவர் வகையில் மறையோர்வகை.

417. ஆதி வருண ரந்தணர் பூசுரர்
அறுதொழி லாளர் அறவோர் மறையவர்
எரியழல் வளர்ப்போ ரிருபிறப் பாளர்
வேதியர் விப்பிரர் வேள்வி யாளர்
வேத பாரகர் மேற்குல முடையோர்
பார்ப்பார் முனிவர் பங்கயத் தாரோர்
ஐயர் நூலோ ராறங் கத்தோர்
மெய்யர் ஆய்ந்தோர் மிக்கோ ருயர்ந்தோர்
முத்தீச் செல்வரென் றித்திற மனைத்தும்
ஆரணர் பெயரென ஆய்ந்துரைத் தனரே.
418. ஓதலும் பிறரை யோது வித்தலும்
வேட்டலும் பிறரை வேள்வி செய்வித்தலும்
ஈதலும் பிறர்பா லேற்றலு மென்ப
அவ்வாதி வருணர் அறுதொழி லாமே.
419. தென்றிசை யங்கி காருக பத்தியம
நின்ற ஆகவ னீய முத்தீயே.
420. தயங்கிய இருக்குத் தயித்திரியஞ் சாமம்
நயங்கொள் அதர்வம் நால்வகை மறையே.
421. நிருத்தம் மந்திரம் நிகண்டு வியாகரணம்
பெருத்த சந்தோபிசிதி சோதிட மென்ன
திருத்தகும் அங்கஞ் செப்பி லாறே.
422. விரைத்தார் முனியொடும் விதியொடு
[முவமை
உரைத்தலு [ம]வரென வுரைக்கலு மாமே.
423. தாமரைத் தாருந் தருமமு முரசமும்
ஆமவர்க் கென்ப அறிந்தி சினோரே.
424. அன்னக் கொடியும் அயிரா வதமும்
உன்னிற் றசாங்க முறுப்பென மொழிப.
425. சந்த மலையுமவர் தசாங்க வுறுப்பே.
426. எற்றிய நாற்பத் தெட்டியாண் டளவுஞ்
சாற்றிய பிரம சரியங் காத்தும்
ஆயபி னீரா றளவு வானப் பிரத்தம்.
427. சேயிழைக் கன்னியைச் செந்தீ முன்னர்
வேட்டலாங் கவர்க்குக் காட்டிய மணமே.

மஞ்சள்

(சென்னை இறையாட்சியாளர் பதிப்பித்த குணபாடம் என்னும் நூலினின்று தொகுக்கப்பெற்றது)

இந்தூ இந்தியாவில் வெப்பமான பாகங்களில் பயிராகும் செடி. இதன் கிழங்கிற்கு **மஞ்சள்** என்று பெயர். இதற்கு ஒருவித வாசனையுண்டு.

மஞ்சள் இருவகைப்படும்: க. கறுப்பு மஞ்சள், உ. கறிமஞ்சள்.

கறுப்பு மஞ்சள்—கிழங்கின் பெரும்பாகங்களை எடுத்து உலர்த்தி நல்லெண்ணெயில் பக்குவஞ் செய்யப்பெறுவது.

உ. கறிமஞ்சள் — கிழங்கின் பக்கங்களில் கிளைக்கும் விரல்போல் உள்ளவைகளை வேறுபடுத்தி சாணப்பாலில் வேக வைத்துப் பக்குவப் படுத்துவது.

பதார்த்தம் உபயோகம்.—கிழங்கு.

சுவை.—கைப்பு, கார்ப்பு, **வீரியம்**—வெப்பம். **பிரிவு**—கார்ப்பு.

செய்கை - அகட்டுவாய்வகற்றி - உதரவாத ஹாரி - Carminative. வெப்பம் உண்டாக்கி - உஷ்ணகாரி - Stimulant.

குணம்.—உடலுக்கு மேனி தரும். உடலில் பூச, புலால் நாற்றத்தை நீக்கும். புருடவசியமும், பசியும் உண்டாக்கும். வாந்தி, வாத—பித்த—கபதோடம், தலைவலி, நீரேற்றம், பிரமேகம், பீநசம், ஐவகை வலி, வீக்கம், வண்டு கடி விடம், பெருவிரணம் இவை போம்.

பொன்னிறமாம் மேனி புலானுற்ற மும்போகும்
மன்னு புருட வசியமாம்—பின்னிஎழும்
வாந்திபித்த தோடமையம் வாதம்போந் தீபனமாங்
கூர்ந்தமஞ்ச ளின்கிழங்குக் கு.

தலைவலிநீ ரேற்றஞ் சலியாத மேகம்
உலைவுதரு பீநசத்தி னூடே—வலிசுரப்பு
விஞ்சு கடிவிடமும் வீறுவிர ணங்களும்போம்
மஞ்சட் கிழங்குக்கு மால்.—அகத்தியர் குணபாடம்.

வழக்கு.—மஞ்சளை நீர் விட்டரைத்து உடலில் பூசி நீராட, தேகத்தில் உண்டான நீங்காத புலால் மணம்—(துர்நாற்றம்) நீங்கும். உடல் பொன் சாயலான மேனி பெறும். மேலும் கற்றாழை நாற்றமும், முகத்திலுண்டாகின்ற ரோகமும் சிரண சிலேத்துமமும், வியர்வையும் நீங்கும்.

மஞ்சட் குளிதனக்கு மாறுந்துர்க் கந்தமொடு
விஞ்சுமுக சாட்டியமும் விட்டகலும்—தொஞ்சலுறும்
ஐய மொழியு மடர்வியர்வுங் காணது
வைய மதனில் வழுத்து. —அகத்தியர் குணபாடம்.

மஞ்சளைப் பொடித்துப் புண்களின்மீது தூவ அவைகள் ஆறும்.

சாதத்துடன் மஞ்சளைச் சேர்த்தரைத்துக் கட்டிகளின் மீது வைத்துக் கட்ட அவைகள் எளிதில் பழுத்து உடையும்.

மஞ்சளைச் சுட்டு முகர நீரேற்றம் நீங்கும்.

வேப்பிலையுடன் மஞ்சளைச் சேர்த்து அரைத்து அம்மைக் கொப்புளத்தின்மீது பூச, அவைகள் பழுத்து உடைவதன்றி வெகு எளிதில் ஆறிப்போகும்.

மஞ்சளுடன் ஆடாதோடையிலை சேர்த்துப் பசுவின் மூத்திரம் விட்டரைத்துப் பூச சொறி, சிரங்கு, நமைப்புடைகள் ஒழியும்.

மஞ்சள் அரைப்புடன் சுண்ணாம்பு, பொட்டிலுப்பு கூட்டிச் சுடவைத்து சுளுக்கு, சருமச் சிதைவு, இவைகட்குப் பூசலாம்.

பச்சை மஞ்சள் இரசத்தைப் பூச அட்டை கடி விடம், நூதன காயப்புண், சருமச்சிதைவு நீங்கும்.

மஞ்சள் சூரணத்தில் அ-கஒ குன்றியளவு உட்புகட்ட வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, மாறல்சுரம் நீங்குவதுடன் குடல் பலப்படும்.

மஞ்சள் நீரை யருந்த காமாலை குணமாகும்.

மஞ்சளை அரைத்து நீரில் கலக்கி வெண் சீலைக்குச் சாயமேற்றி அதை ஆடையாக உபயோகித்தால், வாதநீர்ச்சுருக்கு, இருமல், விடசுரம், மாறுத்தினவு, தனிச்சுரம், மலபந்தம் இவை நீங்கும்.

நீர்க்கடுப்பு காசமொடு நீடு விடசுரமுந்
தீர்க்கநமைச் சல்வெப்புஞ் சேர்மலமும்--பார்க்குண்மிக
அஞ்சியே யேகுமஞ்ச ளாம்வத்தி ரம்புனைந்தால்
வஞ்சியே நன்றாய் வழுத்து.

மஞ்சள் நீரில் ஒரு சிறிய வெண்சீலைத்துண்டை நனைத்து நிழலில் உலர்த்தி வைத்துக்கொண்டு கண் நோய் உள்ளவர்கள் இச்சீலையைக் கொண்டு அப்போதைக்கப்போது துடைத்து வரக் கண்சிவப்பு, கண்ணருகல், கண்வலி, கண்ணில் நீர்கோத்தல் போன்றவை சாந்தப் படும்.

மஞ்சள் தாள் மூத்திரத்தில் சிவந்தால் நீரில் உப்பிருக்கின்றதாக நிச்சயிக்கலாம்.

கறிமஞ்சள்

இந்துக்கள் உபயோகிக்கும் பற்பல ஊறுகாய்களிலும், கறிமசாலைகளிலும் இது ஏராளமாய்ச் சேருவதுடன், சிற்சில பதார்த்தங்களின் துர்க்குணத்தை மாற்றி அவைகள் பார்வைக்கு அழகுபடவும் இது வழங்கப்பட்டு வருகிறது.

போர்நெருக்கடியைத் தீர்த்துவைக்க வழி

(ஸ்ரீ. எம். கே. அலெக்ஸாண்டர்)

[ஸ்ரீ. எம். கே. அலெக்ஸாண்டர் ஓர் இந்தியர்; உலகமெங்குஞ் சுற்றியவர்; சொல்வன்மை படைத்தவர்; அர்க்கான்ஸாஸ் அரசாங்கக் கல்லூரித் தத்துவப் போராசிரியர். ஒன்டோரியோ நகரத்தில் இவர் சில நாட்கள் தங்கியிருந்தபோது இன்றைய ஐரோப்பியப் போர் நெருக்கடியைப் பற்றி "நயாகரா நீர்வீழ்ச்சி கெஸட்" என்ற சஞ்சிகைப் பிரதிநிதியொருவரிடங் கூறிய கருத்துக்கள் கீழே மொழிபெயர்த்துத் தரப்படுகின்றன.]

ஆயுதபலம் காரணமாக ஒரு நாட்டார் மற்றொரு நாட்டாரைத் தாக்குவதாக அச்சுறுத்துவதோ, அன்றி மற்றொருவரால் அவ்வாறு அச்சுறுத்தப்பட்டால் அலறியடித்துக் காலில் விழுவதோ நீதியுமன்று, நாகரிகமுமன்று. மிருக பலத்தை மிருகபலம் கொண்டு தாக்குவது வீரமேயாம்; அவ்வாறு தாக்கி வெற்றிபெற்ற நாட்டு மக்கட்கு அது பெருமையையும் அளிக்கக் கூடும்; அன்றியும் அப்போதைக்கு அது அமைதியையும் பாதுகாப்பையும் அளிக்கும் சிறந்த சாதனமுமாகலாம். என்றாலும், நிலையான அமைதியையோ, நிரந்தரமான பாதுகாப்பையோ அது அளிக்கவல்ல தொன்றாகாது. ஆகவே, இப்பொழுது மூண்டுள்ள போர் நெருக்கடியையோ, அன்றி இதுபோன்ற வேறு நெருக்கடிகளையோ தீர்த்துவைக்கும் முறையாகப் போர் முறையைக் கருதுவது சரியாகாது.

இன்று போர் நிகழும் ஐரோப்பாவின் பண்டைய வரலாறு என்ன தெரிவிக்கிறது? ஒரு நாட்டுக்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையே ஏற்பட்டுள்ள சச்சரவைத் தீர்த்துவைக்கக் கருதிப் பண்டெல்லாம் தொடுக்கப்பட்ட போர்களினால் அவ்வப்போது சிற்சில ஆண்டுகள் வரை அமைதி நிலவியிருந்தாலும் மீண்டும் தொடர்ந்து தொடர்ந்து போர்வினை மூண்டுகொண்டே இருந்து வந்துள்ளது என்ற மறுக்கமுடியாத உண்மையையே யன்றோ?

சென்ற ஆயிரமாண்டுகளாகத் தனக்கு இழைக்கப்பட்ட தீமைகளுக்கெல்லாம் பரிகாரந் தேடிக் கொள்ளப் போவதாக இன்று ஜெர்மனி கூறுகிறது. அதனையொட்டி இத்தாலியும் போரில் தான் இழந்த குடியேற்ற நாடுகளை நினைந்து நினைந்து குமுறுகிறது. இவ்விரு நாடுகளின் குறைகள் நியாயமானவைதானா அல்லவா என்று நான் ஆராயப் புகவில்லை. ஆனால் ஐரோப்பாவில் நடைபெற்ற போர்களால் போர்க்காரணங்களை அடியோடு அகற்றிவிட முடியவில்லை என்பதை மட்டும் விளக்கிக் கூற விழைகின்றேன்.

நியாயப் போர், உரிமைப்போர் அன்றி வேறெப் பெயர் கொண்ட போர் என்று கூறினும் சரி; இன்று தொடங்கிய இப்போரினால் முடிவிற் சிறிதுகாலம் பேருக்கு அமைதியென்று ஏற்படலாம். ஆனால், மீண்டும் அமைதியின்மையும் போரும் கிளைத்தெழப் போவதென்னவோ உறுதி.

ஒரு கற்பகாலம் போர்புரிந்து இரத்த வெள்ளத்தில் நீந்திவந்தாலும் சரி; உலக அமைதியைப் போர் முறையினால் யாரும் காணப்போவதில்லை.

போர் வேண்டாமென்றால் வேறு வழியென்ன? சந்தியும் தூதும் ஒப்பந்தமும் சிறந்த வழிகளெனக் கூறப்படுகின்றன. ஆனால், தான் கொண்ட நோக்கம் நிறைவேறினாலன்றிப் போர் முறையைக் கைவிடேன் என்று கூறும் ஒரு திறத்தார் முன் இவையெல்லாம் பயன்படா.

அப்படியானால் உலகம் உய்யும்வழி வேறியாது? இக்கேள்விக்கு நான் கூறப்போகும் விடை போர் முறையே நேர்முறையென்று கற்பிக்கப்பட்டவர்களுக்கும், முன்வைத்த காலைப் பின்வைக்காமல் இறுதிவரையிற் போராடி மீள்வதே சரியென்று நம்புகிறவர்களுக்கும் கர்ண கடூரமா யிருக்கலாம். இருந்தாலும் அதனைக் காதிலேயே போட்டுக் கொள்ளாமலிருப்பதைவிட, கேட்டு அருவருப்புக் கொள்வது தவறாகா தென்றே கூறப் புகுகின்றேன்.

"உள் நாட்டுச் சிக்கல்களையும் வெளிநாட்டுச் சிக்கல்களையும் நிலையாகத் தீர்த்து வைக்கவேண்டுமானால் மகாத்மா காந்தி அவர்கள் எடுத்தோதிக் கையாண்டுவரும் அஹிம்ஸை முறையென்ற அறப்போர் முறையைப் பின்பற்றுங்கள்!" அதிக்கிரமிப்பாளர்களைப் பொருட்படுத்தாமல் நிலையான அமைதியையும் நிரந்தரமான பாதுகாப்பையும் நிலைநிறுத்த வல்லது அஹிம்சை என்னும் அறப்போர் முறையே.

*பால்டிக் பிரதேசம்

(ஸ்ரீ. தோத்தாத்திரி ஐயங்கார், M. A.)

பால்டிக் கடல் ஐரோப்பாவில் வடமேற்குப் பாகத்தில் அநேக நாடுகளால் சூழப்பட்ட ஒரு நீண்டு குறுகிய கடல். இதற்கு மேற்கில் நார்வே, ஸ்வீடன் சேர்ந்த ஸ்காண்டினேவியா தீபகல்பமும், டென்மார்க் என்று சொல்லப்படும் ஜட்லாண்டு தீபகல்பமும் அதைச்சார்ந்த தீவுகளும் இருக்கின்றன. இவை பால்டிக்கை வடகடலினின்றும் பிரித்து, பால்டிக் கடலுக்குள் வரும் வழியை நன்றாகத் தடுத்து நிற்கின்றன. இக்கடலின் கீழ்புறத்தில், பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா என்ற சிறு நாடுகள்; தெற்கில், போலந்து உயிருடனிருந்தபொழுது 'காரிடார்' என்னும் அதன் ஒரு பகுதியும், ஜெர்மனியின் வட எல்லையும்.

பால்டிக் கடலில் டென்மார்க் தீவுகளைத் தவிர, வேறு அனேக தீவுகளும் இங்குமங்கும் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை ஸ்வீடனுக்கும், பின்லாந்துக்கும் மத்தியிலுள்ள ஆலந்து தீவுகள்.

இக்கடலின் மேல்புறம்முழுவதும் ஸ்வீடனின் எல்லை. ஸ்வீடனிலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் இரும்புச் சாமான்கள் முதலியவை பால்டிக் வழியாகத்தான் செல்லவேண்டும். கீழ்புறத்தில் வெவ்வேறு நாடுகளுக்குச் சொந்தமான அனேக துறைமுகங்கள்—உதாரணமாக ரெவால், ரீகா, டான்ஸிக்.

இந்த பூகோள வர்ணனையிலிருந்து பால்டிக் பிரதேசத்தில் அனேக நாடுகளுக்கு உரிமைகளுண்டு என்பது நன்கு விளங்கும். இந்த உரிமைகளை ஒதுக்கித்தள்ளித் தங்கள் ஆதிக்கத்தை பலாத்கார முறைகளால் பரவச்செய்ய சில வல்லரசுகள் துடித்து நிற்கின்றன. இவைகளில் தற்சமயம் முதல் ஸ்தானம் வகிப்பது ரஷ்யா; அதைத் தடுக்க முடியாமல் விழிப்பது ஜெர்மனி.

முதலில், பால்டிக் கடலைச்சுற்றி இருக்கும் நாடுகளின் நோக்கங்களையும் மனப்பான்மைகளையும் கவனிப்போம். நார்வே, ஸ்வீடன், டென்மார்க் வெகு நூற்றாண்டுகளாகச் சுதந்தரமனுபவித்த நாடுகள். பிறர் வம்புக்குப் போகாமல் தங்கள் காரியங்களைச் சரிவர நடத்திவருவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பவை. ராஜீயக் கொள்கைகளிலும், நாகரிகப்போக்குகளிலும் இவைகளுக்குள் திடமான ஒற்றுமை உண்டு. பின்லாந்தின் மனோபாவத்தைக் கவனித்தால் அதையும் இந்நாடுகள் கோஷ்டியிலேயே சேர்க்க வேண்டியதுதான்.

கடந்த 5, 6 நூற்றாண்டுகளாகவே ஜெர்மனி பால்டிக் வல்லரசுகளில் ஒன்று. இப்பொழுதும் ஜெர்மனிக்கும் இப்பிரதேசத்து இதர நாடுகளுக்கும் நெருங்கிய வியாபார சம்பந்தம் இருந்து வருகிறது. மேலும், எஸ்டோனியா, லாட்வியா, போலிஷ் காரிடார் என்ற இடங்களில் ஜெர்மனியின் ஆதிக்கம் வெகு வருஷங்களாய் நிலைபெற்றிருந்தது. 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பால்டிக் கடலிலிருந்து வடகடலுக்கு ஜெர்மனியின் எல்லைக்குள்ளாகவே கடற்படை வழி வேண்டுமென்று ஜெர்மன் சர்க்கார் கீல் கால்வாயையும் வெட்டினார்கள். இந்தப் பிரதேசத்தின் பழைய சரித்திரத்தைக் கவனித்தால் பால்டிக் ஒரு ஜெர்மன் ஏரி என்றே சொல்லலாம்.

ஜெர்மனி, போன ஐரோப்பிய யுத்தத்தின் பயனாக போலிஷ் காரிடார், டான்ஸிக் துறைமுகம், மெமல் நகரம் இவைகளை இழக்க நேரிட்டது. சென்ற 5, 6 வருஷங்களாக ஹிட்லரும், நாஜிகளும் ஜெர்மனி பால்டிக்கில் பழைய ஸ்தானத்தை அடைய வேண்டுமென்று மிகவும் சிரமப்பட்டார்கள். லிதுவேனியாவைப் பயமுறுத்தி மெமல் நகரத்தைக் கைப்பற்றினார்கள்; போலந்து மன்னையை முறித்து டான்ஸிக்கையும், காரிடாரையும் திரும்பி அடைந்தார்கள். டென்மார்க்கையும் இவர்கள் மிரட்டி வருகிறார்கள். இவர்கள் அதிகாரப் பெருக்கைக் கண்டு பயந்து 2, 3 வருஷங்களுக்கு முன் பின்லாந்து ஆலந்து தீவுகளின் பலமான அரண்களை நிர்மாணித்தது. ஜெர்மனிக்கு இப்பொழுதோ பால்டிக்கில் தன் எண்ணம்

*அகில இந்திய ரேடியோ, திருச்சி நிலயத்தில் 17-1-40-ல் பேசியது.

கைகூடாமல் வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியுடைந்தாற்போல எதிர்பாராத விபத்துக்கள் தோன்றியிருக்கின்றன.

1918-க்கு முன் ரஷ்யாவும் ஒரு பால்டிக் வல்லரசாக இருந்தது. இக்கடலின் கீழ்ப்புறநாடுகளெல்லாம் ரஷ்ய ஏகாதிபத்தியத்துக்குள்ளடங்கி இருந்தன. ஆனால் 1917-ல் ரஷ்யாவில் பொது உடமைக்காரர் புரட்சி ஆரம்பித்தபோது இந்த நாடுகளின் பிரஜைகள் ரஷ்யாவை எதிர்த்தார்கள். ஜெர்மனியும் அவர்களுக்கு ஒத்தாசை செய்தது. 1918-ல் ஐரோப்பிய யுத்தத்தில் வெற்றிபெற்ற வல்லரசுகள் அவர்களுக்குச் சுதந்தரமளித்தன. இதனால் பால்டிக் கீழ்கரை முழுவதும் புத்துயிர் பெற்ற ஒரு நாடுகள் வரிசை உண்டாயிற்று. பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா, போலந்து இவை இந்த வரிசையிலுள்ள நபர்கள்.

தற்சமயம், ரஷ்யாவின் பழைய தலைநகராயிருந்த லெனின்க்ராடைச் சுற்றியுள்ளமிகச் சிறிய பாகம் ஒன்றே ரஷ்யாவை பால்டிக்குடன் சேர்த்து வைக்கிறது. இந்த ஏற்பாடு ரஷ்யாவிற்குக் கசப்பாயிருப்பது இயற்கைதானே?

மேலும், ரஷ்யாவுக்கு வெளி உலகத்துடன் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொள்ள மூன்று திக்குகளில் வழி உண்டு. முதலாவது வடக்கில் ஆர்க்டிக் சமுத்திரம். இச்சமுத்திரம் அனேகமாக எப்பொழுதும் உறைந்திருக்குமாகையால் இதன்மூலம் கப்பல் போக்குவரவு சாதனங்கள் அதிகம் வைத்துக்கொள்ள முடியாது. இரண்டாவது, தெற்கில், கருங்கடல், அதிலிருந்து மத்திய தரைக் கடலுக்குப் போகும் பாஸ்பரஸ், டார்டனல்ஸ் ஜலசந்திகள். இவ்வழியை ரஷ்யா உபயோகிக்க வெவ்வேறு நாடுகளின் கூட்டுறவு வேண்டும. மூன்றாவது, மேற்கில் பால்டிக் கடல். இதுதான் ரஷ்யா மற்ற மேல்நாடுகளுடன் நெருங்கிப் பழகச் சமீபமான வழி. இக்கடலில் உறைபனி உபத்ரவமில்லாத அனேக துறைமுகங்களுண்டு. லாட்வியாவிலுள்ள ரீகா, எஸ்டோனியாவிலுள்ள ரெவால், அல்லது டாலின் முதலியவை. பின்லாந்தையும் ரஷ்யா கைக்குள் போட்டுக்கொண்டு விட்டால் ஆலந்து தீவுகளையும் உபயோகித்துக் கொள்ளலாம். பால்டிக் ப்ரதேசத்தில் ரஷ்யாவுக்கு ப்ராதான்யம் ஏற்பட்டு விடும்.

இதுவரை ரஷ்யாவின் நோக்கத்தை விஸ்தரித்தேன். ஆனால் நியாயமானது என்று சொல்ல நான் முன்வரவில்லை. ரஷ்யாவுக்கும் பால்டிக் பக்கம் வந்துதான் ஆகவேண்டுமென்று வைத்துக்கொண்டாலும், அங்கிருக்கும் நாடுகளுக்கும் சுதந்தரம் அநுபவிக்க உரிமை உண்டல்லவா?

ரஷ்யாவுக்கு உபயோகப்படக்கூடிய கருங்கடல், பால்டிக் கடல், இவ்விரு பிரதேசங்களிலும் ஜெர்மனியும் தன் அதிகாரத்தைப் பரப்ப முயன்று வந்திருக்கிறது. இக்காரணத்தால் இவ்விரு வல்லரசுகளுக்கும் கடும்பகை இருந்து வந்தது.

1939-ம் வருஷம் செப்டம்பர் ஆரம்பத்தில் ஜனநாயக தேசங்களான பிரிட்டனும், ப்ரான்ஸும் போலந்தை ஜெர்மனி தாக்கியதால் ஜெர்மனியின்மேல் சண்டை ஆரம்பித்தன. ரஷ்யாவையும் தங்கள் கட்சிக்கு அழைத்துக்கொள்ள முயன்றன; ஆனால் அது பலிக்கவில்லை. தீராப் பகையாளிகளென்று அதுவரை சொல்லிவந்த ஜெர்மன் சர்க்காரும் ரஷ்ய சர்க்காரும் திடீரென்று ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். இவ்வொப்பந்தம் ஜெர்மனிக்கு ஒரு பெரிய ராஜதந்திர வெற்றி என்று நாஜிகள் பெருமையாகச் சொல்லிக்கொண்டார்கள்.

எப்பொழுதும் ஜெர்மன் அதிகாரிகளுக்கு ஜெர்மனி கிழக்கு, மேற்கு இருபுறத்திலும் தாக்கப்பட்டால் சண்டையிடுவது மிகக் கடினம் என்று தெரியும். ஆகையால் ஜனநாயகங்கள் ரஷ்யாவுடன் சேருவதைத் தடுத்து ஜெர்மனி ரஷ்யாவைத் தனக்கு விரோதமில்லாமல் செய்துகொண்டது. ரஷ்யா அவ்வளவு எளிதாக ஜெர்மனியின் எண்ணங்களுக்கு இணங்கிவிடுமா? ஹிட்லர் பொது உடமைக் கட்சியைக் கொஞ்சமாக வைத்திருக்கிறாரா? சடையைப் பிடித்திழுத்தால் சந்நியாசி கிட்டே வருவான் என்றவிதமாக, இதுதான் சமயமென்று ரஷ்யா ஜெர்மனியுடன் மறைவாக பேரங்கள் பேசியது. அந்த பேரங்களில் ஒன்று-பால்டிக் நாடுகள் விஷயத்தில் ரஷ்யாவை ஜெர்மனி யதேச்சையாய் விட்டுவிடவேண்டுமென்பது.

ரஷ்யா பால்டிக் பக்கத்தில் தன்னுடைய பலத்தை ஊர்ஜிதம் செய்ய மும்முரமாய் ஆரம்பித்திருக்கிறது. தன் புது நண்பர்களான ஜெர்மன் நாஜிகள் கையாளும் முறைகளையே தானும் பிரயோகிக்கிறது. போலந்து முழுவதையும் ஜெர்மனி விழுங்கி விடுவதற்குமுன் ரஷ்யப் படைகள் போலந்தின் கீழ்ப்பாதியை ஸ்வீகரித்துக் கொண்டன. பிறகு, போன அக்டோபர் மாதத்தில் ரஷ்யா எஸ்டோனியாவை மிரட்டி அச்சிறுநாட்டிலும் அதன் பக்கத்திலுள்ள பால்டிக் தீவுகளி

னும் தன்னுடைய கப்பற் படை விமானப்படை நிலையங்கள் ஸ்தாபித்துக்கொள்ள உரிமைபெற்று விட்டது. பிறகு லாட்வியாவும், லிதுவேனியாவும் இம்மாதிரியே ரஷ்யாவின் வலைக்குள் இழுக்கப்பட்டன.

ஜெர்மன் சர்க்கார் வேறு வழியில்லாமல் இந் நாடுகளில் அனேக நூற்றுண்டுகளாகக் குடியேறியிருந்த ஜெர்மன் குடும்பங்களை வேரோடு பெயர்த்து ஜெர்மனிக்கு அழைத்து வந்துகொண்டிருக்கிருர்கள்.

சமீபத்தில் பின்லாந்தையும் ரஷ்யா அடக்கி ஆளப்பார்த்தது. ஆனல் பின்லாந்து சர்க்கார் ரஷ்யாவின் கடுமையான நிபந்தனைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனல் ரஷ்யா பின்லாந்து மீது இப்பொழுது போர் தொடுக்கிறது. தன் தற்காப்புக்கு வேண்டிய வசதிகளை பின்லாந்து கொடுக்க மாட்டேனென்கிறதாம். பின்லாந்து ரஷ்யாவிடம் பலாத்காரம் ஆரம்பித்திருக்கிறதாம். இதுபோன்ற அபாண்டங்களையெல்லாம் ரஷ்யா வெளியுலகத்திற்கு அள்ளிவிட்டுக்கொண்டிருக்கிறது.

சில வருஷங்கள்முன் ரஷ்யாவும் சர்வதேச சங்கத்தில் ஒரு அங்கத்தினராய்ச் சேர்க்கப்பட்டது. தேசங்கள் தங்கள் பரஸ்பர உறவுகளில் ஒழுங்கு தவருமல் நடக்கவேண்டும் என்று ஸோவியத் பிரதிநிதிகள் சர்வதேச சங்கக் கட்டடங்களில் அனேகந்தடவை உருக்கமாய் வாதித்திருக்கிருர்கள். ஜெர்மனியின் அட்டூழியங்களை மற்ற நாடுகளைவிட அழுத்தமாகக் கண்டித்திருக்கிருர்கள். இப்பொழுதோ? ஜெர்மனியைக் கண்டித்த ரஷ்யா "அவன் கிடக்கிருன் குடிகாரன்; எனக்குப் போடு ஒரு மொந்தை' என்கிறது.

சிலநாள்முன் சர்வதேச சங்கம் ஸோவியத் பின்னிஷ் தகராறில் தான் மத்யஸ்தம் செய்வதாகச் சொல்லியும் ரஷ்யா இதை நிராகரித்தது. ரஷ்யா ஒழுங்கீனமாக நடந்துகொண்டதால் அதைச் சர்வதேச சங்கத்திலிருந்து விலக்கி அச் சங்க சபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இது மிகவும் நியாயமென்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள்.

அரசியல் துறையிலிருந்து நோக்கினல் பால்டிக் கடல் எப்படிக் கொந்தளிக்கிறது பாருங்கள்! இக்கடலைச் சுற்றிய சிறு நாடுகள் பாதிக்குமேல் சுதந்தரம் இழந்துவிட்டன. பின்லாந்து தன் சுதந்தரத்தைக் காப்பாற்றிக்கொள்ள எல்லோரும் அதிசயிக்கத்தக்க மனேதைர்யத்துடன் ரஷ்யாவை எதிர்த்து சண்டையிடுகிறது. ஸ்வீடன், நார்வே, டென்மார்க் கண்கலங்கி நிற்கின்றன; தங்கள் நடுநிலைமைக்குப் பங்கமேற்படாமல் பின்லாந்துக்குத் தங்களாலியன்ற உதவியையும் செய்கின்றன.

பிரிட்டன் இச்சிறு நாடுகளிடம் மிகவும் அனுதாபம் காட்டுகிறது. வெகு காலமாக பிரிட்டனையும் இந்நாடுகளையும் பிணைக்கும் பாகங்கள் பல உண்டு, அரசியல் தத்துவங்களிலும் சரி, வர்த்தக விஷயங்களிலும் சரி.

ஜெர்மனி, ரஷ்யா இரண்டும் பால்டிக் பிரதேசத்தில் தங்கள் அதிகாரத்தை ஸ்தாபிக்க விரும்புவதால் இவைகளின் நோக்கங்களில் முரண்பாடு ஏற்பட்டிருக்கிறது; ஆனல் தற்சமயம் இவை சிநேகிதர்களாக வெளிவேஷம் போடுகின்றன. ஏனென்ருல் ஹிட்லர், ரஷ்ய சாத்தானுக்கும் ஜனநாயக சமுத்திரத்திற்கும் நடுவில் அகப்பட்டுத் தத்தளிக்கிருர். பின்னிருக்கும் சமுத்திரத்தைப் பார்த்தால் முன்னிருக்கும் சைத்தானே மேலென்று எண்ணி ஹா ஆபத்பாந்தவா, என்று சொல்லிக்கொண்டே ரஷ்யாவின் நட்பை நாடுகிருர். இச்சமயம் பார்த்து ரஷ்யாவும் பால்டிக் சுற்று வட்டாரங்களில் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்கிறது.

இந்தக் கோரமான அரசியல் பின்னல்கோலாட்டம் எப்பொழுது முடிவுபெறும்; சிக்கடைந்த கயிறுகள் எப்பொழுது பிரிக்கப்படும் என்பது தற்சமயம் சொல்ல இயலாமலிருக்கிறது.



(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

முதல் அங்கம்

ஐந்தாம் காட்சி

[முருகன் திருவுருமுன்னே பவழமல்லிகை மாலை தொடுத்துக்கொண்டே மங்களம் கண்ணீர் விட்டழுகிறாள். சுந்தரி கொடுமையாகப் பார்க்கிறாள்.]

மங்களம்

(அறுசீர்விருத்தம்)

தாயிலேன் முருகா நீயே
  தாயினுந் தயவு மிக்காய்!
வாயிலேன்; மாற்றாந் தாயின்
  வன்கோடுங் கோலைத் தாங்கேன்.
சேயினேன்; முற்பிறப்பிற்
  செய்ததீ வினைகள் யாவோ?
பேயின்கை இரவிற் பட்ட
  பிள்ளைபோல் வாடு கின்றேன்!

சுந்தரி

பாட்டு, பாட்டு பாட்டு வேறு?
இந்தப் பொம்மைமுன் என்னைச் சபிக்கிறாய்!

மங்களம்

பொம்மை யில்லையென் அம்மை யப்பன்!

சுந்தரி

அம்மை நானே; அப்பன் கிழவன்,
சிவப்பித் தேறித் திண்ணையி லிருப்பான்.
சோறு போட்டுத் துணிமணி கொடுத்து
எழுத்தறி வித்தேன்...என்னை மறந்தாய்;
நன்றி கெட்ட நடுத்தெரு நாயே!

மங்களம்

நன்றி கெடாது நாயொரு காலும்;
அப்பா மனத்தின் அன்பும் கெடாது.

சுந்தரி

அப்பா, அப்பா, அப்பா வென்றே
அந்தக் கிழவரை விந்தையாய் மயக்கி,
கோள்பொய் சொல்லியென் குடியைக் கெடுத்தாய்!
ஆண்டி மடம்போல் ஆச்சுது வீடு.

மங்களம்

நல்ல பொருளை நவிலும் வாயால்
உன்னைப் பற்றி ஒன்றுமே பேசேன்;
அப்பா சொற்கள் அறிவின் அமுதம்...

சுந்தரி

அறிவாம்... அமுதாம்... ஆஷாட பூதிகள்!

மங்களம்

அப்பனைச் சொன்னால் அதைநான் தாங்கேன்.

சுந்தரி

அனாதைப் பிணமே யாருனை வளர்த்தார்?
குலுக்கை குலுக்கையாய்க் கொட்டிக் கொள்கிறாய்!

போடீ...! எனது புடவையைத் தோய்த்துவா !
வெந்நீர் போடு...! வீட்டைப் பெருக்கு!
கொல்லையி லிருக்கும் குப்பையை அள்ளு!
அப்பு வுடனே அடுப்புப் பணிசெய் !
தண்ணீர்த் தொட்டியைத் ததும்ப நிரப்பு !

மங்களம்

பூசை செய்து போகிறே னம்மா ?

சுந்தரி

பூசையாம் பூவாம் ; பொம்மைவைத் தாடினுய் !
பாழும் மூளி...பதினாறு வயது
குட்டிச் சுவரே ! உலக்கைக் கொழுந்தே !

மங்களம்

முருகா, முருகா! முருகா, முருகா !

சுந்தரி

முருகனைத் தூக்கியுன் மூளையி லடிக்கிறேன் !

[முருகன் உருவை எடுத்து மங்களம் தலையில் ஒருகுட்டு வைத்து எறிகிறாள்.]

மங்களம்

முருகா முருகா! முருகா முருகா !
இன்றென் மாலை இல்லையோ வுனக்கு !

சுந்தரி

மாலையாம்...! உனது மணமகன் இதுவோ ?

[மாலையைப் பறித்தெறிகிறாள்]

மங்களம்

ஆம், ஆம் ; அவனே அடியேன் மணாளன்.
முருகா, முருகா, ஜோதி முருகா !

சுந்தரி

கழிசடைக் கழுதை ! கதியிலா நாயே !
அதிட்டக் கட்டை, அவலட் சணமே !
மூஞ்சியைப் பாரடீ மூஞ்சுறு போலே !

மங்களம்

என்ன செய்தேன் ? ஏனிக் கோபம் ?
குமரனே, இந்தக் கொடுமையைக் காணாய் !

சுந்தரி

என்னை, என்னை, எதிர்க்கும் நாக்கைக்
கொள்ளிக் கட்டை கொண்டு பொசுக்குவேன்.
அடங்கி நடடீ அனாதைப் பேயே !

மங்களம்

அடக்கம் உனக்கே அமைந்திட வேண்டும்.

சுந்தரி

கொடுக்கிறேன் பூசை குண்டுணிப் பேயே !

[அடிக்கிறாள்]

மங்களம்

அப்பா, முருகா ! அப்பா, அப்பா !

[உள்ளிருந்து சிவம்]

என்ன என்ன ? என்னே கூச்சல் ?

[உடனே சுந்தரி முருகன் உருவை இருந்த இடத்தில் வைத்து விட்டு, மாலையை மங்களத்தின் அருகே எறிந்து உள்ளே ஓடுகிறாள். சிவம் வருகிறான்.]

சிவம்

அழாதே கண்ணே, அருமை மங்களம் !
நடந்ததைச் சொல்லு நானிருக் கின்றேன்.

மங்களம்

[விம்மியழுது]

வேலனை வணங்க மாலை தொடுத்தேன்;
அம்மா வந்தெனை அடித்தாள் வைதாள் ;
முருகனைத் தூக்கி மூளையி லடித்தாள் ;
மாலையைப் பறித்து மண்ணில் வீசினாள்.

சுந்தரி

[சினத்துடன் வந்து]

என்னபொய், என்னபொய், இந்த வயதிலே !
நீரும் அவளது நீசப் பேச்சைக்
கேட்டெனைச் சினப்பீர்.

சிவம்

கேட்கிறே னுன்னை ;
ஏனிக் கூச்சல் ? ஏனிங் கடிதடி ?
கச்சேரி வேலையைக் கலைத்ததுன் சத்தம் !

சுந்தரி

ஆமாம் ; நானே அக்கப்பட் டுள்ளேன்.
எல்லாப் பழியும் என்மேற் போடும் !

சிவம்

ஏனிவள் அழுகிறாள் ? என்னநீ செய்தாய் ?

சுந்தரி

அவள் குற்றத்தை அறிகிறீ ரில்லை,
கொம்பு போலே குமரிப் பெண்ணைச்
சொப்பு வைத்தாடச் சொல்லு கின்றீர்!
"கணவனுக் குன்னைக் கட்டிக் கொடுத்தால்,
சமைக்க வேண்டாமா, தண்ணீர்க் குடங்கள்
சுமக்க வேண்டாமா, சுருசுருப் பாகக்
காரியம் செய்"யெனக் கனிவுட னுரைத்தேன்.
அதற்குப் பிடாரி அடிக்கிறே னென்றே
அலறினாள் ; வந்தீர்.

சிவம்

அபத்தம் வேண்டா !

சுந்தரி

அபத்தம் உங்கள் அலுவலா யிற்றே !

[வேதாந்தப் பாட்டி வருகிறாள்]

பாட்டி

என்னடீ சத்தம் ? எதிர்வீ டதிருதே !

சுந்தரி

வேதாந்தம் இனி வேதனை செய்யும்.
நான்போ கின்றேன் நாவல் படிக்க.

[போகிறாள். ஒருநாவல் படிப்பதுபோல்
மறைவாயிருந்து ஒட்டுக்கேட்கிறாள்]

பாட்டி

ஏனடீ கண்ணு ? ஏன்அழு கின்றாய் ?

சிவம்

அம்மா இதற்கெலாம் யானே காரணம்.
உலகம் என்னிடம் உண்மை அறிக !
ஐம்பது முடிந்தபின் யாரும் எனைப்போல்
இளையா ளுடனே இடும்பைப் படற்க !
இரண்டாந் தாரம் எடுத்ததே பிசகு !
வினைப்பய னிவ் விலங்கைச் சுமக்கிறேன்.

சுந்தரி

[மறைவிலிருந்தே மனத்துள்]

அந்தப் புத்தி அப்போ தெங்கே !

பாட்டி

குடும்பமென் றாலே இடும்பைதா னப்பா ?
ஆயிரம் கொடுமைகள் அனுப வித்தேன்—
மாமியின் செருக்கு நாத்தி பொறாமை
முரட்டுக் கணவனின் மூடக் கோபம்... ...

சுந்தரி

[மனத்துள்]

இன்னும் சொல்லும் இரண்டு தடவை !

பாட்டி

கட்டுக் கடங்காக் கணவன் தம்பிகள்,
சிறுவாடு விற்கும் சிற்றிகள் திருட்டு,
பேயினும் கொடிய பிடாரிகள் சண்டை,
பணமே பெரிதெனும் பந்து ஜனங்கள்,
மல்லுக் கட்டும் மாம னார்கள்,
அச்சமில் லாத மச்சான் மார்கள்,
பக்கம் பார்க்கும் பத்தினி யென்போர்,
தலையணை மந்திரம் சாற்றும் மனைவி,
அண்ணன் தம்பிகள் அடிதடி நாடகம்,
நாட்டுப் பெண்களின் போட்டிச் சேட்டைகள்,
குடும்பம் இரண்டாம் குட்டிக் கலகம்,
பேய்பிடித் ததுபோல் பெருங்குர லெடுத்தே,
பெண்கள் சண்டை பிடிக்கும் கோரம்
ஆயிரம் நோய்கள், ஆயிரம் குறைகள்,
ஆயிரம் இடர்கள் யாவும் கண்டேன் ;
சிவசிவ சிவவெனச் செபமாலை யுருட்டி
எல்லாம் ஈசன் இச்சையென் றிருப்பதே
இன்ப வழியென் றினிதுநான் அறிந்தேன்.

சுந்தரி

[மனத்துள்]

சரிசரி பைத்தியம் ! சாளிவாய் மூடு !

சிவம்

அந்தப் பக்குவம் அடியனுக் கின்றி
குடும்பப் போரில் குத்துப் படுகிறேன்.
இறைவனுக் கேயென் குறைகளைச் சொல்வேன் !
மங்களத் திற்கோர் மணாளன் வந்ததும்,
உலகக் கட்டை உதறிச் செல்வேன்.

சுந்தரி

[மனத்துள்]

இரவிலே பார்ப்போம் இவர்மன வுறுதி !

பாட்டி

கட்டுண்ட வாழ்க்கை கண்ணீர்க் கடலாம்,
காமத் திமிங்கிலம், கடுஞ்சின முதலை,
தாமதச் சுறாக்கள் சண்டைபிட் டலையும் ;
பனிமலை போலப் பிணிமலை மோதும்,
பொறாமைச் சண்டைகள் பொங்கிவீ றிட்டுப்
புண்ணீர் வெள்ளப் புயலெனப் பொருதும் ;
அகப்பட் டவர்க்கே அட்டமத் துச்சனி !
இச்சம் சாரம் இடும்பையென் றுணர்ந்தே,
சதாசிவப் பிரமம் தப்பி யோடினார்,
பட்டினத்தடிகள் சட்டெனத் துறந்தார்.
பந்தப் படாதார் பாக்கிய வான்கள் !

சிவம்

மெய்தா னம்மா விடுதலை வேண்டும்.

சுந்தரி

[படபடவென்று பேசிவருகிறாள்]

இன்றே விடுதலை; என்மேற் பிழையிலை.
பார்க்கிறேன் பார்க்கிறேன் பகலும் இரவும் !
பாட்டிக்குப் பின் பாட்டுப் பாடி
பிரசவவை ராக்கியம், பேசி யளக்கிறீர் !
இரவிலோர் வேடம் ! பகலிலோர் வேடம் !
படித்தீர், பட்டம் பதவிகள் பெற்றீர் !
காலம் வேண்டும் கோலமும் குணமும்
மனைவிக் கேற்ற மனமும் மாண்பும்
நாலுபேர் மதிக்கும் நாக ரிகமும்
இல்லை யுமக்கு ! தொல்லை, தொல்லை !!

பாட்டி

உத்தம மான பத்தினிப் பெண்டிர்,
பதிமனப் படியே கதியென நடப்பார்.

சுந்தரி

பாட்டி திருவாய் பூட்டுக சற்றே !
அடிமைச் சங்கிலி அறுந்து விழுந்தது.

ஆணும் பெண்ணும் அனைத்திலும் சரிநிகர் !
சுதந்தரக் காதல், சுதந்தரத் திருமணம்,
சுதந்தர வாழ்க்கை, சுதந்தரப் பணிகள்,
சுதந்தர வுள்ளம், சுதந்தரப் பேச்சு
சுதந்தர மென்றே துடிக்குதெம் உள்ளம்!

பாட்டி

குடும்பப் பேர்ரெலாம் குணதொந் தப்போர்.
இனப்பற் றெல்லாம் மனப்பற் ருகும்.
சகடக் கால்போல் சுகதுக் கங்கள்.
ஆவதும் அழிவதும் ஆண்டவ னிச்சை.
சாட்சியாம் ஆன்மா சஞ்சல மற்றது.
'அதுநான்' என்னும் அறிவே அறிவாம்.
தாமரை இலைமேல் தண்ணீர் போலே
ஒட்டா திருப்பதே உண்மை யின்பமாம்.

[பாட்டி செல்கிருள்]

சுந்தரி

ஒட்டா தேயிரும் கிட்ட வாராமல்!

சிவம்

சுந்தரி, உண்மையைச் சொல்லு கின்றேன்.
மங்களத் தைநீ மகள்போல் நடத்து!
கடுமையாய்க் குழந்தையைக் கண்டிக் காதே—
தாயிலாக் குழந்தை தயவுகொள் சற்றே !

சுந்தரி

அவள்மே லென்பெரும் அன்பை அறியீர் !
பொன்னுக் கவளை நன்மணம் புரிந்து,
வீட்டுடன் வைத்துக் கொள்ள விரும்பினேன்—
அத்தை பிள்ளை, அருமைப் பிள்ளை.

மங்களம்

அப்பா நானும் ஆலயம் சென்றபின்,
அன்புவள் ளியுடன் ஆடிப் பாடி
வருகிறேன், பாட்டி வருவா ளுடனே.
கண்ணீ ரெல்லாம் கழுவிச் செல்வேன்.

சிவம்

சரிநீ போய்வா!

[மங்களம் செல்கிருள்]

சுந்தரி

தனிமை பிறந்தது,
சொல்வதைக் கேளும்! சும்மா பேச்சேன்?
'அரிசிவ' என்றல் அரிசி வேகுமா ?
பாட்டிவே தாந்தம் பணம் பழுக்குமா ?
என்மனப் படியே இசைந்து நடந்தால்,
அத்தா னுக்கு முத்து மழைதான்!

சிவம்

உன்மனப் படிதான் உவந்து நடக்கிறேன்.
உன்சுயேச் சைக்கிங் கொருகுறை யில்லை;
பேச்சிலும் சாயப் பூச்சிலும், நடையிலும்,
சுதந்தரி யாகவே சுந்தரி யுள்ளாள்.

சுந்தரி

அதெல்லாம் சரிதான், ஆட்சேப மில்லை ;
அத்தான் மனத்தை அறியா தவளா ?
இந்தக் குட்டியால் வந்தது தொல்லை ;
தைபி றந்ததும் தாலியைக் கட்டுவோம்.
பொன்னு வுடனிவள் பொருந்தி வாழ
நாக ரிகத்தில் நயம்பெற வேண்டும்.
கல்லூ ரியிலிவள் கற்றிட விடுப்போம்—
வீட்டிலும் அமைதி விளங்கும் அதனல்.

சிவம்

இயலு மட்டும் பயிலுக கல்வி ;
வேளை பார்த்து நாளையே சேர்க்கிறேன்.
மங்களம் நல்ல மதிப்பொலி வுடையாள்,
நல்ல இடத்தில் நான்கைந்து வரன்கள்
ஜாதகம் அனுப்பித் தருணம் பார்க்கிருர்.
கணிகளைக் கொண்டு கவனமாய்ப் பார்த்து
பொன்னுவின் ஜாதகம் பொருந்துவ தறிந்து,
இறைவ னருள்வழி என்றும் செல்வோம்.

சுந்தரி

நல்லசோ திடரை நான்வர வழைப்பேன்.
பொன்னுக் குத்தான் பொருந்தும் முடிவிலே.

சிவம்

பார்ப்போம், முடிப்போம் பதற்றமில் லாமல்.

சுந்தரி

அத்தானுக் கொரு முத்தங் கொடுக்கிறேன்.

சிவம்

ஹ ஹ! ஹ ஹ! ஹ ஹ! ஹ ஹ!
உன்மனப் படியே உலகை வளைக்கிறேன்.

சுந்தரி

ஆ, ஆ அப்படி! அத்தான் சமர்த்து!

[இன்னெரு முத்தம்]

சிவம்

நீயே உலகம், நீயே இன்பம்!

சுந்தரி

நீரென் வாழ்வு, நீரென் இறைவர்,
இப்படி யேநாம் இன்புற் றிருப்போம்.
ஹி ஹி ஹி ஹி ஹி ஹி ஹி ஹி!

[இன்னெரு முத்தம்]

சிவம்

இருவர் மனமும் இணைந்த காதலே,
இல்ல றத்தினை இயக்குந் திறனும்.

அன்பே அதனை ஆளும் செங்கோல் ;
அறமே அதன்பொன் அரியணை யாகும் ;
அருளே வாழ்க்கையால் ஆகிய பயனும்.

சுந்தரி

சிவசுந் தரமே திவ்விய ஜீவனம் !

[அப்பு வருகிறான்]

அப்பு

கக்க...கக்க...காப்பித் தயார்.

சுந்தரி

அத்தான் காப்பி ஆற்றித் தருகிறேன் ;
அன்றுசென் றதுபோல் இன்றுநாம் செல்வோம்.

[இருவரும் வதுவார்போல் கை கோத்துச் செல்கின்றனர். சுந்தரி ஒரு குறும்புச் சிரிப்புக் காட்டிச் செல்கிறாள்.]

ஆறுங் காட்சி

[வைகைக்கரையில் **முருகனார்** மலர்வனக் காட்சி. வாழை, தென்னை, மா, பலா முதலிய மரங்கள் செழித்தோங்கி யிருக்கின்றன. முல்லை, மல்லிகை, ரோஜா, இருவாட்சி, சண்பகம், பாடலம், அரளி, நந்தியாவட்டை, செவந்தி, தும்பை, துளசி, மருக்கொழுந்து, திருநீற்றுப்பச்சை, வில்வம் முதலியன தழைத்திருக்கின்றன. மலர்மணத் தென்றல் வீசுகிறது. கிளி, குயில், மைனா, புல்புல், புறா, காகம், சிட்டு, கருடன் முதலிய புட்கள் அந்திப்பாட்டுப் பாடுகின்றன. ஒரு வில்வ மரத்தடியில் சிவலிங்கம் உள்ளது. அதனருகில் **வேதாந்தப்பாட்டி** ஜபம் செய்கிறாள் **முருகனார்** தோட்டத்தில் மலர்பறிக்கிறார். **வள்ளி, மங்களம், தோழிமா**ருடன் பாடிப் **பந்து நடன**மாடுகின்றனர்—அதாவது தோழிகள் எட்டுப்பேர் பெரிய வட்டவடிவாக நிற்றல் ; முதல் தோழி பாட்டிற் கேற்றபடி பந்தை உருட்டிக்கொண்டே தனக்கு எதிர்ப்புறம் உள்ள தோழியருகே சென்று அவள் இடத்தில் நின்று பாடுவாள். அதற்கேற்றபடி அந்த இடத்தில் இருந்த தோழி பந்தை எற்றி எதிரே இரண்டாவது தோழியின் இடத்திற்குச் செல்வாள். இரண்டாந்தோழி அதேமாதிரி பந்தைக் கொண்டு எதிரேயுள்ள தோழியிடம் தருவாள். இந்த மாதிரி விரைவாக நடனமாடிப் பந்தெற்றல் உடற்பயிற்சியுடன் நல்ல விளையாட்டாகவும் இருக்கும்—**மங்களம்** சிவ முருகனைப்பற்றியும், **வள்ளி கண்ணனைப்**பற்றியும் பாடுவர். மற்றப் பெண்கள் சேர்ந்துபாடுவர்.]

எல்லாரும்

வந்துவந்து செல்லுகின்ற
வாழ்க்கைமின்ன லென்னவே
உந்திஉந்திக் கால்களை
உயரப்பந் தடித்துமே !

மங்களம்

வெற்றிவேல் முருகனை
விரும்பியன்பு மேவியே
எற்றிநம் கவலையை
எறிந்துபந் தடித்துமே !

வள்ளி

பாம்பின்மேல் நடம்புரிந்த
பங்கயத் திருவடி
தாங்கியெம் உளத்திலே
தணிந்துபந் தடித்துமே !

எல்லாரும்

வந்து வந்து........

மங்களம்

நாமெனும் அகந்தையின்றி
நாட்டம்ஊன்றி நெஞ்சிலே
ஓம்நமச்சி வாயஓம்என்
றோங்கிப்பந் தடித்துமே !

வள்ளி

கண்ணன்அன்பை யெண்ணியெண்ணிக்
காதலால் உருகியே
விண்ணளாவத் தாவிவேக
மாகப்பந் தடித்துமே !

எல்லாரும்

வந்து வந்து........

மங்களம்

அம்பலத்தில் ஆடும்ஜோதி
அப்பன் பாதப் போதினை
நம்பிநம்பி நம்வினை
நலியப்பந் தடித்துமே !

முருகனார்

பூத்தது மல்லிகை பூவையீர் வாரீர்
வண்டுடன் பாடி வனமலர் கொய்வோம்.

வள்ளி

ஆட்டம் போதும் அருமலர் பறிப்போம் !

எல்லாரும்

[பாட்டுப்பாடிக்கொண்டே மலர்கொய்தல்]

[செஞ்சுருட்டி ராகம்—திரிபுடைதாளம்]

மதுமலர் கொய்திடுவோம்—தோழிமாரே
வாழ்க்கை வனத்தினிலே—தோழிமாரே

வள்ளி

புதுமணத் தென்றலுடன்—தோழிமாரே,
பூங்குழல் கேட்குதம்மா—தோழிமாரே !

மங்களம்

வண்டுக ளுடன்சென்றே—தோழிமாரே,
வாசமலர் பறிப்போம்—தோழிமாரே !

வள்ளி

தொண்டர் துணைவனுக்குத்—தோழிமாரே—மாலை
தொடுத்துத் தொடுத்தணிவோம்—தோழிமாரே !

எல்லாரும்

மதுமலர் கொய்திடுவோம்........

வள்ளி

காதல் வனத்திலே—தோழிமாரே,
கண்ணன் ஒளிந்திருப்பான்—தோழிமாரே !

எல்லாரும்

மாதவி மலர்களால்—தோழிமாரே—அவன்
மார்பை அலங்கரிப்போம்—தோழிமாரே !

மங்களம்

முத்தமிழ்ச் சோலையிலே—தோழிமாரே,
முருகன் உலாவுகின்றான்—தோழிமாரே !

எல்லாரும்

கொத்துக்கொத் தாய்க் கடம்ப—மலர்தொடுத்தே
குமரன் அருள்பெறுவோம்—தோழிமாரே !

வள்ளி

மல்லிகை சண்பகம்—துளசி ரோஜா
மாதவ னுக்கணிவோம்—தோழிமாரே !

மங்களம்

வில்வம் செவந்திதும்பை—கொன்றைமாலை
விசுவமூர்த்திக் கணிவோம்—தோழிமாரே !

எல்லாரும்

மதுமலர் கொய்திடுவோம்........

மங்களம்

அறிவான பரமனைத்—தோழிமாரே,
அன்பு மலர்சொரிந்தே—அடிபணிவோம் !

எல்லாரும்

விரிவான உலகெல்லாம்—தோழிமாரே—அருள்
விளையாடும் வனமென்போம்—தோழிமாரே !

முருகனார்

போதும் மலர்கள் ! பொழுது விழுந்தது !
அந்திப் புட்கள் 'அரஹர' வென்னச்
சிந்தை யடங்கிச் செகமெலாம் போற்றச்
செந்நகை புரிந்து சென்றனன் இரவி.
அன்ன நடையீர் ! அமுதவாய்ச் சொல்லீர் !
வைகைக் கேகிக் கைகால் அலம்பி,
முகத்தைக் கழுவி முத்துப் போலே
பொட்டிட் டிங்கே பொலிவுற வாரீர் !
பரமன் புகழைப் பாடி மகிழ்வோம் !

எல்லாரும்

பரிசுத்த மாகப் பரமனைப் பாடுவோம் !

[செல்கின்றனர்]

பாட்டி

முருகனார் வனமே முத்தி வனமாம்;
பார்க்கு மிடமெலாம் பசும்பொன் மலர்கள்;
இரத்தினக் கனிகள், இயற்கைப் புன்னகை
பாய்ந்து பறக்கும் பறவைப் பாட்டு,
பரசுக மளிக்கும் பத்திப் பாடல்,
மனமகிழ் விக்கும் மங்கையர் கீதம்,
குழலும் வீணையும் குலவிசை விருந்து,
நல்ல பேச்சு, நல்ல பழக்கம்,
நல்ல போதாய்ச் செல்லுது நாளே!

முருகனார்

உலக வாழ்வெனும் உலையில் உருக்கி,
அழுக்கை நீக்கி, அருளொளி காட்டி,
கண்ணைத் திறந்து, கழலடிக் காளாய்ச்
செய்தான் என்னைச் சிவபிரான்,
செய்வ தெல்லாம் சிவனருட் பணியே !

பாட்டி

அவனரு ளின்றி அசையுமோ உயிர்தான் !
வாழ்க்கைப் போரில் வருந்துய ரெல்லாம்,
உயிர்மா சறுக்கும் உபாய மாகும்.
எத்தனை யிடர்களில் என்னுயிர் வருந்திச்
சித்தம் தெளிந்து சிவாய நமவெனப்
பத்தியி லுருகிப் பணிந்தது தானே !

முருகனார்

மங்களம் எல்லாம் எங்களுக் கியம்புவாள்;
தங்கள் ஞானத் தகைமை பெரிதே !

[இச்சமயம் வள்ளியும் மங்களமும் மெல்ல வந்து மறைந்திருந்து கேட்கின்றனர்]

பாட்டி

மங்களத் திற்கும் இங்கே மனதாம் ;
'வீட்டுத் தொல்லையை வெறுத்து நீக்கி,
வள்ளி யுடனே வசிப்பே' னென்பாள்.
ஐயோ வீட்டில் ஆயிரம் ரகளை !
என்மகன் சிவனும் உம்போல் சாது ;
அந்தரி நடத்தை சுத்த மோசம்!
நாத்திகப் பொன்னுவே நல்லவ னென்பாள்;
எங்களைக் கண்டால் எட்டிபோல் வெறுப்பாள் ;
பெண் சுதந்தரம் பேசுவாள் நீள ;
மாசில் லாத மங்களத் திருவை
காள கண்டிபோற் கசக்கிப் பிழிவாள்.
கொடுமை யாகவோர் குற்றம் புனைவாள்,
அடிப்பாள் வைவாள், அடிமைபோல் ஒறுப்பாள்.
ஏனிக் கொடுங்கோல் என்றால்
கணவனைச் சினப்பாள்; கட்டுக் கடங்காள்...!

முருகன்

மங்களம் போலொரு மங்கையெங் குண்டு ?
பாட்டும் தமிழும், பத்தியும், பணிவும்,
அமைதியும், அடக்கமும், அன்பும், நேயமும்,
அழகும், திருவும், அறிவும், கல்வியும்,
தூய வாழ்வுந் துலங்கும் இலக்குமி !
அவளை மணந்தவன் அதிட்டமே அதிட்டம்!
ஆனால் அவள்படும் அகத்துய ரெல்லாம்
சொல்லா திருப்பினுந் தோன்றுமே முகத்தே.
கைப்புண் காணக் கண்ணாடி வேண்டுமோ ?
விண்ணொளி நோக்க விளக்கு வேண்டுமோ ?
மல்லிகைக் கடைக்கு மணமே விளம்பரம்.
மங்களம் சொக்கத் தங்கமென் றறிவோம்.

பாட்டி

தங்கத் திற்கொரு தணல்மணி வேண்டும்.
ஈச னிச்சை எவனைக் கூட்டுமோ ?
தைக்குள் அமையச் சாதகம் பார்க்கிறோம்.
அந்நாள் மட்டும் அருமை மங்களம்,
உங்கள் பெண்போல்...

முருகனார்

இங்கே தங்குக..!
வள்ளியும் அவளும் உள்ளன் பர்கள்;
என்னிடம் தினமும் இசைத்தமிழ் பயிலும்
பெண்மணி களுக்கும் பிரிய மானவள்.

பாட்டி

மங்களம் இங்கே மகிழ்வுட னிருப்பாள்;
இன்றே சிவனிடம் இயம்பு கின்றேன்.

முருகனார்

செல்வஞ் செழித்த திருவெலாங் கண்டேன்,
அடியார் பணியிலும், அரனார் பணியிலும்,
மகனை மகளை வளர்த்த பணியிலும்,
அனைத்தும் போயிவ் வனத்திடை யுள்ளேன் ;
மனைவியை யிழந்தேன் ; வள்ளியும் இப்படிக்
கணவனை யிழந்தாள் ; கவலை பெரிதே ;
சிவனார் பணியிலுஞ் செந்தமிழ்ப் பணியிலும்,
திருமுறைப் பணியிலும், செல்வியர் பணியிலும்,
ஜோதி படிப்பிலும், துயரெலா மறந்தேன்.
வள்ளி மகிழ மங்களம் துணையாம்.

பாட்டி

மெத்தவு மகிழ்ச்சி; உத்தம ஜோதி
எங்கே காணோம் இத்துணை நாளாய் ?

முருகனார்

பி. ஏ.-தேறப் பெரிதும் உழைக்கிறான் ;
பரம ஏழை பணத்திரள் வேண்டுமே?
மதிப்பொலி வுள்ள மாணவ னென்றே
பதினைந்து ரூபாய்ப் பரிசு தருகிறார்.
சம்பளத் திற்குச் சரியாய்ப் போகும்.
சாப்பாட் டிற்கும், சட்டை துணிக்கும்,
பையன் களுக்குப் பாடம் சொல்லித்
தருவதைக் கொண்டு தாட்டுவான் காலம்.
என்னிடம் யாதும் எதிர்பா ராமல்
தானே முயன்று மேனிலைக் குற்றான்.
பரீட்சைக் கின்னும் பணம்கட்ட வேண்டும்.
சிவபெரு மானின் சித்தமெப் படியோ ?

[ஜோதி வருகிறான்]

ஜோதி

அப்பா வணக்கம் ! அம்மா வணக்கம் !

இருவரும்

அரன் அருளாலே ஆயுசோடிரு !

முருகனார்

பணங் கிடைத்ததா ?

ஜோதி

பாதி கிடைத்தது.

வீட்டுப் பாடம் விரும்பிக் கற்கும்
புதுத்தெரு மாணவர் புரிந்த வுதவி !
இன்னும் வேண்டும் இருபது ரூபாய்.

முருகனார்

என்ன செய்வோம் ? இருப்பதோர் தோட்டம்;
காய்கனி மலர்கள் கடையில் விற்றும்,
செந்தமிழ் வாணி தந்ததைக் கொண்டும்,
சிவனையே நம்பித் தினமும் வாழ்வோம்.
அவனே இன்றும் அருந்துணை தருவான்.

மங்களம்

[இரகசியமாக வள்ளியிடம்
தன் வைரமோதிரத்தைக்
கழற்றித் தந்து]

கவலையில்லை ; கைமேல் பணம்வரும்.
தோழீ யெனக்கொரு துணைசெய வேண்டும்!

வள்ளி

நாளைக் காலை நடப்பது நடக்கும்.

ஜோதி

[சட்டையைக் கழற்றி மாட்டி, உடம்பு சுத்தம் செய்து, திருநீறு பூசிவந்து]

நீறு பூசி நிமலனை நினைப்போம்,
ஆறுதல் அளிக்கும் அப்பன் அவனே !

[மங்களம், வள்ளி, இசைபயிலும்பெண்கள் ஆகியோர் வருகின்றனர். தம்புரா, பிடில், குழல், யாழ், மத்தளம், தாளங்களுடன் எல்லாரும் வட்டமாய் வில்வ மாத்தடியில் சிவன்முன் அமர்கின்றனர்.]

முருகனர்

போற்றி செய்வோம் புனிதனை, அன்பீர் !

பாட்டி

மனங் குவிந்து, மாசறு தொண்டர்
அன்பால் உருகி, இன்பக் கடவுளைப்
பாடி யாடிப் பரவச மாவார்.

[முருகன், வள்ளி, ஜோதி மூவரும் ஓர் அடி பாடியதும், எல்லோரும் அதையே திரும்பப்பாடுதல். அவ்வாறே பாட்டுமுழுதும்.]

(பண்-காந்தார பஞ்சமம்—நீலாம்பரி)
("சொற்றுணை வேதியன்" என்னும் பதிகம்போல)

சிவமயம் என்றிடிற் சிந்தனைக் கமுதமாம்
தவசா தனமெலாம் தந்திடு மந்திரம்
அவனருள் வேண்டினர் யாதுங் குறைவிலார்
சிவாய நமவெனும் செல்வமெஞ் செல்வமே !

இன்ப மவன்பெயர், இன்ப மவன்பொருள் !
இன்பமே அவனுரு ; இன்பமே அவனும் !
இன்பமே அவன்வினை யாமிவ் வுலகெலாம் !
இன்பமே திருவடி நடஞ்செய்யும் இதயமே !

குஞ்சித பாதத்தை நெஞ்சினில் ஊன்றுவோம் !
அஞ்சலி தந்தருள் அப்பனை நம்புவோம் !
வஞ்சமில் வாக்கினால் சிவவென வழுத்துவோம் !
தஞ்சம் புகுந்தவர் தம்பிரா னவனே !

[முருகனர் சிவலிங்கத்திற்குத் தீபாராதனை காட்டல்]

எல்லாரும்

தனிப்பெருங் கருணைத் தந்தையே போற்றி !
இறைவா போற்றி, என்னவா போற்றி !
மறைமுடி காணு வாய்மையே போற்றி
பெரிதிற் பெரிய பெரியனே யுனது
திருவடி யல்லது மறுதுணை யில்லேன்,
காப்பதுன் பாரம் கழலிலைக் காளேன் !
சிவனே போற்றி திருவருள் போற்றி !

[எல்லாரும் வணங்கல். முருகனர் திருநீறளித்தல்.]

முருகனர்

உள்ளத் துள்ளே உயிர்க்கும் சிவனை
மறவா திருப்போம், பிறவா நெறியாம் ;
சிவோஹம், சிவோஹம் ! சிவயம் சிவமயம் !

பாட்டி

சிவோஹம், சிவமயம் ! சிவாய நம ஓம் !
மங்களம் செல்வோம் ; நாளை வருவோம் !

மங்களம்

[வள்ளியிடம் தனித்து]

பணம்வரும் நாளை; பரீட்சையும் தேறும்;
அண்ணலுக் கியம்பென், அமுதத் தோழீ !

[எல்லாரும் செல்லல்]

முதல் அங்கம் முற்றிற்று

——:o:——

அடுத்த இதழில்
இரண்டாம் அங்கம் முதற் காட்சி
அமெரிக்க மிஷன் கல்லூரி ஹாஸ்டல்

(1) பரீட்சை முடிந்தபின், ஜோதியும் கண்ணனும் தமிழ் தமிழர் நிலைமை, நாட்டு நிலைமை தமது கடமை முதலியவற்றைக் குறித்துப் பேசல். (2) பொன்னுவும் அண்ணுவியும் தில்லானுப் பேச்சுப் பேசி வருதல்; கிண்டல் செய்தல் (3) ஜோதியின் அறிவுரை. மாணவர் ஒழுக்கம், தமிழின் பெருமை, தமிழின் தன்மை முதலியவற்றைக் குறித்துப் பேசல். (4) பொன்னுவின் கேலி ; அண்ணுவியின் நட்சத்திரப் புராணம்.

இரண்டாங் காட்சி

(1) முல்லை விலாசம். மின்சார வீச்சு. (2) அண்ணுலி முல்லையுடன் உல்லாசமாகப் பேசல். (3) பொன்னு வருதல். (4) பாட்டு, நடனம், பணச்செலவு, போலிக் காதல். (5) முல்லையின் மிதமிஞ்சிய தளுக்கும், ஆசை வார்த்தையும். (6) அண்ணுவியின் இந்திர ஜாலம்.

டென்மார்க்—நார்வே

(ஸ்ரீ. ஏ. கே. செட்டியார்)

டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பின்லந்து முதலிய நாடுகள் ஸ்காண்டிநேவியா என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. இந்த நாட்டு மக்கள் எல்லோருமே நல்லவர்கள்; கஷ்டப்பட்டு உழைப்பவர்கள்; அன்பும் அனுதாபமும் உடையவர்கள்; ஏகாதிபத்தியப் பைத்தியம் பிடிக்காதவர்கள்; சமாதானத்தையும் முன்னேற்றத்தையும் விரும்புபவர்கள்; நடு நிலைமை வகிப்பவர்கள். துரதிர்ஷ்டவசமாக இந்த நாடுகள் தற்பொழுது நடைபெற்று வரும் கொடிய யுத்தத்திலே பல துன்பங்களை அனுபவிக்கின்றன. பின்லந்தின் கதி ஒருவிதமாக முடிந்தது. பாவம், டென்மார்க்கும் நார்வேயும் தத்தளிக்கின்றன!

சென்ற வருஷம் ஜூன் மாதம் முதல் வாரத்தில் பர்லினிலிருந்து ஒரு ஸ்வீடிஷ் ஆகாய விமானத்தில், டென்மார்க்கின் தலைநகரான கோப்பன்ஹேகனை அடைந்தேன். என் நண்பர் ஒருவரும் அவருடைய மனைவியும் என்னை அன்புடன் வரவேற்றுத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். "பாவம், நீங்கள் பர்லினிலிருந்து வருகின்றீர்கள். அங்கு எத்தனை நாள் வயிறார உணவு கிடைக்காமல் சிரமப்பட்டீர்களோ, இங்கு வேண்டியமட்டும் நன்றாகச் சாப்பிடுங்கள்!" என்றாள் என் நண்பரின் மனைவி. அவள் கூறியது மிகவும் சரி. ஜெர்மனியில் தங்கியிருந்த நான்கு தினங்களில் அரைப்பட்டினியாக இருந்தேன் என்பது உண்மை. யாத்திரை வாசியான எனது நிலைமையே இப்படியிருந்தால், அந்நாட்டிலுள்ள சாதாரண மக்களின் நிலைமை எப்படியிருந்திருக்கும்? ஹிட்லரின் புதிய திட்டங்களின் பயனாக ஜெர்மனியில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது.

டென்மார்க் அரசர்: கிரிஸ்டியான்

உலகத்திலுள்ள மிக அருமையான உணவுகளிலே, டேனிஷ்காரர் உணவும் ஒன்று. இவர்கள் தயாரிக்கும் 'சாஸ்' (Sauce) மிகவும் ருசியானது; உலகப்பிரசித்தி பெற்றது. டேனிஷ்காரர்கள் ஒரு ஜாடி நிறையுள்ள 'சூப்' குடிப்பார்கள். ஒருநாள் ஐந்தாறு ஜெர்மன் மாலுமிகள் கோப்பன்ஹேகனிலுள்ள ஒரு ஹோட்டலில் நுழைந்து சாப்பிட்டார்கள். பசியின் மிகுதியால், அந்த ஹோட்டலில் பெரும் சட்டியிலிருந்த 'சூப்' முழுவதையும் குடித்து விட்டார்கள். அன்று மாலைப் பத்திரிகையில் 'மரியாதை தெரியாத அன்னியர்கள்' என்ற தலைப்பின் கீழ் இச்செய்தி வெளியாயிற்று.

கோப்பன்ஹேகனில் சர்வ தேசவியாபார சங்கத்தின் இருபதாவது மகாநாடு நடை

பெற்றது. பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் பிரதிநிதியாக அதிற் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. சுமார் 50 தேசங்களிலிருந்து 1000-க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். டேனிஷ் மக்கள் காட்டிய அன்பையும், ராஜ உபசாரத்தையும் யாரும் எளிதில் மறக்கமுடியாது.

டென்மார்க்கை நினைக்கும் பொழுதெல்லாம், அதன் அரசர் கிரிஸ்டியான் ஞாபகம்தான் வருகிறது. மிகவும் நல்லவரான வயது முதிர்ந்த இவ்வரசர் தமது அரண்மனையில், மகாநாட்டுப் பிரதிநிதிகட்கும், பிரதிநிதிகளுடன் கூடவந்த குடும்பத்தினர்க்கும் ஒரு தேநீர் விருந்தளித்தார். அன்றுதினம் அவர், பாவம் இரண்டாயிரம் பேர்களுடன் கைகுலுக்க வேண்டியதாயிற்று.

டென்மார்க் அரசர் முற்போக்கான ஜனநாயகக்கொள்கை உடையவர்; ஆடம்பரமில்லாதவர்; காட்சிக்கு மிக எளிமையானவர். காலையில் ஒரு குதிரை மீதேறி உலாவச் செல்வார். சாலைகளில் சிவப்புவிளக்கு எரிந்தால் குதிரையை நிறுத்திவிட்டுக் காத்திருப்பார்; பச்சை விளக்கைக் கண்டவுடன் தான் செல்வார்; டேனிஷ் மக்கள் இவ்வுயர்ந்த மன்னரைத் தங்கள் உயிருக்குயிராக நேசிக்கின்றனர்.

கோப்பன்ஹேகன் உலகத்திலுள்ள மிக அழகான நகரங்களுள் ஒன்று. இவ்வூரை கோப்பன்ஹாவன் என்று டேனிஷ்காரர்கள் அழைக்கின்றனர். பழமையான கட்டிடங்களும், மிகவும் நாகரிகமான புத்தப்புதிய கட்டிடங்களும் இந்நகரை அலங்கரிக்கின்றன. மாலை வேளைகளில் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும், வேலைகளை முடித்துவிட்டு சைக்கிள்களில் வீடுதிரும்பும் காட்சி மிக அழகாயிருக்கும். உடற்பயிற்சி செய்வதில் டேனிஷ்காரர்கள் மிகவும் விருப்பமுள்ளவர்கள். நாடு முழுதும் ஏராளமான உடற்பயிற்சி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து ஏராளமானவர்கள் இங்கு உடற்பயிற்சி பெறுவதற்காக வருகின்றனர்.

கோப்பன் ஹேகன் நல்ல வியாபாரஸ்தலம். வருடந்தோறும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் இங்கு வருகின்றனர். கோப்பன் ஹேகன் துறைமுகத்தில் பல நாட்டுக்கப்பல்கள் தங்கும். டென்மார்க்கின் முக்கிய பொருள்களான பால், வெண்ணெய் முதலியவைகள் இத் துறைமுகத்திலிருந்து, டேனிஷ்கப்பல்கள் மூலம்உலகத்தின் பல பாகங்கட்கும் அனுப்பப் படுகின்றன.

அழகும் அமைதியும் நிறைந்த கோப்பன்ஹேகன் இப்பொழுது ஜெர்மானியர் வசமாயிற்று என்பதை நினைக்கும்பொழுது மிக வருத்தமாக இருக்கிறது.

கோப்பன் ஹேகனிலிருந்து நார்வேயின் தலைநகரான ஓஸ்லோவிற்குச் சென்றேன். (மேலட்டைப் படம் பார்க்க). அங்குஇந்திய நண்பர்கள் சங்கம் என ஒரு ஸ்தாபனம் இருக்கின்றது. இந்த ஸ்தாபனத்தின் காரியதரிசி மிஸ் ஹீபர் அன்புடன் வரவேற்றார். நார்வேயில் மிகப் பிரசித்திபெற்ற சங்கீத வித்வானும், புத்தக ஆசிரியையுமான ஸ்ரீமதி **பொக்கன் லாஸன்** அம்மையாரின் விருந்தினளாகத் தங்கும் பாக்கியம் கிடைத்தது.

ஸ்ரீமதி பொக்கன் லாஸன் இந்தியாவினிடத்தும் காந்தியடிகளிடத்தும் மாறாத அன்பு கொண்டவர். சென்ற சத்தியாக்கிரகப் போர் சமயத்தில் இந்தியாவிற்கு வந்து சில மாதங்கள் தங்கினார். தமது யாத்திரையைப்பற்றி நார்வீஜிய பாஷையில் சிறந்த நூலொன்று வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீமதி பொக்கன் லாஸன் ஓஸ்லோவின் அழகையும் அதன் சுற்றுப்புறக் காட்சிகளையும் காண்பித்தார்.

பம்பாயிலுள்ள நார்வீஜிய ஸ்தானிகரின் மனைவி அப்பொழுது ஓஸ்லோவில் இருந்தார். இந்தியர் ஒருவர் ஓஸ்லோவுக்கு வந்திருக்கிறார் என்று தெரிந்து விருந்துக் கழைத்தார். அவர் வீட்டிற்குச் சென்றபொழுது அவ்வம்மையார் இராமாயணம் மகாபாரதம் முதலியவைகளைப்பற்றிப் புராணப் பிரசங்கம் செய்தது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்த வீட்டு வேலைக்காரிக்கு, நார்வீஜிய நாட்டு முறையில் உடையணிந்து பரிமாறும்படி கட்டளையிட்டிருந்தாள்.

விருந்துகள் முடிந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்த பொழுது கிறிஸ்டியான்சுண்ட் (Kristiansund) எனும் ஊரிலிருந்து எனது நண்பர் ஜான் ஹோம் டெலிபோன் செய்தார். மறுநாள் காலை ஓஸ்லோவிலிருந்து ரயில் - மோட்டார் - கப்பல் - முதலியவைகளின் உதவியால் கிறிஸ்டியான்சுண்டை அடைந்தேன். இவ்வழகிய சிறு ஊர் ஓஸ்லோவுக்கு வடக்கே வெகு தூரத்திலிருக்கிறது.

துறைமுகத்திற்கு எனது நண்பரும் அவர் மனைவியும் இரண்டு பத்திரிகை நிருபர்களும் வந்

திருந்தனர். சரியாக ஆங்கிலம் தெரியாத பத்திரிகை நிருபர்களிடமிருந்து தப்புவது பெருங் கடினமாகிவிட்டது. நான் கூற வேண்டியவைகளை யெல்லாம் டைப் செய்து அன்று மாலை இப் பத்திரிகைகளுக்கு அனுப்பினேன். மறுநாள் காலையில் பத்திரிகைகளில் பலதலைப்புகளுடன் இச்செய்தி வெளியாயிற்று. இந்தியாவைப்பற்றியும் காந்தியடிகளைப் பற்றியும் தெரிந்துகொள்வதில் நார்வீஜியர்களுக்கு அதிகமான ஆவல் இருக்கிறது.

அந்த அழகிய சிறு ஊரில் நான்கு தினங்கள் தங்கியிருந்தேன். எனது நண்பருடைய மனைவியோடு நான் கடைத் தெருவுக்குச் செல்லும்போதெல்லாம், வீதியிற் செல்லும் எல்லோரும் உற்றுப்பார்ப்பார்கள்.

அபூர்வமாக அந்த ஊருக்கு விஜயம் செய்த ஒரு இந்தியனுக்காக ஏற்பாடு செய்த சிறு விருந்தில் நார்வீஜிய வாலிபர்களும் பெண்களும் மிகஉற்சாகத்தோடு பேசி, பல சிறிய பொருள்களைப் பரிசாக அளித்தனர்.

கிறிஸ்டியான்சுண்டிலிருந்து ஒஸ்லோவுக்குப் புறப்பட்ட சமயத்தில், நான் வந்த ரயில் பாதை வெள்ளத்தால் சேதமடைந்து விட்டதென்றும், அப்பாதையைச் செப்பனிடச் சுமார் மூன்று நாட்களாகும் என்றும் தகவல் கிடைத்தது. எனவே, ட்ரோண்ட்ஜெம் என்ற ஊருக்குக்கப்பலில்வந்து, பிறகு ரயிலில் ஒஸ்லோ திரும்பினேன்.

நார்வேக் குழந்தைகள்

இந்த ட்ரோண்ட்ஜெம் என்ற ஊர்தான் சமீபத்தில் ஜெர்மன் காரர்களால் கைப்பற்றப்பட்டது. ட்ரோண்ட்ஜெத்துக்கு அருகாமையில் வரும்பொழுது நள்ளிரவுச் சூரியனை (Mid-night Sun) தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நார்வேயின் வடக்குப் பகுதியில் ஜூன் 24ந்தேதியன்று சூரியன் அஸ்தமிப்பதேயில்லை. 24 மணி நேரமும் சூரியனைப் பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் ட்ரோண்ட்ஜெத்தில் இரவு 12மணிவரை சூரியனைப் பார்க்கலாம். பிறகு சிறிது மங்கலாக இருக்கும். இந்த வெளிச்சத்தில் மற்றவர்களை நாம் பார்க்கலாம், படிக்கலாம், எழுதலாம். மறுபடியும் 12 மணி ஆன சில நிமிஷங்கட்கெல்லாம் சூரியன் உதயமாகிவிடும். நார்வே நாட்டுக்கு இது ஒரு சிறப்பு. இத்தகைய சிறப்பு வாய்ந்த நார்வேயின் பெயர்தான் தினந்தோறும் யுத்தச் செய்திகளில் அடிபடுகிறது.

பொருளின்றி இல்லறம் பொலியுமா?

(ஸ்ரீ. கு. மதுரை முதலியார்)

உலகிடை இல்லறத்தை மேற்கொண்டொழுகும் பெருமக்களுக்குப் பொருள் இன்றியமையாதது என்பதை யாரே மறுக்கவல்லார்? பொருள் இல்லார்க்கு இவ்வுலக இன்பமேயில்லையென்றார் பொய்யாமொழியார். அவ்வின்பம் ஈத்துவக்கும் இன்பமே என்பது அப்பெரியாரின் கருத்து. திருவள்ளுவர் இல்லற இயலில் பகுத்துண்ணும் வாழ்க்கையையே பரக்கக் கூறியுள்ளார்; அதனையே இல்லறத்தின் பயன் என அறுதியிடுகின்றார்.

வையத்துள் இல்லறமாகிய நல்லறத்தில் நின்று வாழ்வாங்கு வாழ எண்ணும் ஒவ்வொரு தமிழரும் பொருளை நன்னெறியில் ஈட்டத் தம் இன்னுயிரனைய மனைவிமாரையும் விட்டுப் பிரிதல் அன்னார் தொன்றுதொட்டு மேற்கொண்டொழுகும் ஓர் ஒழுக்கமாம். இவ்வொழுக்கத்தினை அகப்பொருள், பாலையொழுக்கம் எனப்படும். இப்பாலை யொழுக்கத்தினை விளக்கிக் காட்டும் தீந்தமிழ்ப் பாடல்களை ஓதியுணரின் கருங்கல் மனமும் கரைந்துருகும்.

ஒருநாள் பேரறிவு படைத்த ஒரு தோழி தன் ஆருயிரன்ன தலைவியை நோக்கி, "நங்காய், அன்பின் வடிவாய் இலகும் உன் அருமைக் கணவன் இல்லறத்தைச் செவ்வனே நடத்தி, அறப்பெரும் பயனைப் பெறுவான் எண்ணி நின்னையும் துறக்கத் துணிந்தனன். அக்காலை நான் நின்னுடைய நல்லியல்புகளை யெல்லாம் எடுத்துக் கூறி அவன் உன்னைவிட்டுப் பிரியாவண்ணம் செய்தேன்" என்று மலர்ந்த முகத்துடன் கூறினாள். அந்நற்செய்தியைக் கேட்ட தலைவி கழிபேருவகை பூத்து, 'அறிவுசால் அணங்கே, என் ஆருயிர்க் கொழுநரது பிரிவுசால் உளத்தை நீ எங்ஙனம் மாற்றினாய்? உனது அறிவின் திறனைக் காணப் பெரிதும் அவாவுகின்றேன். நீ என் தலைவனோடு உரையாடியதைச் சிறிதும் மறைக்காது என்னிடம் கூறு!" என்று வேண்டினாள். தோழி தலைவியின் வேண்டுகோளுக் கிணங்கிக் கூறுவதைக் கீழே படித்தின்புறுவோம்.

பேரறிவும் பேரெழிலும் பெருங்குணமும் ஒருங்கே வாய்ந்த தலைவன் தோழியிடம் பொருளின்மையது இழிவு கூறி, இல்லறம் ஆற்றுதற்குப் பொருள் காரணமாகப் பிரிவேன் என்றபொழுது, அவள் அத்தலைவனை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றாள்.

"ஐய, தேவர்களின் வேண்டுகோளால், அவுணரது மூன்று மதில்களையும் முக்கண்ணன் சினந்தபொழுது, அத்தேவனது முகம் எவ்வாறு அம்மூன்று மதில்களையும் எரித்தனவோ, அவ்வாறே ஒள்ளிய ஞாயிறு எல்லாப் பொருள்களையும் எரித்தலால், அம்மதில்கள் எவ்வாறு அழிந்து உதிர்ந்தனவோ, அவ்வாறே மலைகள் பிளக்கப்பெற்று வீழ்ந்து குறுக்கிட்டுக் கிடக்கும் வெம்மை மிக்க வழியிடையே, உன்னையே எப்பொழுதும் நினைந்து உன்பால் பெருங்காதல் கொண்டுள்ள தலைவியைப் பிரிந்து செல்லத் துணிந்தாய். அங்ஙனம் துணிந்துள்ள நீ யான் கூறுவதைக் கேட்கச் சிறிது செவிசாய்த்தருள்க:—

உள்ள பொருளை யெல்லாம் இல்லை யென்று வந்து கேட்ட இரவலர்க்குக் கொடுத்தொழித்து என்பால் வந்திரப்போர்க்கு இல்லை யென்று சொல்லுவதினும் இழிந்தசெயல் வேறில்லை எனக் கூறி மலைகடந்து போய் நீ தேடக்கருதும் பொருள் பொருளாகுமோ? நான் இவ்வாறு கூறுதற்குக் காரணமும் கேளாய். உன் இல்லக்கிழத்தி கற்பிற்சிறந்த காரிகை; நீயே அம்மாதரசியின் இன்னுயிர். அத்தகையாள் நின்னைப் பிரிந்து வாழாள். பொருளீட்டி வந்த பின்னர் அவளையிழந்த நீ எங்ஙனம் இல்லறம் ஆற்றுவாய்? ஆகையால் உன் மனைவியின் மார்பைப் பிரியாது வாழ்தலே பொருள்.

இன்னும் கேளாய், 'எக்காலும் பொருளில்லாது வாடுகின்றோம்' என்று கூறிவந்து இரப்பார்க்குச் சிறிதும் கொடாதிருத்தல் இழிவென்று கூறி மலைகடந்துபோய் நீ தேடக்கருதின பொருள் பொருளாகுமா? பழைமையாய்த் தொடர்ந்துவரும் அன்பு எப்பொழுதும் நீங்காது எனக் கருதி உன்னை வாழ்க்கைத் துணையெனக் கொண்டு கூடினவளுடைய மார்பைப் பிரியாது வாழ்தலே பொருளாகும்.

மேலும் கேளாய், "இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் இல்லை" என்று வந்து இரப்போர்க்குச் சிறிதும் கொடாதிருத்தல் இழிவெனக் கூறிக் காட்டைக் கடந்துபோய் நீ தேடக்கருதின பொருள் பொருளாகுமோ? எல்லாரும் தொழுது வாழ்த்துதற்குரிய வடமீன்போன்று கற்பிற்சிறந்து விளங்கும் நின் இல்லாளின் தடமென்றோள் பிரியாது வாழ்தலே பொருளாம். உன்

(ககo-பக்கம் பார்க்க)

பூகோளம்

திங்கள்

(தினகரன்)

திங்கள் பூமியின் **துணைக்கோள்** (உபக்கிரகம் = Satellite). பூமிக்கும் திங்களுக்கும் **2,39,000** மைல் தூரம் உள்ளது. இது பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தில் $\frac{1}{388}$ பங்காகும். திங்களின் குறுக்களவு 2160 மைல்—பூமியின் குறுக்களவில் ஆறிலொரு பங்கு. பூமியின் கனத்தில் திங்கள் $\frac{1}{49}$ பங்குள்ளது. பூமியில் 1000 பலம் உள்ள ஒரு சாமானைத் திங்களில் நிறுத்தால் அது **170** பலந்தான் இருக்கும். தொலைநோக்கியால் சோதித்தால் திங்களின் பரப்பு கரடுமுரடான மலைகளும், கணவாய்களும் எரிமலைகளுமாகக் காணும். சில எரிமலைகள் அவிந்துள்ளன. அதில் 25,000 அடி உயரமுள்ள மலைகளும் உண்டு. பூமியைவிடத் திங்களில் **15** பங்கு இரவு அதிகம். அங்கே தாங்கமுடியாத குளிர்—உயிர்கள் இருக்க முடியாது. அங்கும் சில உயிர்கள் இருந்ததாகத் தெரிகிறது. இன்று அவையில்லை.

சந்திரன் கிழக்குமேற்காகப் பூமியை 29 நாள் 53 நிமிஷத்தில் சுற்றி வரும். சுமார் 15 நாள் பூமியின் ஒருபுறமும், 15 நாள் மறுபுறமும் அது நிலவும். சந்திரன் மேல்கிழக்காகவும் சுற்றும். இது முன்னே சொன்ன விண்மீன்களுக்கிடையே செல்லுகிறது. தினசரி 48 நிமிஷம் முன்னே, பின்னே எழுகின்றது. தினம் ஒரு நக்ஷத்திரத்தில் சந்திரன் உதிக்கும். இன்று **உத்திரத்தில்** உதித்தால் மீண்டும் அதே நக்ஷத்தில் சந்திரன் உதிக்க 27 நாட்களாகும். பூமியைச் சுற்றிச் சந்திரன் செல்லும் வழியை **மதி வழி** (Path of the Moon) என்போம்; சூரியனைப் பூமி சுற்றிவரும் வழியைப் **பூவழி** (Orbit of Earth) என்போம். இவ்வழிகள் **ஓரியவட்டமாம்** (Oval). இரண்டு வழிகளும் சேருமிடம் ‘**சந்தி**’ (Nodal point) என்போம். **மதிவழி பூவழி**யினின்றும் 5° °(= கூறு = Degree) சாய்ந்திருக்கிறது. மதி வழியில் சூரியனுக்கும் பூமிக்கும் நடுவேயிருந்தால் திங்கள் சூரியப் பார்வையிலிருக்கும். இரண்டிற்கும் இடையே பூமிவந்தால் சந்திரன் சூரியனுக்குப் பின்னே இருக்கும். சூரியனாலே திங்கள் நிலவுகிறது. பூமி அதை மறைத்து நிழலாக்குகிறது; எந்தப் பாகத்தில் சூரிய வெளிச்சம் படும்படி பூமி விடுகிறதோ அந்தப்பாகமே ஒளிரும்; நமக்குத் தெரியும். மாதம் ஒரு முறையே முழுமதி காணலாம்.

சில நாட்கள் விடிந்து வெகுநேரம் திங்களைக் காண்போம்; சில நாட்கள் மாலை நான்கு மணிக்கே திங்கள் வரக் காண்போம். திங்கள்—இரவி—இரண்டின் எழுச்சிகளுக்கும் ஓர் உறவுண்டு. அதை விளக்குவோம்:

இன்று பௌர்ணமி; சூரியன் அஸ்தமித்து 12 மணிநேரத்திற்குப் பிறகு சந்திரன் அஸ்தமிக்கும், பார்! அது கீழுலகில் 12 மணிநேரம் நிலவி, சூரியன் அஸ்தமித்ததும் கிழக்கே நமக்குத் தோன்றும். கவனி! சந்திரன் 15 நாட்களில் 12 மணிநேரம் நிலவும் நிலைக்கு வரவேண்டுமானால் ஒரு நாளைக்கு $12 \times 60 \div 15 = 48$ நிமிஷங்கள் முன்னே உதிக்கவேண்டும். நிலாக் காலங்களில் சந்திரன் முன்னே உதிக்கும்; அப்போது ஒவ்வொரு நாளும் சுமார் சிறிது சிறிது உயரமாக உதிக்கும். சந்திரன் 48 நிமிஷம் முன்னே முன்னே உதிப்பது வளர்ச்சிநாள்; அதை **வளர்பிறை** நாள் அல்லது **சுக்கில பட்சம்** என்பர். சந்திரன் 48 நிமிஷம் பின்னே பின்னே உதிக்கும் நாட்களில் தேய்ந்து வரும்; அவற்றிற்குத் **தேய்பிறை** நாள் அல்லது **கிருஷ்ண பட்சம்** என்பர் (கிருஷ்ண = இருட்டு, கறுப்பு). வளர்பிறை முன்நிலாக்காலம். தேய்பிறை முன்னிருட்டுக் காலம். பௌர்ணமிக்கு அடுத்த நாள் முதல் 48 நிமிஷம் பின்னேபின்னே எழுந்து 15-வது நாள் அதாவது அமாவாசையன்று சந்திரன் சூரியனுடன் எழுந்து சூரியனுடனே அஸ்தமித்துவிடும். ஆதலால் இரவில் நமக்கு நிலாவே இராது; இருட்டு கும்மென்றிருக்கும். நமது முன்னோர்கள் வானுக்கும் பூமிக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்தனர். பஞ்சாங்கம் கணித்தனர். திதி, வார, நக்ஷத்திரம், பக்ஷம், லக்னம், யோகம் இவை பார்த்தே அவர்கள் சுபகாரியங்களைத் தொடங்குவர். ஐரோப்பா, ஜப்பான், சீனா, எங்கும் சோதிடத்திற்குச் செல்வாக்குண்டு. கிரக பலன்களைப் பலர் நம்புவர். நாம் ஏகாதசியன்று விரத மிருக்கவேண்டும். பட்சம் ஒரு நாள் பட்டினியிருந்தால் ஜீரணக் கருவிகள் ஓய்வு பெறும்; இரத்த சுத்தியாகும், மூளை தெளியும், நோய்கள் ஒழியும், உடலுக்கு நல்லது; அது காயப்போட்டு உழும் வயல் போலச் செழிக்கும். அமாவாசை யன்றும் நம்மவர் விரதம் அனுட்டிப்பார்.

கண்மணி, நீ ஒரு மாதம் சந்திரனைப் பார்த்து வரவேண்டும்; மடியிலிருந்து இவ்வாறு குறிப்பெழுதிப் பார். சுக்லபட்சம்=வளர்பிறை; கிருஷ்ணபட்சம்=தேய்பிறை. பிரதமை=முதல் பிறை நாள்; த்விதியை = இரண்டாம் பிறை நாள்; திரிதியை=மூன்றும் பிறைநாள்.

பிறைக் குறிப்பு (Chart of the phases of the Moon)

பிறை நாள்		திதி	திங்கள் உதயம்	அஸ்தமனம்	கூறு Degree	திங்கள் வடிவம்	குறிப்புகள்
வளர்பிறை (சுக்லபக்ஷம்) ||	1	பிரதமை					
	2	த்விதியை					
	3	திரிதியை					
	4	சதுர்த்தி					
	5	பஞ்சமி					
	6	ஷஷ்டி					
	7	சப்தமி					
	8	அஷ்டமி					
	9	நவமி					
	10	தசமி					
	11	ஏகாதசி					
	12	துவாதசி					
	13	திரையோதசி					
	14	சதுர்த்தசி					
	15	பௌர்ணமி					

(கஅஅ-பக்கத் தொடர்ச்சி)

மனைவி பொலிவழிந்து வருந்த நீ பொருள்காரணமாக அக்கற்பரசியை விட்டுப் பிரிதல் அன்பன்று."

பின்னும் அத்தோழி தலைவியை நோக்கி, "பெண் அணங்கே! நான் இங்ஙனம் உன் தலைவன் மனம் உருகும் வண்ணம் கூறியஞான்று அவ்வன்பன், பரிக்கோலால் குத்தவும் தன் நெறியில் நில்லாத தறுகண் யானை மெல்லிய யாழோசையின் எல்லையிலே தங்கினாற்போல, என் இன்னுரை கேட்டு, உன் இயற்கையழகு தொலைதலையும் நீ படும்பாட்டையும் உன்னி உன்னி உன்னை விட்டுப் பிரியாது தங்கினன்" என்றாள். இச்செய்தியைக் கூறும் கீழ்வரும் கலிப்பாவினைப் பன்முறை படித்து மகிழ்வோம் :—

"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய அமரர்வந் திரத்தலின்
மடங்கல்போல் சினைஇ மாயஞ்செய் அவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கால் முகம்போல வொண்கதிர் தெறுதலின்
சீறருங் கணிச்சியோன் சினவலின் அவ்வெயில்
ஏறுபெற் றுதிர்வனபோல் வரைபிளந்(து) இயங்குநல்
ஆறுகெட விலங்கிய அழலவிர் ஆரிடை
மறப்பருங் காதல் இவளீண்(டு) ஒழிய
இறப்பத் துணிந்தனிர் கேண்மின்மற்(று) ஐயே:
தொலைவாகி யிரந்தோர்க்கொன்(று)ஈயாமை யிழிவென
மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
நிலைஇய கற்பினாள் நீநீப்பின் வாழாதாள்
முலையாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;
இல்லென இரந்தோர்க்கொன்(று) ஈயாமை யிழிவெனக்
கல்லிறந்து செயல்சூழ்ந்த பொருள்பொரு ளாகுமோ
தொல்லியல் வழாஅமைத் துணையெனப் புணர்ந்தவள்
புல்லாகம் பிரியாமை பொருளாயின் அல்லதை;
இடனின்றி யிரந்தோர்க்கொன்(று) ஈயாமை
யிழிவெனக்
கடனிறந்து செயல்சூழ்ந்த பொருள் பொருளாகுமோ
வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்
தடமென்தோள் பிரியாதாம் பொருளாயின் அல்லதை;

என இவள்

புன்கண்கொண்டு இனையவும் பொருள்வயின் அகறல்
அன்பன்(று) என்றியான் கூற அன்புற்றுக்
காழ்வரை நில்லாக் கடுங்களிற்(று) ஒருத்தல்
யாழ்வரைத் தங்கி யாங்குத் தாழ்புநின்
தொல்கவின் தொலைதல், அஞ் சியென்
சொல்வரைத் தங்கினர் காத லோரே.

புதிய தமிழ் இலக்கணம்

15. மொழிமுதல் எழுத்துக்கள்

பாப்பா, தமிழ் எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சொல்ல வேண்டும். ஒவ்வொரு எழுத்தையும் முதலில் வைத்து ஒரு வார்த்தை சொல்ல வேண்டும். எங்கே பார்க்கலாம். உயிரெழுத்தை வைத்து வார்த்தை சொல்லுகிறாய்....மெய்யெழுத்து முதலில் வராது; உயிர்மெய்யெழுத்திலும் க, ச, த, ந, ப, ம, வ, ய, ஞ, ங, ஆகிய பத்தெழுத்தும் முதலில் வரும். ஆனால் இந்தக் காலம் டப்பி, டங்கா, டமாரம், லவணம், ராமன், ழாந்தார்க், என்று அன்னிய மொழிகளை எழுதுகின்றனர். தமிழுக்குத்தான் இப்போது சொல்வது. மேலே சொன்ன 10 உயிர்மெய் எழுத்திலும் க ச த ந ப ம ஆகிய ஆறுமே எல்லா உயிருடனும் வரும். உ ஊ ஒ ஓ இவற்றுடன் வ சேர்ந்து முதலில் வராது; ஏன்? அவற்றிற்கு உயிரெழுத்தே போதும். ஓசை ஒன்றுதான். ஓடு என்பதை **வோடு** என்று யாரும் எழுதமாட்டார்கள். அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ, இந்த எட்டு உயிரெழுத்துடனே கூடித்தான் வகரம் முதலில் வரும்.

(2) அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ இவற்றுடனேதான் யகரம் முதலில் வரும்.

(3) அ, ஆ, எ, ஒ என்ற நான்கெழுத்துடன் ஞகரம் முதலில் வரும். மிஞிறு ஞிமிறு என்று வழங்குவதால் இகரமும் சேரும் என்பர்.

(4) அ, இ, உ என்ற சுட்டெழுத்திற்குப் பின்னால் (அங்ஙனம், இங்ஙனம்) எ, யா என்னும் வினாவெழுத்துக்குப் பின்னே (எங்ஙனம், யாங்ஙனம்) அகரத்துடன் கூடி ஙகரம் வரும்.

இப்போது தெளிவாக முதல் எழுத்துக்களைக் குறிக்கிறேன் கவனி:—

மொழிமுதல் எழுத்துக்கள்

உயிர் 12	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
	அன்னை	ஆண்	இறை	ஈகை	உண்	ஊர்
க	கடவுள்	காது	கிளி	கீற்று	குடை	கூறு
ச	சரி	சாமி	சிரி	சீர்	சுடு	சூடு
த	தமிழ்	தாய்	திசை	தீனி	துளி	தூணி
ந	நலம்	நாடு	நினை	நீடு	நுனி	நூல்
ப	பரிதி	பார்	பிடி	பீடு	புள்	பூனை
ம	மனை	மாலை	மின்	மீது	முள்	மூடு
வ	வளை	வாள்	விடு	வீடு	,,	,,
ய	யவனர்	யானை	யுகம்	யூகம்	,,	,,
ஞ	ஞமலி	ஞாலம்	ஞிமிறு, (போலி)	,,	,,	,,
ங	அங்ஙனம்	யாங்ஙனம்	இங்ஙனம்	,,	உங்ஙனம்	,,

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
என்	ஏன் ?	ஐந்து	ஒடி	ஓடு	ஔவை
கெடு	கேள்	கையன்	கொடி	கோடு	கௌவு
செடி	சேர்	சைவம்	சொல்	சோறு	சௌரியம்
தெரு	தேர்	தையல்	தொடு	தோடு	தௌவை
நெஞ்சு	நேரம்	நைதல்	நொடி	நோவு	நௌவி
பெண்	பேசு	பையன்	பொறு	போர்	பௌவம்
மெலி	மேடு	மையல்	மொழி	மோனே	மௌனம்
வெளி	வேல்	வைரம்	,,	,,	வௌவால்
,,	,,	,,	,,	யோகம்	யௌவனம்
ஞெகிழி	,,	,,	ஞொள்கல்	,,	,,
எங்ஙனம்	,,	,,	,,	,,	,,

உயிர்		12
கசதநபம	× 12 உயிர்	72
வ	× 8 ,,	8
ய	× 6 ,,	6
ஞ	× 4 ,,	4
ங	× 1 ,,	1
ஆக முதலில் வரும் எழுத்துக்கள்		103

பிறமொழிகளைத் தமிழில் எழுதும்போது ஃபகீர் ; ஃஜார் (cza), ழாந்தார்க், டங்கா என்று பின்னும் சில எழுத்துக்கள் முதலில் வரும்.

அடியில் வரும் கதையில் முதல் எழுத்துக் களைக் கவனி :

வீரக்கன்னிகை

ழாந்தார்க் பிரெஞ்சு தேசத்தின் வீரத்திரு. பிரான்ஸ் ஆங்கிலேயருக்கு அடிமையாகப்போகிறது. அரசன் சுத்த பயங்காளி ; ஆங்கிலேயர் முன்னேறுகின்றனர். இவன் பேடிபோல உறங்குகிறான். 'இனி நாடு பிழைக்காது' என்று பலர் மனந்தளர்ந்தனர். அப்போது ஒரு ஏழைப் பெண் வீராவேசத்துடன் அரசன் முன்வந்து "கொடு சேனே! யான் போர் புரிந்து பகைவரை ஓட்டுகிறேன்" என்றாள். மன்னன் தயங்கினான், மயங்கினான். "வீரமற்றவன் சாரமற்றவன். தா படை" என்று பெற்றுச் சென்று, **ஓர்லியன்** போரில் ஆங்கிலேயரை முறியடித்துச் சுதந்தரக் கொடி நாட்டினாள். உலகமெல்லாம் இன்று ழாந்தார்க்கை 'சுதந்தரக் கன்னி' என்று வணங்குகிறது.